# பன்முக நோக்கில்
# பெண்

உளவியல்

மார்க்சியம்

இலக்கியம்

தலித்தியம்

பெண்

உயிரியல்

குற்றவியல்

வேதம் மானுடவியல்

பெண்ணியல்

திராவிடம்

தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை - 600 059

# பன்முக நோக்கில்
# பெண்

பதிப்பாசிரியர்கள்
தி. இராசகோபாலன்
ப. டேவிட் பிரபாகர்

தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை - 600 059.

# Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the Book | : | panmuka nōkkil peṇ<br>(Woman - diverse perspectives) |
| Language | : | Tamil |
| Edition | : | First, April 1999 |
| Editors | : | Dr. T. RAJAGOPALAN,<br>P. DAVID PRABHAKAR |
| Copyright & Publisher | : | Department of Tamil,<br>Madras Christian College |
| Size of the book | : | 1/8 Demy |
| No. of copies | : | 1000 |
| No. of Pages | : | viii + 71 |
| Price | : | Rs.25 |
| Typesetters | : | Sumathi Lasers, Chennai-6 |
| Printers | : | Sundar Prints, Chennai-14.<br>Phone: 8265691, 2405238. |

டாக்டர் ம. கிளாட்ஸ்டன்
முதல்வர் & செயலர்

சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை-59.

# வாழ்த்துரை

சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையானது பெண் கல்வி மையத்துடன் இணைந்து ''பன்முக நோக்கில் பெண்'' எனும் தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் அறிஞர்கள் வழங்கிய ஆய்வுக் கருத்துக்களை வெளிக் கொண்டுவந்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இவ்விதமாக ஆய்வுக் கருத்துக்களைப் புத்தக வடிவில் வெளியிடுவது தமிழ்த்துறையினர்க்குக் கைதேர்ந்த கலையாகும். இந்தப் புத்தகமானது ஆய்வுக் கருத்துக்களின் தொகுப்பாக வெளியிடப்படும் நான்காவது நூலாகும். திராவிடக் கருத்தியலில் பெண், மரபிலக்கிய நோக்கில் பெண், தலித்தியப் பார்வையில் பெண், உளவியல் நோக்கில் பெண், உயிரியல் நோக்கில் பெண், பெண்ணிய நோக்கில் பெண், குற்றவியல் நோக்கில் பெண், மார்க்சிய நோக்கில் பெண், வேதக் கருத்தியல் நோக்கில் பெண் ஆகிய ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட இந்நூலினை மாணவர் உலகம் வரவேற்கும் என நம்புகிறேன், விரும்புகிறேன்.

தமிழ்த்துறையானது மேன்மேலும் பல கருத்தரங்குகளை நடத்தி அவற்றில் விவாதிக்கும் கருத்துக்களை நூல் வடிவில் வெளியிட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். இந்த நூலினை வெளிக்கொணர்வதற்கு நிதி உதவியினை வழங்கிய ''யுனைடெட் போர்டு ஆப் கிறிஸ்டியன் ஹையர் எஜுகேஷன்'' நிறுவனத்திற்குச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் சார்பிலும் எனது சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்த்துறை!

அன்புடன்
**ம. கிளாட்ஸ்டன்**

**Prof. (Mrs.) Achamma Mathai**
**Co-ordinator**
**Centre for Women Studies**

**Madras Christian College**
**Chennai - 600 059.**

# Foreword

The compilation of the seminar papers on "Women in diverse perspective" has a wide coverage. The articles are drawn from key areas of women's concerns during different periods of time and also as seen in a variety of ways. Women have lived in two parallel worlds ever since the first community. They have occupied positions of eminence and also have been objects of callous disregard, even of repression. This aspect is very clearly brought out in this evocative book.

We hope this book will reach out to a wider readership than the students of this college it was compiled for. And I am sure this volume will also be a source book on women's issues to researchers, teachers and scholars. in one of the most thought about concerns of our time.

**Achamma Mathai**

**தி. இராசகோபாலன்**
**தமிழ்த்துறைத் தலைவர்**
**சென்னைக் கிறித்தவக் கல்லூரி**

# பதிப்புரை

பெண் பற்றிய கருத்தாடல்கள் உலகெங்கும் நிகழ்த்தப்பட்டுவரும் இன்றைய சூழலில், பன்முக நோக்கில் பெண் பற்றிய விவாதத்தைத் தமிழில் தொடங்கி வைக்கிறது இந்நூல். தமிழ்த்துறையின் நான்காவது வெளியீடாக வரும் 'பன்முக நோக்கில் பெண்' எனும் இந்நூல், தரத்தில், கணத்தில் வீரியம் மிக்கதாய் விளங்குகின்றது.

இந்நூல் உங்கள் கரங்களில் தவழ்வதற்குக் காரணமாய் இருந்த 'யுனைடெட் போர்டு ஆப் கிறிஸ்டியன் ஹையர் எஜுகேசன்' என்ற அமைப்பிற்கும், பெண் கல்வி மைய ஒருங்கிணைப்பாளராகத் திகழும் பேராசிரியர் அச்சம்மா மத்தாய் அவர்கட்கும் தமிழ்த்துறை நெஞ்சு நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறது. சிரித்த முகத்திற்குச் சிங்காரப் பொட்டிட்டது போல், நூலிற்கு அழகான வாழ்த்துரை தந்துதவிய கல்லூரி முதல்வர் டாக்டர் எம் கிளாட்ஸ்டன் அவர்களை நோக்கியும் எங்களுடைய நன்றிக்கரங்கள் குவிகின்றன.

ஆய்வரங்கில் கட்டுரை வழங்கிய ஆய்வாளர்கள் எனும் தேனீக்கள், பல்வேறு மலர்கள்தோறும் சென்று சேகரித்த தேன்துளிகள் இங்கே தேன்கூடாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கூட்டைக் கட்டுவதற்குத் தமிழ்த்துறையின் சிற்பிகள் பலரும் தங்களால் ஆன மகரந்தங்களைத் தந்துதவியிருக்கிறார்கள். அவர்களுள் முதல் சிற்பியாக இருந்து, இந்தத் தேன்கூட்டிற்கு எண்ணத்தையும் வண்ணத்தையும் சேர்த்த தம்பி பேரா. டேவிட் பிரபாகர் அவர்களை இதயத்தில் இருத்தி மகிழ்கின்றேன். பல்வேறு வகையில் இப்படைப்புக்குக் கையளிப்பு செய்துள்ள டாக்டர் செயராமன், டாக்டர் சா. பாலுசாமி, டாக்டர் பு. ஜார்ஜ், ஆய்வு மாணவி ஏலவார் குழலி, மாணவர் முருகன் ஆகியோரையும், இந்தத் தேன்கூட்டைப் படியெடுத்துரைக்கும் படித்தாகப் பதிப்பித்துத் தந்த சுமதி லேசர்ஸ் மற்றும் சுந்தர் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரையும் நேசத்தோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்நூலைப் பாடநூலாகக் கையிலே ஏந்தும் மாணாக்கர்கள் இதனை மருந்தாகவோ விருந்தாகவோ சுவைத்து மகிழ்வார்களேயானால், அது தமிழ்த்துறைக்கு அவர்கள் வார்க்கும் நீராகவும் எருவாகவும் அமையும். எதிர்காலத்தில் தமிழ்த்துறை எனும் பூஞ்சோலையில் மேலும் பல தேன்மலர்கள் பூக்க, இறையருளை இறைஞ்சுகின்றேன்.

**தி. இராசகோபாலன்**

# பொருளடக்கம்


வாழ்த்துரை — டாக்டர் ம. கிளாட்ஸ்டன்
Foreword — பேரா. அ. மத்தாய்
பதிப்புரை — டாக்டர் தி. இராசகோபாலன்

1. திராவிடக் கருத்தியலில் பெண்
வழக்கறிஞர் **அ. அருள்மொழி** - 1

2. மரபிலக்கிய நோக்கில் பெண்கள்
முனைவர் **இரா. பிரேமா** - 5

3. தலித்தியப் பார்வையில் பெண்
எழுத்தாளர் **விடிவெள்ளி** - 18

4. உளவியல் நோக்கில் பெண்
மருத்துவர் **நா. மாத்ருபூதம்** - 25

5. உயிரியல் நோக்கில் பெண்
மருத்துவர் **சுதா சேஷய்யன்** - 30

6. பெண்ணிய நோக்கில் பெண்
பேரா. **அ. மார்க்ஸ்** - 43

7. குற்றவியல் நோக்கில் பெண்
வழக்கறிஞர் **க. சுமதி** - 50

8. மார்க்சிய நோக்கில் பெண்
முனைவர் **மே.து. ராசகுமார்** - 54

9. வேதக் கருத்தியல் நோக்கில் பெண்
எழுத்தாளர் **இராஜம் கிருஷ்ணன்** - 56

10. ஆண் பெண் உறவும் தந்தை வழி உறவும்
முனைவர் **வி. சுதர்சன்** - 69

# திராவிடக் கருத்தியலில் பெண்

அ. அருள்மொழி
வழக்கறிஞர், சென்னை.

திராவிடக் கருத்தியல் என்பது இந்தியாவின் தொன்மக்களாகிய திராவிட சமுதாயத்தினர் ஆரியர் வருகைக்கு முன்பும், ஆரியர் வருகைக்குப் பின்பும், தனித் தன்மையுடனும், அத்தனித்தன்மை திரிந்த நிலையிலும் இன்றும் பின்பற்றி வரும் பண்பாட்டுக் கூறுகளின் தொகுப்பாகும். எளிதாகக் கூறுவதெனில் திராவிடக் கருத்தியல் வேதகாலக் கருத்தியலுக்கு முற்பட்டது. தனது மேலாண்மையை வேதக் கருத்தியலின் தொடக்கமான ருக் வேதத்திலும் கூட ஆழப் பதித்து வைத்தது எனலாம். பிற்கால வேதங்களிலும், புராணங்களிலும் முழுக்க முழுக்க ஆண் தலைமை போற்றும் ஆரிய சமுதாயத்தின் கருத்துக்கள் காணப்படும் போது ருக் வேதத்தில் மட்டும் பெண் தெய்வ வழிபாடுகளும், தன் மகனைக் காப்பதற்காக இந்திரனோடு போர் நடத்திய பெண்ணைப் பற்றிய குறிப்புகளும் கிடைப்பதற்குக் காரணம் ருக் வேதத்திற்கு முந்தைய திராவிட இனப் பண்பாட்டின் தாக்கமே. மேலும், இந்திரனோடு போர் நடத்திய பெண்ணின் பெயர் 'தனு' என்றும் அவளது மகனின் பெயர் 'விருத்திராசுரன்' என்ற அசுரப் பெயர்க் குறிப்போடும் காணப்படுவது திராவிட சமுதாயத்தின் பெண் வழித் தலைமையை விளக்கப் பயன்படும்.

திராவிட நாகரிகம் பரவிக் கிடந்த சிந்துவெளி நகரங்களான மொகன்சதாரோ, அரப்பா பகுதிகளில் கிடைத்த தொன்மச் சான்றுகளில் பெண் தெய்வப் பதுமைகள், சுடுமண் சிற்பங்கள், ஆண்-பெண் இணைப்பை மேலானதாக உணர்த்தும் லிங்க உருவங்கள், பெண் தெய்வ வழிபாட்டை உணர்த்துகின்றன. திருத்தமான நகர அமைப்பு, கடல் வழி வணிகம், வரிவடிவம் பெற்ற மொழி, இவற்றுடன் பெண் வழிச் சமூகத்தின் அடையாளங்களையும் இந்த அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. அதன் தாக்கத்தின் காரணமாகவே ருக் வேதத்தில் ஒளித் தெய்வம், கல்வித் தெய்வம் போன்ற பெண் தெய்வங்களின் பெயர்கள், பாடல்கள் கிடைக்கின்றன. அதைத் தொடரும் மற்ற வேதங்களை உருவாக்கிய காலகட்டத்தில் முழுவதுமே ஆண் தெய்வங்கள், இந்திரன் தலைமை, தேவர்கள் வாழ்க்கை என்பதாக ஆண்களை மையப்படுத்திய சான்றுகளைப் படைத்தது ஆரிய சமுதாயம். ஒரு வகையில் பெண் தலைமை அல்லது பெண் தெய்வ வழிபாடு போன்றவற்றை முதன்மைப்படுத்திய திராவிடக் கருத்தியலில் இருந்து தங்களை முற்றிலும் மாறுபட்டவர்களாக நிலை நிறுத்திக் கொள்ளவே, மற்ற வேதங்களும், பெண்களை வெறும் காமப் பொருளாகச் சித்திரித்த புராணக்

கதைகளும், முனிவர்களை மயக்க நடனமாடிய ஊர்வசி, மேனகைக் கதைகளும் ஆரியர்களால் புனைக்கப்பட்டன எனவும் கூறலாம்.

இன்றும் இந்தியா முழுவதும் பரவிக் கிடக்கும் அனைத்துச் சமுதாயங்களையும் நேர்கோடாகப் பிரிப்பது திராவிடக் கருத்தியல் வழிமுறையும், ஆரியக் கருத்தியல் வழி முறையுமே ஆகும். அம்பேத்கர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல இன்று தனித் திராவிடர்களும் இல்லை. தனித்த ஆரியர்களும் இல்லை. தங்களைத் திராவிட இனப் பிரிவினராய் உணர்வோரும், ஆரிய வழியினராய் உணர்வோரும் மட்டுமே உள்ளனர். இன்றைய சாதிகளால் ஆளப்படும் சமுதாய அமைப்பில் மேல் சாதியினர் ஆரிய வழிமுறைகளையும், பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் திராவிட வழிப் பண்பாட்டியலையும் இன்னமும் தக்க வைத்துக் கொண்டிருககிறார்கள். பெண் பற்றிய மாறுபட்ட பார்வைகளே அதற்குச் சான்று திராவிடக் கருத்தியலின் இலக்கணச் சின்னங்களாக, தமிழ் இலக்கியங்கள் கண்ணகி, மணிமேகலை போன்ற பெண்களை முன்னிறுத்த வடமொழி இலக்கியங்கள், இராமனையும் கிருஷ்ணனையும் முன்னிறுத்தின.

ஆரியக் கருத்தியலின் பாதிப்பினால் ஏற்பட்ட பக்தி இயக்கங்களும், இடைக்காலச் சித்தர் இலக்கியங்களும் பெண்களைச் சமூக மதிப்பீடு இல்லாதவர்களாக ஆக்கியதும், அதைத் தொடர்ந்த பெண்ணின் வீழ்ச்சியும், இந்த நூற்றாண்டு வரையிலும் கூட திராவிடக் கருத்தியலில் இரண்டாம் இடத்திலேயே பெண்ணை வைத்தது.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியினால் உருவான கல்வி, அறிவியல் வளர்ச்சி இரண்டும் அதுவரை இறுகிக் கிடந்த சாதீயக் கட்டுக்களை உடைக்கத் தொடங்கின. அதைப் போலவே சாதியத்தின் பிடிக்குள் சிக்கிப்போன பெண் பற்றிய சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டது. பெண் கல்வி, சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் பங்கு என்று சற்றே பெண்கள் வெளியே வரத் தொடங்கினார்கள். இந்தியா முழுமையிலும் பெண்களை ஒரு பொது நோக்கிற்காக வெளிவரும் சூழ்நிலையை விடுதலைப் போராட்டம் உருவாக்கியது. இதே காலகட்டத்தில் தான் சாதி அமைப்பும், பெண்ணடிமையும் ஒழியாமல் தேசவிடுதலை மட்டும் அடைவதால் பயன் இல்லை என்ற முழக்கத்தைத் திராவிடர் இயக்கம் முன் வைத்தது. திராவிடர் இயக்கத்தின் தத்துவத்தை வடித்தவரும், அவ்வியக்கத்தின் தலைவருமான தந்தை பெரியார், மூட நம்பிக்கைகள், சாதி, மதங்கள் இவற்றை வேரோடு ஒழிக்க வேண்டும் என்று தனது பயணத்தைத் தொடங்கினார். பேதங்களை ஒழிக்க வேண்டும் என்ற அவரது கொள்கையில் சாதி, வருணம், பொருளாதாரம் இவை எந்த அளவுக்கு முக்கியம் பெற்றனவோ அதே அளவிலான முக்கியத்துவம் பெண்ணடிமை ஒழிப்பிற்கு வழங்கப்பட்டது. மூவாலூர் இராமாமிர்தம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, தருமாம்பாள் அம்மையார் போன்ற தனிச் சிறப்புடைய பெண் தலைவர்கள் உருவாயினர்.

தாசி முறை, கோயில்களில் பெண்களைத் தேவரடியார் என்ற பெயரில் 'பொட்டு கட்டி' பொதுச் சொத்தாக்குதல், விதவைக் கொடுமைகள் இவற்றை எதிர்த்து இப் பெண்கள் நடத்திய பெரும் போருக்கும், அவர்கள் அடைந்த வெற்றிக்கும் திராவிடர் இயக்கப் பின்புலமும், பலமுமே காரணம். இந்தியாவிலேயே பெண்களைப் பரம்பரைச் சொத்தில் பங்காளிகளாக ஆக்கிய சட்டத்தைக் கொண்டு வந்த இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு. முதல் மாநிலம் ஆந்திரா. பெண்கள் கல்வியறிவில் இந்தியாவில் முதலிடம் பெறுவது கேரளா. இம்மாநிலங்கள் அனைத்தும் பெண்கள் முன்னேற்றத்தைச் செயல்படுத்துவதில் மற்ற மாநிலங்களை விடச் சிறந்து நிற்கின்றன. கேரளாவில் மொழியிலும், இசையிலும் சாதி நிறுவனத்திலும் ஆரியத்தின் தாக்கம் சற்றே கூடுதலாக இருந்தாலும், திராவிடக் கருத்தியலின் பெண் வழிக் குடும்ப அமைப்பும், 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற குடும்பச் சட்ட அமைப்பும் இன்னமும் திராவிட இனத்தின் தனித்த அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன என்பதை உணர முடியும்.

தமிழ் இலக்கியங்களிலும் கூட பெண் தெய்வ வழிபாடு, கொற்றவை வழிபாடு என்பவையே முதன்மை பெறுகின்றன. பெண்களிலும் கூட, மணிமேகலை என்ற துறவி காப்பியத் தலைவியாகப் போற்றப்படுகிறாள். வடமொழி ஆரிய இலக்கியங்களில் காணப்படும், தமயந்தி, சகுந்தலை, மேனகை, ஊர்வசி என்று பெண்களைக் காமப் பொருளாகப் பார்க்கும் போக்கிலிருந்து எவ்வளவு மாறுபட்டது என்பது தமிழ் இலக்கியப் பெண் தலைவியரை ஆய்வு செய்தால் விளங்கும்.

பெண்ணைப் பற்றிய அந்தப் பழைய பார்வையை முழுமையாக மீட்க முடியாவிட்டாலும் கூட பெண்ணுரிமை என்ற முழக்கத்தை முன் வைத்து பெண்களைச் சாதிக் கட்டுகளில் இருந்தும், சடங்குகளின் ஆதிக்கத்தில் இருந்தும், சம்பிரதாய முகமூடியில் இருந்தும் வெளிக் கொணர்ந்தது இந்த நூற்றாண்டில் திராவிடர் இயக்கம் செய்த மிகப் பெரிய சாதனை. அதுவும் மிக நீண்ட வரலாற்றையுடைய சாதனையாகும். சான்றாக, பெண்களை அனைத்துக் குடும்பச் சொத்துகளிலும் பங்காளியாக்க வேண்டும் என்ற தீர்மானம் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப் பட்டது. அதே தீர்மானம் 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு சட்டமானது. 1929-க்கும் 1989-க்கும் இடைப்பட்ட அறுபதாண்டு காலத்தில் தந்தை பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் சிறிது சிறிதாக நடைமுறைக்கு வந்தன. திருமணம் என்ற பெயரில் ஒரு பெண்ணை, ஆணுக்கு அடிமையாக்கும் 'கன்னிகாதானம்' ஒழிக்கப்பட்டு சுயமரியாதைத் திருமணம் நடைமுறைக்கு வந்தது சட்டப் பாதுகாப்பையும் பெற்றது. அரசு வேலைகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு செய்யவும் அரசாணைகள் வழங்கப்பட்டன. ஒட்டுமொத்த மதிப்பீட்டில் தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்களில் பெண்களின் முன்னேற்றம், அரசியல் பங்கேற்பு ஆகியவை மற்ற மாநிலங்களை விட முதல் நிலையில் இருப்பதும் திராவிடக் கருத்தியலின் தொடர்விளைவே எனலாம்.

திருமணம் தொடர்பான மரபுகளிலும், திராவிடர் சமூகத் திருமணங்களில் மணமகன் வீட்டார், மணமகள் வீட்டாரிடம் சென்று பெண் கேட்டு, நிச்சயம் செய்ய புடவையும், வசதி இருப்பின் நகையும் பெண்ணுக்குக் கொடுத்து திருமணம் முடிக்கும் வழக்கம் இன்று வரை தொடர்கிறது. ஆரியமயமாகி விட்ட மேல்சாதிகளின் திருமணங்களிலோ, பெண்ணைப் பெற்றவர், மணமகன் வீட்டார் முன் ஒதுங்கி நின்று, தன் பெண்ணை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்பதும் பெண் அழைப்பிற்கு மாறாக, மாப்பிள்ளை அழைப்பும், திருமணத்தின் எந்த ஒரு கட்டத்திலும் மணமகனின் கடைக்கோடி உறவினருக்குப் பெண் வீட்டாரின் கவனிப்பு சரியாக இல்லாவிட்டாலும் திருமணமே நின்று போகும் ஆபத்தும் உள்ளது. மேம்போக்கான சான்றுகளில் இருந்து, வேர் விட்டுப் போன பண்பாட்டுக் கூறுகளை ஆய்வு செய்தால், திராவிடக் கருத்தியலில் பெண் பற்றிய பார்வை புலனாகும்.

வரலாற்று ரீதியாக திராவிடக் கருத்தியலின் பெண் மதீப்பீட்டை இந்த நூற்றாண்டில் மீட்டு வந்த திராவிடர் இயக்கத்திலும் கூட, ஒரு கட்டத்திற்கு மேல் அதைப் பெண்ணியலின் அறிவியல் வளர்ச்சியுடன் ஆய்வு செய்யும் போக்கும், அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்கும் முயற்சியும் காணப்படவில்லை என்பதும் உண்மை. ஏனெனில் பெரியாரின் சமகாலத் தலைவர்களில் பலருக்கு, பெண்ணைப் பற்றிய அறிவியல் பார்வை சற்றுக் குறைவாக இருந்ததும், பெண்களை அதிகாரப் பங்கீட்டின் போட்டியாளர்களாகக் கருதி, அவர்களை வெறும் பிரச்சாரக் கருவிகளாக மட்டுமே பயன்படுத்தியதும், புராண ஆபாசங்களை விளக்குவதற்காகவும், ஆரியர்களின் பெண் பற்றிய பார்வையை விமர்சனம் செய்வதற்காகவும் தொடங்கிய மேடைப் பேச்சின் நகைச்சுவை அம்சங்கள், பெண்களைப் பொழுது போக்கு அம்சத்தில் சேர்க்கும் ஆரியப் பார்வையைத் திராவிடர் இயக்கத்திலும் பதித்து விட்டது.

இந்த விமர்சனங்கள், திருத்திக் கொள்ளப்புட்டால், திராவிடர் இயக்கம் மீண்டும் பழைய திராவிடக் கருத்தியலையும், பெண்ணைப் பற்றிய மதிப்பீடுகளையும் புதுப்பிக்கும் என்பதில் அய்யமில்லை.

# மரபிலக்கிய நோக்கில் பெண்கள்

**முனைவர் இரா. பிரேமா**
**எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை**

சங்க காலம் தொடங்கி 20-ஆம் நூற்றாண்டு வரை இலக்கியங்களில் பெண்களின் சித்திரிப்புப் பற்றி, இன்று வரை பல ஆய்வுகள் வெளி வந்துள்ளன. இவ்வாய்வுகளில், தொண்ணூறுகளில் வெளி வந்த, முனைவர் பிரேமா அருணாசலம் எழுதிய, 'பத்தினிப் பெண்களும் பரத்தையர் வீதிகளும்' என்ற நூலும், 'கற்பு - சதி - கலாச்சாரம்' என்ற நூலின் முற்பகுதியாக அமைந்துள்ள முனைவர் இரா. பிரேமாவின் காலந்தோறும் கற்பு' என்ற ஆய்வும், முனைவர் சக்தி பெருமாள் எழுதிய 'பெண்' என்ற நூலும், முனைவர் விஜயலட்சுமி எழுதிய 'கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை பெண்கள் என்ற ஆய்வும் பெண்ணிய நோக்கில் மரபிலக்கியப் பெண்களை ஆய்வு செய்துள்ளன. இக்கட்டுரை, அந்நூல்களிலிருந்து அணுகுமுறையிலும் கருத்தியல் நோக்கிலும் மிகுதியும் வேறுபடவில்லை என்றாலும் பகுப்பியல் நோக்கில் தனித்துவம் பெறுகிறது.

பழங்காலம் தொடங்கி சென்ற நூற்றாண்டின் இறுதி வரை பெண்களின் வாழ்க்கை ஒரே போக்கினதாக அமைந்துள்ளது. அவ்வவ் காலகட்டங்களில் அரசியல் / மத தாக்கங்களின் காரணமாகப் பெண்களின் நிலையில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைத் தவிர பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனவே, இக்கட்டுரை சங்க காலப் பெண்கள் பற்றி விரிவாகப் பேசி, பிற்கால இலக்கியப் பெண்கள் இதிலிருந்து வேறுபடும் இடங்களை மட்டும் குறிப்பாகப் பேசுகின்றது.

மேலை நாட்டுப் பெண்ணியத் திறனாய்வாளரான அட்ரைன் ரிச் (Adrienne Rich) என்பவர் 'மறுபார்வை' (Revision) என்ற பெண்ணிய அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ளார். இஃது, ஆணிய நோக்கில் அமையப் பெற்ற பழைய இலக்கியங்களில், புதிய பார்வையைச் செலுத்தி, கேள்விகளை எழுப்பியது. அத்துடன் அவ்விலக்கியங்களில் புதைந்து கிடக்கும் பெண்களின் மரபு நிலையையும் (to search for an underlying consistent female tradition) அதனடிப்படையிலான அடிமைத்துவத்தையும் எடுத்துரைத்தது. அட்ரைன் ரிச்சின் பெண்ணிய அணுகுமுறையின் வழிநின்று இவ்வாய்வு, ஆணாதிக்க மரபிலக்கியங்களை மறு ஆய்வு செய்கின்றது.

**தொல்காப்பிய / சங்க இலக்கியங்களில் பெண்கள்:**

மேற்கூறிய இலக்கியங்கள்

குலமகளிர்
பரத்தையர்
முதின் மகளிர்
உரிமைச் சுற்றம்
தொழில் புரியும் மகளிர்
கல்வி பெற்ற மகளிர்
கலை மகளிர்
ஏவல் மகளிர்

என்று பலவகையான மகளிரைப் படைத்துக் காட்டியுள்ளன.

குலமகளிரில்

கன்னிப் பெண்கள்
திருமணமான பெண்கள்
கணவரை இழந்த பெண்கள்

என்று மூவகைப் பெண்களும்,

பரத்தையரில்

காமக் கிழத்தியர்
இற்பரத்தையர்
சேரிப் பரத்தையர்
நயப்புப் பரத்தையர்

என்று நான்கு வகைப் பெண்களும்,

தொழில் செய்யும் பெண்களில்

தினைப்புனம் காக்கும் குறிஞ்சி மகளிர்
மோர், நெய் விற்கும் முல்லை மகளிர்
உழவு செய்யும் மருத மகளிர்
மீன், உப்பு விற்கும் நெய்தல் மகளிர்

என்ற நால்வகைப் பெண்களும்,

கலைமகளிரில்

விறலியர்
பாடினியர்

என்ற இருவகைப் பெண்களும் சுட்டப்பட்டுள்ளனர்.

**குலமகளிர்:**

'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாத' அக இலக்கியங்கள் பெண்களைப் பற்றி அதிலும் குறிப்பாக குலமகளிரைப் பற்றி அதிகம் பேசுகின்றன.

சங்க இலக்கியங்கள் பெண்களை அழகுப் பதுமைகளாகப் படைத்துக் காட்டுகின்றன. பெண்ணின், அழகு 'பெருங்கவின்' (ஐங்.20) 'தொல்கவின் (நற்-14,300), 'பூவின் கவின்' (கள 86), 'இருங்கவின்' (அகம்.123) என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றது. அவள் மேனி, கூந்தல், முகம், நெற்றி,

கண்கள், மூக்கு, இதழ்கள், பற்கள், முலைகள், கைகள், தோள்கள், இடை, தொடை, அல்குல், கால்கள், பாதங்கள் என்று அனைத்து உறுப்புகளும் வர்ணிக்கப்பட்டுள்ளன. பெண்களை வர்ணிப்பது 'புலமை நெறி'யாக இருந்தாலும், அது அவளைக் காட்சிப் பொருளாக, நுகர்பொருளாகப் பார்க்கும் ஆணாதிக்கப் போக்கை இனங்காட்டி நிற்கிறது. சங்க காலம் தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகவும், தந்தை வழிச் சமூகத்தின் தொடக்கமாகவும் அமைவதால், பெண்கள் தங்கள் கணவரைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றிருந்த நிலையையும், பெறாத நிலையையும் ஒருங்கே அடையாளம் காண இயலுகிறது. காதலிக்கும் உரிமை பெற்ற மகளிர் மூன்று மாதத்திற்கு மேல் தங்கள் காதலை நீட்டிக்காமல் திருமணம் செய்து கொண்டு கற்பு வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. காதல் மணம், ஏற்பாட்டு மணம் தவிர வேறு வகை மண முறைகளும் அக்கால கட்டத்தில் இருந்ததைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது (தொல் பொருள் - 92)

திருமணத்தின் போது ஆணும் பெண்ணும் ஒத்த ஆண்மை அல்லது பெண்மை, பிறப்பு, குலச்சிறப்பு, அழகு, கல்வி, வயது, அன்பு, அருள், செல்வம், உணர்வு என்ற பண்புகளைச் சரிசமமாகப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறும் தொல்காப்பியர் ஆண் இப்பண்புகளில் 'மிக்கோனாயினும் கடிவரையின்றே' என்று சுட்டியுள்ளார் (தொல்.பொருள்...273,93) இதன் மூலம், பெண் ஆணை விட இப்பண்புகளில் சிறந்து விளங்கக் கூடாது என்ற எதிர்மறைப் பொருளையும் உணர்த்துகின்றார்.

குலமகளுக்கு

அச்சம்
மடம்
நாணம்
பயிர்ப்பு

என்ற பண்புகளும்,

கற்பு
நல்லொழுக்கம்
மென்மை
பொறுமை

ஆகிய பண்புகளும், கட்டாயப் படுத்தப்பட்டன. 'கற்பு' என்ற 'பதிவிரதா தர்மம்' பெண்ணை ஆணின் அடிமையாக்கி, அவள் இயக்கத்தை இல்லறத்திற்குள் கட்டுப்படுத்தியது.

ஆடவன்

காவிரிக் கிழவன் (புறம் 58,399)
மலைக் கிழவன் (புறம் 129,131)
நாரையூரின் கிழவன் (புறம் 179)
சேரிக் கிழவன்
குதிரைக் கிழவன் (புறம் 168)
இளநிரைக்குக் கிழவன் (நற்:191)
தண்பனைக் கிழவன் (புறம் 242)

என்று ஆறு, மலை, ஊர், விலங்குகள், பெண்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் உரிமையுடையவனாகச் சுட்டப்படுகிறான். அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோரை எதிர்கொளல், விருந்தினரை உபசரித்தல் என்ற இல்லறக் கடமைகளைக் கணவனோடு (இணைந்து + தான்) ஒரு பெண் மேற் கொள்ள இயலும். தனித்து இல்லறக் கடமைகளை மேற்கொள்ள அவளுக்கு அனுமதியில்லை.

குலமகள் ஆணோடு இணைந்து வாழும் (காலங்களில் + தான்) தங்களை அலங்கரித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தனர். அவன் போர், பொருள் ஈட்டுதல் நிமித்தமாகப் பிரிந்திருக்கும் காலங்களில் மங்கல அணி அன்றி, பிறிதணி இன்றி 'புனையா ஓவியமாக' இருக்க வேண்டும். கணவனைப் பிரிந்திருக்கும் காலங்களில் பூ வைக்கும் உரிமையைக் கூட அவள் இழக்கிறாள். (புறம்:293). இதன் மூலம் பெண்ணின் அழகும், அலங்கரிப்பும் அவளுக்காக அன்று, அவளின் கணவனுக்காக என்ற சமூக நிலை தெளிவுபடுகிறது.

குலமகள் தங்கள் கணவனைக் கடவுளாகத் தொழ வேண்டும். அவர்களுக்குப் பிற தெய்வ வணக்கம் கூடாது (பரிபாடல் மட்டும் இதற்கு வேறான செய்தியைத் தருகிறது பொது விழாக்களிலும், கடவுள் விழாக்களிலும் கலந்து கொள்ளும் உரிமை அவர்களுக்கு இல்லை. கணவன் பரத்தமை மேற்கொண்டாலும் அதைக் கடிந்து உரைக்கலாமே தவிர, அவனை மறுத்துரைக்க உரிமையில்லை. கணவனின் பரத்தமையைப் பொறுத்து ஏற்றுக் கொள்ளும் பெண்கள் 'கடவுட் கற்பு' உடையவர்கள் என்று போற்றப்பட்டனர். (குறு 252, அகம்.184). கணவன் பிரிந்து செல்லும் போது அவன் வரும் வரை கோலம் கொள்ளாது, அவன் வரவை எதிர் நோக்கும் பெண்கள் 'முல்லை சான்ற கற்பினர்' (நற்:142). (சிறுபாணாற்று:30) என்று போற்றப்பட்டனர். இவ்வாறு பெண்களின் கற்பு 'அருங்கற்பு (புறம்:166), அருட்கற்பு (திருமுருக.175), அருந்ததி அனைய கற்பு (ஐங் 442), அறம் சால் கற்பு (பதிர் 31) ஆளுங்கற்பு (பதிற்:63) ஆறியகற்பு (அகம் 198), இகல் அடு கற்பு (அகம்:386), இறந்த கற்பு (கலி.9), உவர்நீங்கு கற்பு (அகம்:136) எழுதாக் கற்பு (குறு:196), செயிர்தீர் கற்பு (புறம்.3) நன்றி சான்ற கற்பு (நற்.142,329) நாணத்தில்லா கற்பு (புறம்-196), நாணோடு மிடைந்த கற்பு (அகநானூறு-9) நிலைஇய கற்பு (கள.2), வணங்குறு கற்பு (அகம்.75) மனைமாண் கற்பு (அகம்.33) வயங்கிய கற்பு (கள.2) மாசுஅறு கற்பு (பரி.5), மாசு இல் கற்பு (புறம்.16) என்று பலவாறாகப் போற்றப்படுகின்றது. பெண்மையின் பொறுமைக்கும், சகித்துக் கொள்ளும் இயல்பிற்கும், தனக்கென வாழா தகைமைக்கும், விட்டுக் கொடுத்து வாழும் இயல்பிற்கும் ஆடவன் தந்த பரிசே இந்த வாழ்த்துக்கள்.

கணவன்மார்கள் தங்களை இகழ்ந்தாலும், அடித்தாலும், உதைத்தாலும் குலமகளிர் பொறுத்துப் போவதுடன் அவர்களைப் போற்றி வணங்கும் பழக்கம் உடையவர்கள் என்பதனை,

''தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழிநும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவர்''

(பரி:20:88-89)

என்ற பரிபாடல் அடிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இதை,

'நல்கா னாயினும் நயனில செயினும்
நின்வழி வருவம்'

(நற்:247)

என்ற நற்றிணை அடிகளும் உறுதி செய்கின்றன

குலமகளிர் கணவனைத் தவிர பிற அந்நிய ஆடவர்களோடு பேசுதல் கூடாது. கணவனோடு பேசும் போதும் கூட சில வரையறைகளுக்கு உட்பட்டு தான் பேச வேண்டும். தலைவி, தலைவனிடம் தன்னுறு வேட்கையை மொழிதலும், தற்புகழ்ந்து பேசலும் அறவே கூடாது என்று கட்டுப்படுத்தப்படுகிறாள். (தொல் பொருள் களவு 28) தலைவி விருந்து எதிர் கொள்ளும் போது, கணவன் (மூலமாகத் + தான்) பிற ஆடவருடன் பேசுதல் வேண்டும். கணவன் வெளியில் சென்றிருக்கும் போது விருந்துவரின் ஏதாவது ஒரு அஃறிணைப் பொருளையாவது முன்னிறுத்தி அதனுடன் பேசுவது போல் தான் பேச வேண்டும். (புறம்:85,86)

வயது வந்த பெண்கள் வீட்டில் அடைக்கப் படுவார்கள் அந்த மனையுறை மகளிரை வயதான மகளிர் கண்காணிப்பது வழக்கம் (குறு:159). திருமணமான மகளிருக்கு அவர்கள் மனமாண்பே காவலாக இருந்தாலும், கணவன் காவலனாக இருக்கிறான். கணவன் பிரிந்து சென்ற காலத்தில், மன்னனின் காவல் அவள் கற்பைக் காக்கும். கற்புடைய பெண்களை மன்னன் போற்றுவதும், கற்பு தவறிய பெண்ணைத் தண்டிப்பதும் அக்கால பழக்கமாக இருந்தது. கற்பினைப் போற்றி வாழும் பெண்களுக்கு - அவள் கற்பு நிலையைப் பாராட்டும் விதமாக 'கொடி' ஒன்றும் வழங்கப்பட்டது (மலைபடு:424)

குலமகள் கணவன் இறந்த பின் தன் கற்பினைக் காத்துக் கொள்ளும் பொருட்டு, அவன் சிதையில் இறங்கி உயிர்விட வேண்டும் என்ற சதி பழக்கம் அக்காலம் தொட்டு இருந்து வந்துள்ளது. தற்கொலைக்குச் சமமான இச்செய்கையைச் சமூகம் தடுப்பது போல் காட்டினாலும் அதை அங்கீகரித்தே வந்துள்ளது. 'இடையாயக் கற்பாக' அதைப் போற்றியும் உள்ளது. சதி இறங்கிய பெண்களை 'எம்மை விரும்பிய காதலி', (யெம்வெங் காதலி, புறம்.210) என்றும், 'பெரிய நல்லோள்' (தொல்:பொருள்.79) என்றும் 'கைம்மை' நோற்றும் பெண்களைத் 'தம்மை விரும்பிய காதலி' (தன்னமர் காதலி, புறம் 234) என்றும் ஆடவர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்.

'கைம்மை' மேற்கொண்ட பெண்கள்

கைம்பெண்டிர்
ஆளில் பெண்டிர்
பருந்தில் பெண்டிர்
கழிகலப் பெண்டிர்
தொடிகழி மகளிர்

என்று பலவாறாகச் சுட்டப்பட்டுள்ளனர் கணவன் இறப்புக்குப் பின் முடி களைந்து, அணிகலன்களை எல்லாம் துறந்து, பிற ஆடவர் தம்மை நோக்கா வண்ணம் அலங்கோலப்படுத்திக் கொண்டு வாழ வேண்டும் என்று சமூகம் பெண்களைக் கட்டாயப் படுத்தியது. மேலும், அவள் 'அல்லியரிசி' என்ற சத்தில்லாத அரிசியில் சமைக்கப்பட்ட நீர்விட்ட சோற்றை, வெந்த வேளைக் கீரை அல்லது எள் துவையலுடன் உண்டு, தன் புலன்களை அடக்கியாளப் பழக்கப்படுத்தப்பட்டாள். படுக்கையின் சுகம் கூடாது என்பதற்காக, பரற்கல்லில் படுக்கும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டாள். இக்கொடுமைகளுக்குப் பயந்து அரசியான பெருங்கோப்பெண்டு உட்பட்ட பல பெண்கள் 'சதி' இறங்கிய அவலத்தைச் சங்கப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. (புறம்: 240,246,247,250)

**பரத்தையர்:**

'ஒருத்திக்கு ஒருவன்' என்று வற்புறுத்தும் சங்கச் சமூகத்தில் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற வரையறை இல்லை. ஆண்மகன், வேறு பெண்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளவும், மணம் செய்து கொள்ளவும் சமூகம் அங்கீகரித்துள்ளது. பரத்தையரைக் குலமகளிரொடு ஒப்பிடும் போது கலை, ஒப்பனை என்பவற்றில் தகுதி பெற்றவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர் பரத்தை வயிற் சென்று மீளும் தலைவனிடம் தலைவி ஊடற் கொள்ளவும், கடிந்து பேசவும் முடிகின்றதே தவிர அவனை முற்றிலும் மறுக்க இயவில்லை. காமக்கிழத்தியைத் தன் இல்லத்திற்கே அழைத்து வரும் தலைவனிடம், தலைவி, 'மாமலை நாடனே! நீ விரும்பி, உன்னால் நம் மனைக்கு அழைத்து வரப்பட்ட இவள் எமக்கு நினனிலும் நல்லவள்' என்று கூறி வரவேற்கும் நிலையிலும், தன் மகனின் தாய் எனப் போற்றும் நிலையிலும் (ஐங்.292) தான் உள்ளாள். பரத்தையிடம் சென்று வந்த தலைவனை, தலைவியின் தாயோ, தமரோ, சான்றோர்களோ இடித்துரைப்பதாகப் பாடல்கள் இல்லை. தலைவனின் தோழன் பரத்தமைக்குத் துணை நின்ற செய்தியும், அவனைத் தலைவியும் தோழியும் இடித்துரைக்கும் பாடல்களும் தான் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது, ஆடவனின் பரத்தமை ஒழுக்கம், சமூக அங்கீகாரம் பெற்று உள்ளதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

பரத்தையர் பொது நோக்கில் தூற்றுதலுக்கு உரியவளாக இருந்தாலும், பெண்ணிய நோக்கில் அணுகி ஆராயும் போது, அவர்களும் ஆடவனின் அதிகாரத்தின் வசப்படும் அபலைகளாகவே இருந்திருக்கின்றனர். ஆண் மகன்

விரும்பும் போது இன்பம் நல்குவதும், அவன் விட்டு விலகிச் செல்லும் போது வாளாது இருப்பதும் அவர்களின் வாழ்வியலாகும்.

'மாயப்பொய் கூட்டி மயக்கும் விலைக்கணிகை'
'பெண்மைப் பொதுமைப் பிணையிலி'
'இன்பத்துறை பொதுவி'

(பரி20:48-58)

என்று சமூகத்தின் தூற்றுதலுக்கு ஆளாகும் அப்பெண்களுக்கு என்று ஒரு வாழ்வு இல்லை. அவர்கள் மணம் செய்து கொண்டதாகவோ, குழந்தைகள் பெற்றுக் கொண்டதாகவோ செய்திகள் இல்லை; மண வாழ்க்கைக்கும் குழந்தைப்பேற்றிற்கும் ஏங்குவதாகத் தான் பலபாடல்கள் காட்டுகின்றன. அவர்கள் தங்களை நாடிவரும் ஆண்மகனிடம் ஊடல் கொள்ளவும் இயலாதவர்கள். அப்படி ஊடினால் அவன் தங்களை விட்டுப் பிரிந்து சென்று விடுவானோ என்ற அச்சம் அவர்களிடமும், அவர்களைச் சார்ந்த முதுபெண்டிரிடமும் இருந்ததைப் பரிபாடல் காட்டுகின்றது. (பரி 6:96-100)

இந்த அவலச் சூழல்களுக்கு இடையேயும், 'தன் கலைத் திறத்தையும் அறிவுத் திறத்தையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் கணிகை ஒரு தனித்தன்மை கொள்கிறாள் ஆணுக்கு இணையான திறன் கொள்கிறாள்' என்று கூறும் சைமன்-டி-பௌலாயர் என்ற பெண்ணியவாதி கூறும் கருத்து (செண்பகம்ராமசாமி, தமிழ் நவீன நாடகமும் பெண்ணியமும், பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும், ப.114) சங்கப் பரத்தையருக்கும் பொருந்தும். அத்துடன் அப்பெண்கள் குலப் பெண்களை விட அறிவும், ஆற்றலும் மதிநுட்பமும் பெற்றவர்களாக, சில பல சமயங்களில் ஆணின் பிழைகளைச் சுட்டிக் காட்டுபவர்களாகவும் விளங்குகின்றனர்

**மூதின் மகளிர்:**

சங்க இலக்கியங்களில் 'மூதின் மகளிர்' என்ற பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர் இவர்கள் போர்க்களம் சென்று போரிட்டவர்கள் அல்லர் என்றாலும் வீர உணர்வும், அஞ்சாமையும், மனவுறுதியும் உடையவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். புறநானூற்றில் இவர்களைப் பற்றிய செய்திகள், மிகச் சில பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

ஒரு பெண் முதல் நாள் போரில் தன் தந்தையை இழந்தாள்; அடுத்த நாள் போரில் தன் கணவனை இழந்தாள். ஆனால், சிறிதும் தயங்காது, மனங்கலங்காது அன்றைய போருக்குத் தன் இளமகனைத் தயார் செய்து அனுப்புகிறாள் என்று கூறும் பாடலின் மூலம், மூதின் மகளிரின் தளராத வீர உணர்வு புலனாகிறது (புறம்:279)

தன் மகன் மார்பில் அம்பு தைத்துப் போர்க்களத்தில் இறந்து கிடந்ததைத் தானே நேரில் சென்று கண்ணாரக் கண்டு, பெற்ற கணத்தை விடப் பெருமகிழ்ச்சி

கொண்டாள் என்றும், தன் மகன் புறமுதுகிட்டான் என்று கூறியவர்களிடம் அக்கூற்று உண்மையானால், அவனுக்குப் பால் கொடுத்த என் முலைகளை அறுத்தெறிவேன் என்று கூறி, போர்க்களம் சென்று, இறந்த மகனின் உடலைத் தேடிக் கண்டு, அவன் இறப்புக்கு வருந்தி நிற்காமல், அவன் உடலில் புண் எங்கு உள்ளது என்று தேடும் வீரப் பெண்களையும் புறநானூறு காட்டுகின்றது. (புறம்:278) போர்க்களத்தில் காயம்பட்ட வீரர்களுக்கு அருகில் இருந்து, புண் ஆற்றும் பெண்களும் புறத்திணையில் சுட்டப்பட்டுள்ளனர். (தொல்:பொருள்: புறத்-19:10-11, புறம்.281)

இச்செய்திகள் மூலம், படை வீரர்களைப் பெற்ற தாயாரும், மனைவியரும் மூதின் மகளிராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. மிகச்சிலவான பெண்களாக இவர்கள் சுட்டப்பட்டாலும், 'பெண்கள் அச்சம், மடம், நாணம் போற்றி வீட்டுக்குள் சிறைப்படுத்தப்பட வேண்டியவர்கள் அல்லர்: அவர்களுக்கும் வீரம் உண்டு; நாட்டுப் பற்று உண்டு; சமூகக் கடமை உண்டு; வாய்ப்புக் கிடைத்தால் தங்கள் திறனை, அஞ்சா நெஞ்சத்தை வெளிப்படுத்த முடியும் என்று சமூகத்திற்கு உணர்த்துபவர்களாகச் சிறக்கின்றனர்

**உரிமைச் சுற்றம்:**

'இல்லறத்திற்கு மட்டும் உடையவர்கள்' என்ற கட்டுப்பாட்டுக்குள் சிக்காத மற்றும் ஒரு வகை மகளிர் இவர்கள். மன்னனின் மெய்க்காப்பாளர்களாக விளங்கும் இவர்களிடம் திறமையும் துணிவும் குடிகொண்டுள்ளது. மன்னனுடன் போர்க்களம் வரை செல்லும் இவர்கள், ஒற்று ஆய்வதிலும் வல்லவர்கள். பாசறையில் போர் உடை தரித்து, இடுப்பில் வாளுடன் காவல் பணி புரியும் இவர்களைப் பற்றித் தனிப்பட்ட பாடல்கள் இல்லை.

**தொழில் புரியும் மகளிர்:**

ஐவகை நிலங்களிலும் தொழில் புரியும் மகளிரைப் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களில் ஆங்காங்கே மிகச் சிலவாகக் காணப்படுகின்றன. இவர்கள் இலக்கிய ரீதியாக முதன்மைப் படுத்தப்படவில்லை. கலித்தொகை மட்டும் இதற்கு விதிவிலக்காக சில பாடல்களைத் தந்துள்ளது. உழைக்கும் மகளிர் மரபிலக்கியங்களைப் பொறுத்தவரை ஒதுக்கப்பட்டவர்களாவார்கள்.

**கல்வி கற்ற மகளிர்:**

சங்க இலக்கியங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் காணப்படுகின்றனா. ஔவையார், நற்செள்ளையார், காக்கைப்பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார், மாறோக்கத்து நப்பசலையார், வெறியாடியக் காமக்கண்ணியார் என்று இவர்கள் பட்டியல் நீளும். கல்வி எல்லாச் சாதியினருக்கும் பொதுவானதாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர் என்ற அரசப் பெண்டிரும், குறமகள், காவல் பெண்டு போன்ற சாதாரண பெண்டிரும் கல்வி அறிவு பெற்றுப் புலமையுடன்

பாடுவதிலிருந்து அறிந்து கொள்ள இயல்கின்றது. இவர்களுள் ஔவையார், முடத்தாமக்கண்ணியார் போன்றவர்கள் அரசியல் தொடர்புடையவர்களாகவும் சமூக அந்தஸ்து பெற்றவர்களாகவும், சமூகத்தோடு தொடர்புடையவர் களாகவும் இருந்திருக்கின்றனர். இவர்களைப் பற்றிய விரிவான செய்திகளை அறிந்து கொள்ள இயலவில்லை என்றாலும், ஆணாதிக்க சக்தியில் பிடிபடாத பெண்களும் திருமண பந்தத்தில் சிக்கி இல்லறத்திற்குள் தனிமைப்படுவதை விரும்பாத பெண்களும் அக்காலத்திலேயே கல்வி கற்று சமூக அந்தஸ்து பெற்றுள்ளதையும் அறிந்து கொள்ள இயலுகிறது.

**கலை மகளிர்:**

ஆடல், பாடல், கூத்து இவற்றில் சிறந்து விளங்கும் மகளிர்கள் விறலியர், பாடினியர் என்போராவர். இவர்கள் பாணர், பொருநர் என்பவர்களோடு சென்று, மன்னர்களையும் வள்ளல்களையும் சந்தித்து, தங்களின் ஆடல் பாடல்களால் அவர்களை மகிழ்வித்து, அதற்குப் பரிசாகப் 'பொற்பூ' பெற்றவர்களாவார்கள். இவர்கள், பரத்தையர் இனப் பெண்களில் இருந்து வேறுபட்டவர்கள். பாணரையும், பொருநரையும் மணம் செய்து கொண்டு இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். சமூகத் தொடர்புடைய இப்பெண்களும் எண்ணிக்கையில் குறைவாகவே இருந்திருக்க வேண்டும்

**சங்கம் மருவிய காலத்தில் பெண்கள்:**

அடுத்து வந்த சங்கம் மருவிய காலகட்டத்தில் வள்ளுவர் படைத்துக் காட்டும் பெண்களும், இரட்டைக் காப்பியங்கள் படைத்துக் காட்டும் பெண்களும் சங்கப் பெண்களிலிருந்து பெரிதும் மாறுபட்டவர்கள் அல்லர். வள்ளுவர் தெய்வம் தொழாத, கணவனைத் தொழுதெழும் பெண்களைத் தான் போற்றுகிறார் (குறள் 55) அவர்களை இல்லவள் (குறள்.53) வாழ்க்கைத் துணை (குறள்.51), பெருந்தக்காள், மாட்சியள் (குறள்:52,60) எனப் போற்றும் வள்ளுவர் பரத்தையரைப் பண்பில் மகளிர் (குறள்:912) பொருட் பெண்டிர் (குறள்:913) நிறை நெஞ்சம் இல்லார் (குறள்:917), மாய மகளிர் (குறள்:918) இருமனப் பெண்டிர் (குறள்:920), வரைவில் மகளிர் (குறள்:917) எனக் கடிந்துரைக்கின்றார் ஆடவரிடம் பிறன் மனைவியை விரும்பக் கூடாது என்று கண்டிக்கும் வள்ளுவர் பரத்தமை கூடாது என்று எடுத்துரைக்கும் வள்ளுவர் பிறன்மனை நோக்குபவனைப் 'பேதை' (குறள்:142) என்று மென்மொழியால் வருந்தி உரைப்பதையும் காண முடிகிறது.

சங்கம் மருவிய காலத்தில் கற்புடையப் பெண் 'பத்தினி' என்றும் 'வீரப் பத்தினி' என்றும் சுட்டப்படுகிறாள். சிலப்பதிகாரம் காட்டும் ஏழு கற்புக்கரசி கதைகள் (சிலம்பு:21:5-35). அக்காலப் பெண்களின் வாழ்க்கை அவலத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

ஒரு பெண், மாற்றான், தன் முகத்தை நோக்கினான் என்பதற்காகத் தன் முகத்தைக் குரங்கு முகமாக ஆக்கிக் கொண்டதும், ஒரு பெண் பொருள்வயின்

பிரிந்த கணவன் வரும் வரை தன் உருவத்தைக் கல்லாக்கிக் கொண்டதும், மற்றுமொரு பெண், தோழியர் விளையாட்டாகக் கூறியதை உண்மையாகக் கொண்டு மணற்பாவையைக் கணவனாக ஏற்றதும், அவளை மக்கள் பெருமையாகப் போற்றியதும் புராணக் கதைகள் என்றாலும், அவை 'அறங்கள்' என்ற பெயரில் அடிமைத்தனத்தைக் கற்பிப்பதை உணர்ந்து கொள்ள இயலுகிறது.

மணிமேகலையில் 'பிறர் நெஞ்சு புகாஅர்க் கற்பு' பேசப்படுகின்றது. 'மருதி' என்ற மணமான பெண்ணை, மன்னன் மகன் கண்டு ஆசையுறுகிறான். அதனால் அவள் கற்பிழந்தவளாகக் கருதப்படுகிறாள்.

'மண்டிணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிராயின் மறந்தும் பிறர்நெஞ்சு புகாஅர்'

(மணி:22:45:46)

என்றுரைக்கும் 'மேகலை காப்பியம்' பெண் இல்லத்தை விட்டு வெளி வருவதை மேலும், மேலும் தடை செய்யும் சமூக மூட நம்பிக்கைகளை இனம் காட்டுகின்றது.

விசாகை என்ற பெண் 'கன்னிமை' தவறியதாக மக்களால் தூற்றப்படுவதை உணர்ந்து, தன் வாழ் நாள் முழுவதும் மணம் புரியாமல் கன்னியாக வாழ்ந்தாள் என்றும் மேகலை காட்டுகின்றது. இக்கதையும் பெண்ணின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைச் சுட்டுவதாகவே அமைந்துள்ளது.

கற்புநெறி தவறிய பெண், 'கொண்டோன் பிழைத்தவள்' (மணி 13:6) 'காப்புக்கடை கழிந்தவள்' (மணி:13:7) 'மனையறம் பிழைத்தவள்' (மணி.22.53) என்று சமூகத்தினரால் குற்றஞ்சாட்டப்பட்டு மன்னனின் தண்டனைக்கு ஆளாகிறாள். இதை ஆபுத்திரனின் தாயின் வாழ்க்கை மூலம் அறிய முடிகின்றது.

பின்வந்த 'பெருங்கதை' காப்பியமும் கற்புத் தவறும் பார்ப்பினிப் பெண் ஒருத்தி கடும் தண்டனைக்கு உள்ளாவதை விரிவாக எடுத்துக் கூறுகிறது.

கணவனால் கைவிடப்பட்ட அப்பெண், சமூகம் விதித்த விதிமுறைக்கு உட்பட்டு அவனைப் போற்றி ஒழுகாது, தன் மனம் போல் வாழ்ந்தாள். அதனால் அவள் கொண்டோன் பிழைத்த குற்றத்திற்கு ஆளாகி, மன்னன் சதானிகனின் கடும் தண்டனைக்கு ஆளாகிறாள். அவள் செய்த குற்றத்தையும் பெற்ற தண்டனையையும் பறை அறிவித்து ஊர் முழுவதும் தெரிவிக்கச் செய்தான் மன்னன். பின் ஏவலர்களின் மூலம் அவள் மீது செங்கல் பொடி தூவி; இல்லந்தோறும் அவளை நிறுத்தி, அவளை 'இன்னாள்' என இனங்காட்டி, வதைத்து, பின் மணற்குடம் கட்டிக் கடலில் போடச் செய்கிறான். அப்பொழுது ஊர் முழுவதும் கூடி, அவளைப் பார்த்துக் கைகொட்டி நகைக்கிறது. (பெருங்:2:36:156-161). இப்படி, கொண்டோன் பிழைத்தவள் அதிகபட்சமாக

மரண தண்டனைக்கு ஆளாக, கொண்டோள் பிழைத்தவன் குறைந்த பட்ச தண்டனைக்குக் கூட ஆளாகாமல் தப்பும் ஆணாதிக்க சமூகம் அடுத்தடுத்து வரும் மரபிலக்கியங்களிலும் தொடருகின்றன.

கற்பைப் போற்றுவதிலும், துதிப்பதிலும் கம்பர் முன்னோர்களுக்குச் சற்றும் இளைத்தவரில்லை என்றாலும், இவரது கற்பு நோக்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணபபடுகிறது பிறர் நெஞ்சு புகுந்தால் கற்பு போய் விடும் என்ற கடும் சமூக வரையறையை முழுக்க முழுக்க மாற்றானாகிய, இராவணன் மனதில் இருந்த சீதையைக் 'கற்பின் கனலியாகப் போற்றுவதன் மூலம் முறியடித்துள்ளார்

'கற்பு' என்பது உடலோடு சம்பந்தப்பட்டது. உடல் தூய்மை போய் விட்டால் 'கற்பு' போய் விட்டது என்று கருதும் சமூகத்தில், 'அகலிகை கதை'யைப் படைத்து 'மனமாண்பே' கற்பு என எடுத்துக் காட்டி, அதை, சீதையின் வாய் மூலமாகவும் எடுத்துரைத்துள்ளார் கம்பர்.

சீதை, இலக்குவன் சமைத்த தீயில் புகும் முன்னர்,

'மனத்தினால், வாக்கினால் மறுவுற்றேன் எனின்
சினத்தினால் சுடுதீயால் தீச்செல்வா'

(கம்ப:யுத்த:37:83-85)

என்று வேண்டிக் கொள்வதன் மூலம், மனம் வாக்கு என்ற இரு நிலைகளில் தூய்மை பெறுவதே 'கற்பு' என விளக்குகிறார். கற்பு, கம்பரால் 'மனதலம்' (கம்ப 5.3.72) மனத்தின் மாண்பு (கம்ப:5:3:69). 'மனத்திண்மை' (கம்ப·5 3 110) என்று போற்றப்படுவதும் இக்கருத்துக்கு மேலும் அரண் சேர்க்கிறது

கம்பர் 'தாய்மை'யை விட ஒரு பெண்ணுக்குக் கற்புடைமையே சிறந்தது என்ற சமூக விதியைக் கைகேயியின் வாழ்வின் மூலம் காட்டியுள்ளார். இதன் மூலம் இலக்கியங்கள் மீண்டும் மீண்டும் 'கணவனே' ஒரு பெண்ணுக்கு அனைத்தும் என்று வற்புறுத்துவதைக் காண முடிகிறது.

பெரிய புராணமும், 'பக்தி நோக்கில்' ஆணின் அதிகாரத்தையும், பெண்ணின் அடிமை நிலையையும் பேசுகின்றது. கடவுளுக்குத் தன் மனைவியைத் தாரை வார்த்த இயற்கை நாயனாரும் இறைவனுக்காகத் தன் மகவைக் கறி சமைத்து நல்கிய சிறுத்தொண்ட நாயனாரும், தன் மகள் முடியை இறைவன் கேட்க, அதை வெட்டித் தந்த மானக்கஞ்சனாரும் ஆணாதிக்கச் சமூகப் பிரதிநிதிகள் என்றால் அதற்குத் துணை போன பெண்கள், பெண் அடிமைத்தனத்தின் பிரதிநிதிகள் என்று கூறலாம்.

பாரதத்தில் திரௌபதி தன்னை இழுத்துப் போக வந்த துச்சாதனனிடம் 'என்னை எப்படி அவர் வைத்தாட முடியும்' என்ற வினாவை எழுப்பவில்லை. 'என்னை வைத்து இழந்த பின்பு அவரை இழந்தாரா அல்லது அவரை இழந்த

பின் என்னை இழந்தாரா' என்று தான் கேட்க முடிந்தது. என்றாலும் திரௌபதி ஆண்வர்க்கத்தைப் பார்த்துக் கேள்வி கேட்குமளவிற்குத் துணிவு கொண்ட வித்தியாசமானப் பெண்ணாகக் காட்சியளிக்கிறாள்.

கண்ணிழந்த கணவனுக்காகத் தன் கண்களை வாழ்நாள் முழுவதும் கட்டிக் கொண்டு, கண்ணிருந்தும் குருடாக வாழ்ந்து மறைந்த பெண்ணையும் அப்பாரதம் படைத்து, பெண்ணடிமையின் உச்சக் கட்டத்தை இனம் காட்டி நிற்கிறது

கற்புக்கரசிக்குரிய குணநலன்களாக, சிறுகாலை எழுதல், உடன் சமையற்கட்டில் புகுதல், நன்றாகக் கூட்டிச் சமைத்தல், சுவை குன்றாது அதைப் பரிமாறுதல், வீட்டைத் திருத்துதல், வருந்தும் காலத்திலும் விருந்து உபசரித்தல், குழநதைகள் பெறுதல், பெறும் பொழுது இன்புறுதல், அச்சம் மடம் நாணம் உடையவளாதல் கணவர் உறங்கிய பின்பு உறங்குதல், அவன் எழும் முன் எழுதல், எழும் முன் அவனைத் தொழுதெழுதல் என்ற 12 பண்புகளைத் திருக்குற்றாலப் புராணம் வரையறை செய்கிறது. (திரு:குற்:புற:பா.4)

திருக்கூவபுராணம் கணவன் சோம்பேறியாக / குணம் இல்லாதவனாக / வறுமையுடையவனாக / நோயினனாக / உறுப்புக் குறைந்தவனாக / மூடனாக / மிகக கொடியனாக இருந்தாலும் கற்புடைய மகளிர் அவனிடத்து அன்பு குறைய மாட்டார்கள் என்கிறது. (தி.கூவ புராணம். பா.5)

கணவன் உண்டபின் மிச்சிலை அருந்துதல், மாற்றாளுக்கு எல்லா நகைகளையும் கொடு எனக் கணவன் ஆணையிட்டால் சிறிதும் மனங்கோணாது கொடுத்தல், கணவன் முனிந்து பேசினாலும் எதிர்த்துப் பேசாதிருத்தல், கணவன் துணை இல்லாது புண்ணிய நீராடவோ, நோன்பு மேற்கொள்ளவோ, பிற தெய்வ வழிபாடு செய்யவோ இசையாத நிலை - இவை கற்புடை மாந்தர் பண்புகள் எனத் திருக்குடந்தைபுராணம் கூறுகின்றது. (திருகுடந்தை பா.6,7,10)

இவ்வாறு புராண இலக்கியங்கள் பெண்களை ஆணின் முழு அடிமையாக்குகிறது என்றால் சிற்றிலக்கியங்கள் பெண்களை ஆணின் நுகர்ச்சிப் பொருளாக்கிக் காட்டியது. உலா, கலம்பகம், கோவை இலக்கியங்களும், கலிங்கத்துப் பரணியின் கடைதிறப்புப் பகுதியும் பெண்ணை நுகர் பொருளாக்கும் சந்தைக் கலாச்சாரத்தின் தொடக்க நிலை வடிவங்களாயின. புராண / சிற்றிலக்கியங்களில் பெண் மரபுத்தளையிலும், ஆணின் நுகர்ப்புக் கலாச்சாரப் பிடியிலும் ஆழ சிக்கி, மீட்சிக்கான உந்துதலும் தடயமும் இன்றி, அடிமையில் ஆழ்ந்து போனாள்.

**முடிவுகள்:**

1 ஆணின் அடக்கு முறைக்கும் அதிகாரத்துவத்திற்கும் ஆட்பட்ட பெண்களையே மரபிலக்கியங்கள் மீண்டும் மீண்டும் படைத்துக் காட்டியுள்ளன.

2. குடும்பம் என்பதும், இல்லறம் என்பதும் பரந்து விரிந்த சமூகத்தில் ஒரு மிகச் சிறிய அலகு ஆகும். அந்தக் குறுகிய எல்லைக்குள், 'தான்' சிறைப்பட்டிருக்கிறோம் என்பதை அறியாமலே வாழ்ந்து மறைந்த பெண்களே மரபிலக்கியப் பெண்கள்.

3 மரபிலக்கியப் பெண்கள் ஆண்களால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள், ஆண்கள் இட்ட வலைக்குள் சிக்கிக் கொண்டதோடு, அது தான் இன்ப வாழ்வு என அவர்கள் கற்பித்ததையும் ஏற்று, தனக்கென ஒரு வாழ்வின்றி, அவனின் வாழ்வோடும் தாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு, அவனுக்காகவே தான் படைக்கப் பட்டுள்ளோம் என்ற அசைவில்லாத நம்பிக்கை உடையவர்களாக வாழ்ந்தவர்கள்.

4 பண்பாடு / மதம் / பொருளாதாரம் / பாலுறவு ரீதியாக அடக்கு முறைக்கும், மேலாண்மைக்கும், ஆதிக்க வெறிக்கும் அடி பணிந்து வாழும் இரண்டாம் தர உயிரிகளே அப்பெண்கள்.

5 உடலமைப்புக் காரணமாகப் பலவீனமானர்கள் என்றும், தனித்து இயங்க இயலாதவர்கள் என்றும் ஆணாதிக்கச் சமூகத்தால் கற்பிக்கப்பட்டு, அதையே காலங்காலமாக ஏற்று வாழ்ந்தவர்கள் மரபிலக்கியப் பெண்கள்

6 சமூக அடக்குமுறைக்கு ஆட்பட்ட / ஒரே சட்டத்தில் வார்க்கப்பட்ட பிம்பங்களே அப்பெண்கள்.

7 மேற்கூறியவர்களில் இருந்து சிறிது மாறுபட்டு ஔவை, மாதவி, காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற பெண்கள் இலக்கியங்களின் மூலம் அறியப்பட்டாலும் அவர்களின் எழுச்சியும் ஆளுமையும் அடிமைப்பட்டச் சமூகத்தில் கடலில் கரைத்த பெருங்காயமாக ஒன்றுமில்லாமல் போயிற்று

# தலித்தியப் பார்வையில் பெண்

**விடிவெள்ளி**
**எழுத்தாளர், சென்னை**

**ஆய்வுப் பொருள்:** *தலித்தியப் பார்வையில் பெண்ணைப் பார்ப்பதே சரியான சமூக பகுப்பாய்வுக்கும் சமூக விடுதலைக்கும் வித்திடும்.*

**முன்னுரை:** தலித்தியப் பார்வையால் பெண்ணைப் பற்றிப் பார்ப்பதற்குத் தலித் யார்?

தாம்பரத்திலிருந்து 12.கி.மீ. உள்ள கரசங்கால் என்ற ஊருக்குச் சென்றேன். பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தவர்களிடம் ''மூலிகை மருந்து கொடுக்கிற தங்கம்மா வீடு தெரியுங்களா?'' என்றேன். ''ஊரா, காலனியா?'' என்றார்கள். தெரியாதுங்க. ''... அட அந்த லாரி டிரைவர் ராமுடைய பொண்டாட்டிப்பா'' என்றார் ஒருவர் ''அவனா... அந்தக் காலனியில போயி கேளுங்கோ... '' என்றார் மற்றொருவர். அந்தக் காலனியில தான் தங்கம்மா இருந்தார். அவர் தலித் கீழ்ச் சாதி. ஊரில் இருப்பவர்கள் மேல் சாதி.

மராட்டியத்தில் தலித் என்றால் நொறுங்கிய உடைந்த என்று பொருள். சமூகத்தில் ஒடுக்கப்பட்டு நொறுக்கப்பட்டுக் கிடக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை தலித் என்று சொல்கிறார்கள்.

தலித்தியப் பார்வை என்கிற போது எந்த தலித் என்றும் தெளிவடைய வேண்டும். பிரமிடு அமைப்புக் கொண்ட நம் சமூகத்தில் கீழ்மட்டத்தில் கிடக்கும் பெரிய கூட்டமாகிய தலித்துகளின் பார்வையை நாம் இங்குப் பேசுகிறோம்.

அந்த தலித் எப்படி மேலை நாட்டுப் பெண்களைப் பார்க்கிறாள்; இந்திய நாட்டின் மேல் தட்டு, நடுத்தர வர்க்கப் பெண்களைப் பார்க்கிறாள்? தலித் பெண்களையே பார்க்கிறாள்?

### 1. மேலை நாட்டுப் பெண்கள்:

இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குப் பயணம் சென்றிருக்கிறேன். சில வருடங்கள் தங்கியிருந்துள்ளேன். படித்துள்ளேன் அங்குக் கீழ்த்தட்டில் உள்ள பெண்களின் பொருளாதார, சமூக, அரசியல் நிலை என்ன? அங்குள்ள பெண்ணியம் என்ன?

**அ. பொருளாதார நிலை:** இத்தாலியில் நான் தங்கியிருந்த உள் விடுதியைச் சுத்தம் செய்யவும், உணவு சமைக்கவும், போன் அட்டண்ட்

பண்ணவும் பெண்கள் வருவார்கள். எப்படி? காரில் வருவார்கள். தங்களது அலங்கார உடையை எடுத்து விட்டு வேலைக்கான உடையைப் போடுவார்கள். அவர்கள் தங்கும் அறையில் கட்டில், மெத்தை, டீ.வி. போன், டாய்லெட் வசதிகள் உண்டு. மதியம் எங்களோடு மேசையில் அமர்ந்து சாப்பிடுவார்கள். மாலை துணியை மாற்றிக் கொண்டு காரில் போவார்கள்.

அவர்களுக்கு மாதம் ரூ. 30, 40 ஆயிரம் சம்பளம். இவர்களது வீட்டிற்குச் சென்றேன். சொந்த வீடு. சிறிய தோட்டம், 2 படுக்கை அறைகள். பெரிய சமையல் அறை. பல வசதிகளோடு, நீண்ட மாடர்ன் குளியலறை, கழிப்பறை, தரையில் கார்பட், ஹாலில் சோபா செட், டீவி, பிரிட்ஜ், போன் போன்ற வசதிகள். கார் செட்.

இங்குள்ள காலனி, சேரி, குப்பம், குடிசை போன்ற சூழல் அங்கு இல்லை. கூவம், சாக்கடை, சாலையோரத்தில் மக்கள் சுகாதாரமற்ற அமைப்பில் வாழ்வது போல் அங்குப் பார்க்க முடியாது. ஏழ்மையில் கிடக்கும் தலித் பெண்களைப் போல் கந்தல் உடை, பசி, பட்டினியில் கீழ்த்தட்டுப் பெண்கள் கூட அங்கு இல்லை.

அங்குப் பொதுவாக பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு கொண்டவர்கள். முதிர்ந்த வயதிலும் நல்ல பென்ஷன் கிடைக்கிறது. ஆகவே, யாரையும் சார்ந்திருக்க வேண்டியதில்லை. சுயசார்புடையவர்களாக இருக்கிறார்கள்.

**ஆ. சமூக நிலை**

அங்குச் சமையல், துப்புரவு வேலை செய்கின்ற பெண்கள் அந்த விடுதியின் நிர்வாகி, பொறுப்பாளர்களோடு ஒரே மேசையில் அமர்ந்து ஒரே உணவை உண்கிறார்கள்; ஒரே மொழி வளமையோடு உறவாடுகிறார்கள்.

மாலை நேரங்களில் இசை நிகழ்ச்சி, டான்ஸ், விருந்து, பார்க், சினிமா என்று பொழுது போக்கிற்காகச் செல்கிறார்கள்.

சமூகத்தின் அடித்தட்டில் உள்ள பெண் அங்குச் சமமாக வாழ முடிகிறது. வாழ வசதியிருக்கிறது. வாழ்வதைச் சமூகம் ஏற்றுக் கொள்கிறது. அவளது சுதந்திரத்தை யாரும் தடுப்பது இல்லை. சமூகத்தில் சமமாக மதிக்கப்படுகிறாள்.

**இ. அரசியல் நிலை:**

இந்தச் சமையல், துப்புரவு போன்ற பணிகளில் இருப்போர் எப்படி அரசியல் ஈடுபாடு கொண்டுள்ளார்கள்? அவர்கள் பொதுவாகவே அடிப்படைக் கல்வி கற்றவர்கள். வேலை முடிந்து செய்தித் தாள் வாசிக்கிறார்கள். டி.வி. பார்க்கிறார்கள். நாட்டு விவரங்களை மற்ற பெண்களோடு கலந்து பேசுகிறார்கள். அரசியல் அமைப்பு முறை, நிர்வாக நடைமுறை பற்றித் தெரிந்து வைத்துள்ளனர். விமர்சிக்கிறார்கள். அரசியல் கூட்டங்களிலும் எதிர்ப்புகளிலும் பங்கெடுக்கிறார்கள்.

அடித்தளப் பெண்களின் பொருளாதார, சமூக, அரசியல் நிலைமை இப்படியென்றால் நடுத்தர, மேல்தட்டுப் பெண்களின் நிலை அவர்கள் வசதிக்கு ஏற்ப அதிகமாகவே இருக்கிறது.

**ஈ. மேலை நாட்டுப் பெண்ணியம்:**

பொருளாதாரத்தில் தன்னிறைவும், சமூகத்தில் தன் மதிப்பும், அரசியலில் சுய ஈடுபாடும் கொண்ட பெண்கள் ''பெண்ணியம்'' பேசும் போது எதனைப் பற்றிப் பேசுகிறார்கள்? ஆணுக்குப் பெண் சரி நிகர். ஆகவே, சம அந்தஸ்து, சம வேலை வாய்ப்பு, சம ஊதியம், சம அதிகாரப் பகிர்வு, அரசியலில் நிர்வாகப் பகிர்வு, வீட்டில் வேலைப் பகிர்வு, குழந்தை வளர்ப்பில் சம பொறுப்பு என்று எல்லா நிலைகளிலும் சமத்துவத்தை வலியுறுத்தி பெண்ணியம் பேசப்படுகிறது.

**2. இந்தியப் பெண்கள்:**

சென்னை, மும்பை, டெல்லி போன்ற பெரு நகரங்களில் உள்ள தொழில் அதிபர்களின் பெண்களைச் சந்திக்கவும், உறவாடவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. மற்றும் நடுத்தர வர்க்கம், நடுத்தர சாதியைச் சார்ந்த ரெட்டி, நாயுடு, செட்டியார், வெள்ளாளர், உடையார், வன்னியர், முதலியார், நாடார் சாதியைச் சார்ந்த நடுத்தர வர்க்கப் பெண்களோடும் வாழ்ந்திருக்கிறேன். வேலை செய்திருக்கிறேன். ஒட்டி உறவாடியிருக்கிறேன். இவர்களுடைய பொருளாதார சமூக அரசியல் நிலைமை என்ன? இவர்கள் பேசும் பெண்ணியம் என்ன?

**அ. சமூக நிலை:**

இந்திய மக்களைப் பிரித்தாளுவதற்காக மனு சாஸ்திரப்படி உருவாக்கப்பட்டதே சாதியம் இந்தச் சாதியப் படி நிலையில் மேலேயிருந்து கீழாகப் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குச் சாதியப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இந்தச் சாதியால் பிறந்த பெண்களை மேல் சாதிப் பெண்கள் என்கிறார்கள். வழக்கத்தில் இவர்களை ''அம்மா, மாமி, ஆச்சி, மதர், மேடம்....'' என்று அழைக்கிறார்கள்.

கலாச்சார அளவுகோல் என்று சொல்லப்படும் ''கல்சுரல் பெராமீட்டர் (Cultural Parametre) என்பது அறிவாற்றல், மனவளர்ச்சி, சமூக சிந்தனை, மனித உறவாட்டம், மனித மாண்பு, கால வளர்ச்சிக்கு ஏற்ப பரிணாம வளர்ச்சி பெறக் கூடிய பக்குவம் - இவையனைத்தும் அடங்கியது.

இந்த அளவுகோல் கொண்டு இந்த மேல் சாதியப் பெண்களைப் பார்த்தால் மிகப் பெரிய விழுக்காட்டினர் பெண்ணிய உயர்வை அடைந்து விட்டார்களா என்பது கேள்விக்குறிதான். சாதியக் கட்டுமானத்தால் சாதியச் சிறையில் முடங்கிக் கிடக்கிறார்கள். ஆணாதிக்க அடிமைத் தனத்திலே அடங்கிக் கிடக்கிறார்கள். ஆண்களின் பாலியல் விதர்ப்பங்களுக்குத் தீனி போடுகிறவர்களாகவும், ஆண்களின் கைப் பொம்மைகளாகவும், அவர்கள்

சொத்துக்களுக்கு வாரிசுகளை உருவாக்குகிறவர்களாகவும், அலங்காரப் பொருட்களாகவும் காலம் காலமாக வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, இவர்களில் பலரிடம் சமூக உளவியல் முதிர்ச்சி (Psycho-Social Maturity) மிகக் குறைவாகக் காணப்படுகிறது.

தனிமனிதச் சுதந்திரம், சுய சிந்தனை, தன்மானம், தன்மதிப்பு போன்ற மதிப்பீடுகளுக்குப் பதிலாக, சாதியத் திமிர், அல்லது பெருமை, குடும்பக் கௌரவம், நகை நட்டு, பட்டுப் புடவை போன்ற போலி மதிப்பீடுகளால் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். மேல் தட்டு முதலாளிகளின் பொருட்களை விற்பனை செய்யும் விளம்பரதாரர்களாகவும், அவர்களுக்குப் பணம் சம்பாதித்துக் குவிக்கும் திரைப்படக் கருவிகளாகவும் பலர் மாறுகிறார்கள்.

### ஆ. பொருளாதார நிலை:

இந்தியாவின் மேல் தட்டு வர்க்கமாகிய 10 விழுக்காட்டினர் நாட்டின் 70 விழுக்காட்டுச் சொத்தை அபகரித்துள்ளார்கள் என்று சமூக இயல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். இவர்கள் மேல்சாதியினர். இச் சாதியப் பெண்களுக்குக் கோடிக்கணக்கான சொத்துக்களும், நகைகளும், ஆயிரக்கணக்கான நிலங்களும், பல மாடிக் கட்டிடங்களும் பரம்பரைப் பரம்பரையாக இருந்து வருகின்றன. இவர்கள் சொத்து மலைமேல் அமர்ந்து கொண்டு பெண்ணியம் பேசுபவர்கள்.

நம் நாட்டில் நடுத்தர வர்க்கம் 20 விழுக்காடு இதில் 10 விழுக்காட்டினர் பெண்கள் என்றால் இவர்கள் நாட்டின் 20 விழுக்காடு சொத்தைப் பங்கு போட்டுள்ளார்கள். இவர்களுக்கு நூறு ஏக்கர் அளவில் சொத்துக்கள். இலட்சக்கணக்கில் நகைகள், பட்டுப் புடவைகள், பல பங்களாக்கள், எடுபிடி வேலை செய்ய பல வேலையாட்கள். இவர்கள் சொத்துக் குன்றுகள் மேல் அமர்ந்து பெண்ணியம் பேசுபவர்கள். நடுத்தர வர்க்கப் பெண்கள் மேல்தட்டு வர்க்கப் பெண்களோடு கைகோர்த்துக் கொண்டு பெண்ணியப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### இ. அரசியல் நிலை:

மேல்தட்டு, நடுத்தர வர்க்க, மேல்சாதிப் பெண்களின் குடும்பத்தார், கணவன், மகன், பேரன்கள் கைகளில் தானே இன்றைய அரசு இயந்திரம் இருக்கிறது. இந்த அரசியல் பலத்தில் தான் இந்தப் பெண்கள் தங்களுக்கு வேண்டிய எதையும் சாதித்துக் கொள்கிறார்கள்.

இப்பெண்களுக்கு நேரடியான அரசியல் அதிகாரமோ, அரசியல் தெளிவோ, அரசை நிர்வாகம் செய்யக் கூடிய ஆற்றலோ இவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசின் ஆதரவு, சலுகைகள், பாதுகாப்பு இவையனைத்தும் இவர்களுக்குண்டு.

**ஈ. இந்தியப் பெண்ணியம்:**

இந்த மேல் சாதிப் பெண்களில் சிறிது தெளிவு பெற்றவர்கள் அரசியல் அதிகாரத்தில் சமபங்கீடு கேட்டுப் போராட்டப் பெண்ணிய கூட்டத்தைச் சேர்த்துள்ளார்கள். நடுத்தர வர்க்கப் பெண்களையும் அடித்தட்டு வர்க்கப் பெண்களையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். இறுதியில் அரசியல் சக்தியை நேரடியாகப் பெற இருக்கிறார்கள்.

இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள தலித் பெண்களைப் பற்றி அக்கறை கொண்டவர்களா? தலித் பெண்களின் வேதனைகளும் கொடுமைகளும் இவர்களுக்குத் தெரியுமா? இந்தியப் பெண்ணியம் பேசுவோர் தலித் பெண்களின் விடுதலையை உள்ளடக்கியதாகப் பெண்ணியம் பேசுகிறார்களா? இக்கேள்வியோடு தலித் பெண்களையும் தலித் பெண்ணியத்தையும் நாம் பார்க்க வேண்டும்.

**3. தலித் பெண்கள்:**

மேலை நாட்டுப் பெண்களையும் இந்திய மேல் சாதி, மேட்டுக் குடிப் பெண்களையும் பார்த்து விட்டுச் சமூகத்தின் கீழ்த் தட்டில் கிடக்கிற தலித் பெண்களைப் பார்க்கிற போது வேற்று மனித இனத்தையே காண்பது போலிருக்கிறது. அவர்களின் பொருளாதார அரசியல், சமூக நிலைமை என்ன? அதன் அடிப்படையில் தலித் பெண்ணியம் எப்படியுள்ளது?

**அ. பொருளாதாரச் சூழல்**

தலித் பெண்களில் 80 விழுக்காட்டினர் கிராமங்களில் கிடக்கின்றனர். இவர்களில் பெரும் கூட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், கூலி விவசாயிகள்.

மேல் சாதி அரசாங்கம் இவர்களைக் கணக்கில் எடுக்காமலே பசுமைப் புரட்சி, புதிய பொருளாதாரக் கொள்கை, நவீனமயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல், உலக மயமாக்கல் என்ற பெயரில் பெரும் பாதிப்பைத் தலித் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. வேலையற்றவர்களாக, உயிர் வாழ்வதற்கு ஆதாரமற்றவர்களாகத் திரிகிறார்கள்.

பணமின்மை, கொடிய பட்டினி, நோய், இளமைக் காலத்தில் இறப்பு, பிரசவ நேரங்களில் போதிய சத்துணவு இன்மை, பிறந்த குழந்தைகளுக்குப் பாலூட்ட முடியாமை, சோகை, அயோடின் குறைவு.... போன்ற கொடுமைகளைக் கிராமங்களில் காண்கிறோம்.

அவர்களின் வாழிடங்கள் பொதுவாகக் குப்பம், காலனி, சேரிகளாகப் போதுமான சுகாதார வசதியின்றி, நெருக்கடி, மலஜலம் சூழ்ந்து, மழை நீர் தேங்கி நோய் நொடிகள் பறவும் இடமாக உள்ளன.

இலவச சேலைகளை அணிந்தவர்களாய், கந்தலைச் சுற்றிக் கொண்டு, குளிருக்கு மாற்றுத் துணியில்லாதவர்களாய் நடுங்கிக் கொண்டிருப்பதைக்

காண்கிறோம். இதனால் நிமோனியா, சுவாசக் குழாய்ப் பாதிப்பு போன்ற நோய்களுக்குப் பலர் ஆளாகிறார்கள்.

**ஆ. சமூக சூழல்**

மேல் சாதியினரால் தீண்டத்தகாதவளாக, தாழ்த்தப்பட்டவளாக நேரடியாகவோ, மறைமுகமாகவோ நடத்தப்படுகிறாள். கல்வியறிவு மறுக்கப்பட்டு படிப்பறிவற்றவளென ஏளனமாகக் கருதப்படுகிறாள். மேல் சாதியினரின் ஆதிக்கத்தில் இருக்கும் சமயங்கள் இம்மக்கள் விடுபடாமலிருக்க மூடப் பழக்க வழக்கங்களையும், விதிக்கோட்பாடுகளையும், மறு உலக வாழ்வு, மறு பிறப்புக் கொள்கைகளையும் ஏற்படுத்தி, இவர்களை ஏமாற்றித் தங்கள் பிரச்சனைகளை இவர்கள் ஆய்வு செய்யவோ, தீர்வு காணவோ முயற்சிக்காமல் தடுக்கின்றன.

மேல்தட்டு வர்க்க ஆணாதிக்கத்தை உள் வாங்கிய தலித் ஆண்களாலும் பிறராலும் ஆணாதிக்கத்தின் கொடுமைகளை அனுபவிக்கிறார்கள் தலித் பெண்கள்

**இ. அரசியல் நிலை:**

தலித் பெண்களின் குடும்பத்தாரோ, கணவன்மார்களோ, பிள்ளைகளோ அரசியல் அதிகாரம் பெற்றிருக்கிறார்களா? சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேல்சாதிக் கட்சிகளின் கைக்கூலிகளாக, தலித் மக்களின் ஓட்டுக்களை அவர்கள் கட்சிகளுக்குச் சேர்க்கும் கிளை ஓட்டு வங்கிகளாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

தலித் மக்கள் பொதுவாகத் தேர்தல் வாக்குறுதிகளை நம்பி தம் ஓட்டுக்களைக் குறைந்த கூலிக்கு விலை பேசுகிறார்கள். ஏமாந்தும் தம் ஓட்டுக்களை மேல் சாதிக் கட்சிகளுக்குப் போட்டு வருகிறார்கள்.

அரசு நிறுவனங்களில் கீழ்மட்ட வேலைகளாகிய பியூன், அட்டண்டர், துப்புரவுப் பணிகளில் அதிகம் இருப்பவர்கள் யார்? தலித்துக்களே. அரசின் நிர்வாகம், நிதி, நீதி, காவல் துறையில் எத்தனை விழுக்காட்டு தலித்துக்கள் பொறுப்பேற்று இருக்கிறார்கள்? ஏளனத்துக்குரிய முறையில் ஒருவர் இருவர். ஆகவே தான் அரசு உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. அரசியல் தெளிவும், நிர்வாகப் பங்கெடுப்பும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. காவல் துறையின் பாதுகாப்பு இவர்களுக்குக் கிடையாது.

**ஈ. தலித் பெண்ணிய வெளிப்பாடு:**

எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் உரிமைகள் மறுக்கப்பட்டு, உடைமைகள் பறிக்கப்பட்டு, பாதுகாப்பு அகற்றப்பட்டு, உயிர்வாழ அத்தியாவசியத் தேவைகள் வழங்கப்படாத கொடுமைகளை உணர்ந்துள்ள தலித் பெண்கள் தங்கள் பெண்ணியத்தைப் பிறரிடமிருந்து வித்தியாசமாக உருவாக்க வேண்டியுள்ளது.

தலித் பெண்ணியம் என்பது தலித் மக்களின் ஒட்டு மொத்த விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதாகும்.

சாதியற்ற சமூகத்தை இலக்காகக் கொண்டு சாதியத்தைத் தகர்ப்பதும் மாற்றுச் சமூகத்தை அமைப்பதுமாகும்.

தலித் தலைமையிலான அரசியலை நிறுவி அடித்தள மக்களை அரசியல் பங்காளர்களாக இணைப்பதாகும்.

தமது உட்சாதிப் பிரிவுகளை ஒருங்கிணைப்பதாகும்.

அடிப்படைத் தேவைகளை நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்குவதை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையை ஆதரிப்பதாகும்.

தலித் மக்களின் ஒட்டு மொத்த விடுதலைக்குக் கூட்டுச் சக்தியாக இணைந்து போராடுவதாகும்.

மறைக்கப்பட்ட உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதாகும்.

விடுதலை எழுச்சியை மங்கச் செய்யும் சமய, கலாச்சாரக் கூறுகளை இனங்காண்பதும் அழிப்பதும் மாற்றுக் கலாச்சாரத்தை உருவாக்குவதுமாகும்.

**முடிவுரை:**

தலித்தியப் பார்வையில் பெண்களைப் பார்த்திருப்பது போல் இச்சமூகம், பொருளாதாரம், அரசியல், கல்வி, கலாச்சாரம், சமயத்தையும், நாம் காணப் பழக வேண்டும். அத்தலித்தியப் பார்வையே மாற்றுச் சமூகத்திற்கு வித்திடும்.

கிறிஸ்துவ நிறுவனமாகிய இக்கல்லூரி கிறிஸ்துவின் மதிப்பீடுகளை மையமாகக் கொண்டிருக்கிறது. அவர் அவர் காலத்தில் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட சமாரியர், ஆயக்காரர், குஷ்டர், விலை மாதர் போன்றோரின் பார்வையில் சமூகத்தின் கொடுமையைக் கண்டார். யூதன் என்ற மேல்தட்டு இனத்தைச் சார்ந்தவர் தன்னை அடிமட்ட மக்களோடு ஐக்கியமாக்கிக் கொண்டு அவர்களுக்காக, அவர்கள் மீட்புக்காகக் குரல் கொடுத்தார் அதுவே புதிய சமுதாயத்திற்கு வித்திட்டது. அவர் இந்நிறுவனத்திற்கு என்றும் சவாலாக இருக்கிறார்

# ''உளவியல் நோக்கில் பெண்''

டாக்டர் ந. மாத்ருபூதம்
மனநல மருத்துவர், சென்னை.

''ஆறும் அது ஆழமில்லை... அது சேரும்
கடலும் ஆழமில்லை. ஆழம் எது ஐயா.
அந்த பொம்பளை மனசுதான்யா.''

''கடலாழம் கண்ட பெரியோரும் பெண்கள்
மனதாழம் காண முடியாது.''

மேற்கண்ட திரை இசைப் பாடல்களின் வரிகள், பெண் மனது புரிந்து கொள்ள முடியாதது. அதுவும் அது ஒரு பெண்ணிற்காவது ஓரளவு புரியும். ஆனால் புரிந்து கொள்ள முடியாதது'' என்ற அளவில் தான் எல்லோராலும் பேசப்படுகிறது.

ஆனால் பல பிரச்சனைகளைச் சுமந்து வரும் பெண்களைப் பார்த்து, அவர்கள் மனம்படும் பாட்டை, மனநல மருத்துவர் என்ற நோக்கில் என்னால் ஓரளவு அறிய முடிகிறது.

பெண்ணின் உணர்வுகள், அதனைச் சார்ந்த எண்ணங்கள், அதையடுத்த அவளின் செயல்பாடுகள், முடிவில் அதுவே பழக்கவழக்கமாக மாறி அவளது நடை உடை பாவனையாக அமைகிறது. இதுவே ஒரு பெண்ணின் ஆளுமை அமைய வழிகோலுகிறது என்றும் கூறலாம்.

கலாச்சாரம் சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்கள், பெண்ணைப் பற்றிய மற்றவரது கணிப்பு ஆகியவையும் சேர்ந்து அவளை உருவாக்குகிறது. என்றாலும் அதுவும் ஒரு விதத்தில் சரியே ஆகும். பெண் மனதளவில் மென்மையானவள். பெண்மை என்றாலே மென்மை என்ற அளவிற்குக் கூறப்படுகிறது. ஆனால் சில சமயம் அவள் நீறுபூத்த நெருப்பாக இருப்பது யாருக்கும் தெரிவதில்லை. அவள் உணர்வில் ஆணிடமிருந்து வேறுபட்டவள் என்றும் நம்பப்படுகிறது. இது முற்றிலும் உண்மையல்ல. ஆணானாலும், பெண்ணானாலும் அவர்களுக்கு ஆக்கப்பூர்வமான உணர்வுகளும் உண்டு; அழிவுபூர்வமான உணர்வுகளும் உண்டு; ஆனால் அதன் வெளிப்பாட்டில் இருபாலாருக்கும் வித்தியாசங்கள் உண்டு.

இதற்குக் காரணம், சமுதாயம் பெண் என்றாலே அவளது மனப்பாங்கு எப்படி இருக்க வேண்டும் என வரையறுத்துக் கூறி வந்திருக்கிறது. பெண் எளிதில் நெகிழ்ந்து போகும் குணமுடையவள். ஆனால் அவள் தனது மனத்தை மற்றவருக்கு எளிதில் காட்டுவதில்லை. உணர்ச்சி வசப்பட்டாலும் அவள் அதை வெளிக்காட்ட தயங்குவாள். நேரம் எடுத்துக் கொள்வாள். அதே போல் தனது உள்ளக் கிடக்கையை எல்லோரிடமும் வெளிப்படுத்துவதில்லை. எல்லா

தருணத்திலும் வெளிப்படுத்துவதில்லை. புதைந்து கிடக்கும் பொருள் போல அவளது அடி மனத்தில் பல எண்ண அலைகள் பவனி வருகின்றன. ஆனால் சில சமயம் மனவேதனை தாளாத போது அது கடுமையாகப் பொங்கி எழும் தன்மை வாய்ந்ததாக உள்ளது. சாதாரணமாக கோபம் அவர்களுக்கு வந்தாலும் அதன் தீவிரம் ஆண்கள் அளவுக்கு இருப்பதில்லை. ஆத்திரம் வந்து ஆண்கள் சத்தம் போடுவது போல, ஆக்ரோஷமாகச் சண்டை போடுவதுபோல், வன்முறையைக் கையாளுவது போல், பெரும்பாலும் பெண்கள் செய்வதில்லை.

ஆனால் அவர்களது மௌனம், அதனோடு சேர்ந்த போராட்டம், மௌனத்துடன் கூடிய ஆக்ரோஷம், (Passive Aggression) என்ற அளவில் அந்தக் கோபம் வெளிப்படுகிறது. ஆனால் தன் சுயமரியாதை பாதிக்கப்படும் போது, தான் சிறுமைப்படுத்தும் போது முடிந்தவரை பொறுமையைக் காக்கும் பெண்கள், அதற்குப் பின் வெகுண்டு எழுகிறார்கள். மொத்தத்தில் ஆண்கள் தொடர்ந்து வெடிக்கும் பட்டாசு என்றால், பெண் ஒரு அமைதி காக்கும் எரிமலை என்று கூறலாம். ஆதலால் அவள் கோபம் எல்லை மீறிப் போகுமுன் ஆண்கள் கவனமாக இருக்க வேண்டும். முன்பெல்லாம் கொலையும் செய்வாள் பத்தினி எனக் கூறுவார்கள். அதாவது தனது கற்புக்குப் பங்கம் வந்தால் பெண் கொலையும் செய்வாள் என்று தான் அதற்குப் பொருள். ஆனால் காப்பாற்ற வேண்டிய கணவன் தன்னைத் துன்புறுத்தினால், தனக்குத் தெரிந்தே துரோகம் செய்தால் அதை இக்காலப் பெண் பொறுக்க மாட்டாள். அவனையே நேரடியாக தண்டிக்கத் துணிந்தவளாக இன்று உலாவருகிறாள். தனக்கு வேண்டியதைக் கணவரும், மற்றவர்களும் தீர்மானித்தால் போதும் என்று ஒரு காலத்தில் கட்டுப்பெட்டியாக இருந்த பெண், இப்போது தன் உரிமையைக் கோர ஆரம்பித்திருக்கிறாள். அதைப் போராடி பெறவும் அவள் தயங்குவதில்லை.

ஒரு காலத்தில் அவள் என்ன செய்ய வேண்டும், எந்த உடை உடுத்த வேண்டும், படிக்கலாமா, வேலைக்குப் போகலாமா என்பதையெல்லாம் அவர்களுக்காக மற்றவர்கள் தீர்மானித்தனர்.

ஆலமர நிழலில் அண்டி நிழல் பெற்றால் போதும் என்ற நிலை மாறி, தானும் ஆலமரமாக உருவாக வேண்டும் என முற்போக்கான எண்ணம் கொண்டவளாக இருக்கிறாள், பெண். உடையில் மாற்றம், நாகரிகம் என்றால் என்ன என்பதில் சுதந்திரம், சமத்துவத்தில் அக்கறை, அது கிட்டாவிட்டால் போராட்டம் என்ற அளவில் பெண் சமுதாயம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

திருமணத்திற்கு முன் சுதந்திரமான வாழ்க்கை பெரும்பாலும், புகுந்த வீட்டில் பறிபோக வாய்ப்புண்டு என்பது மாறி, புகுந்த வீட்டிலும் தேவையானால் தனது சுதந்திரத்திற்காக மற்றவரது சுதந்திரத்திலும் பங்கு கேட்க இப்பொழுது துணிவாக உள்ளாள்.

எந்த வேலையானாலும் சரி ஆணுக்குப் பெண் சமம் என்ற ரீதியில் பெண்ணால் போட்டி போட முடிகிறது. காலங்காலமாய் அழிக்கப்பட்டு வந்த எண்ணங்கள், ஆசைகள், எழுச்சி பெற்று, ஒரு பெண்ணே பல ஆண்களை அடக்கி, ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு, அவளுக்கு வாய்ப்புகளை, தானாகவே தேடிக் கொள்ள பெண்ணால் இப்போது முடிகிறது.

முதலில் ஒரு கட்டுப்பாடான வரம்புகள் வகுக்கப்பட்ட சூழ்நிலையில் பெண் வாழ நேர்ந்தது. பின்பு அந்த வரம்பு எது என்பதை பெண்களே நிர்ணயம் செய்யும் காலம் இருந்தது. இப்போது ஆண் வரம்பை மீறினால் குற்றமில்லை. பெண் மீறினால் மட்டும் குற்றமா என்று எண்ணும் அளவுக்கு ஒரு தேவையற்ற துணிச்சல் சில பெண்களிடமாவது காணப்படுகிறது. இது பெண்ணின் சுய மரியாதையைக் கூட பாதிக்கவல்லது. துக்கம் என்னும் உணர்வை ஆண்களை விட பெண்கள் அதிகம் வெளிப்படுத்தக் கூடியவர்கள் என்று நினைக்கிறோம். சிறு துக்கமானாலும் உடனே கண்ணீர் மூலமாகவோ, மற்ற விதத்திலோ வெளிப்படுத்துவது பெண்களிடையே அதிகம். இது அவர்களுக்குத் தன் மேல் ஏற்படும் வெறுப்பு, மற்றவர்களிடத்தில் ஏற்படும் வெறுப்பு, மற்றபடி ஆண்களை எதிர்க்க முடியாத ஒரு இயலாமையின் வெளிப்பாடாக அமைகிறது. அதோடு ஆக்ரோஷமான ஆணும், பெண்ணின் கண்ணீருக்கு இரக்கம் காட்டி, அவர்கள் விருப்பப்படி நடக்க முற்படுவான் என்ற நப்பாசையும் இதற்கு ஒரு காரணம்

கணவனின் கொள்கையே தனது கொள்கை, அவனைக் கவனிப்பது தன் வேலை, மற்றபடி குடும்பத்தைப் பாதுகாப்பது அவன் வேலை என்ற நிலைமையும் இப்போது மாறி வருகிறது. பெண் சில குடும்பங்களில் ஆணை விட அதிகம் சம்பாதிக்கிறாள். இருந்தும் அவளுக்குப் பொருளாதார சுதந்திரம் பல சமயம் கிடைப்பதில்லை. இதை எதிர்த்து, குரல் கொடுத்து, தன் உரிமையை நிலை நாட்டிக் கொள்ளும் பெண்கள் அதிகமாகி வருகின்றனர். ஆனால் இன்னும் பலரும் தம் இயலாமையை நினைத்து வேதனைப்படுவதும் உண்டு. மேடையில் ஆணுக்குப் பெண் சமம் என்று முழங்கினாலும், பல வீடுகளில் பெண் எப்படி ஆடை உடுத்த வேண்டும், யாரோடு பழக வேண்டும், எப்படி ஆணுக்கு அடங்கி, மாமியார் சொல்படி நடக்க வேண்டும் என்ற நிலைமையே இன்னும் உள்ளது.

தன் பெற்றோர்கள் கஷ்டப்பட்டாலும், தான் சம்பாதிப்பது, கணவன் வீட்டிற்கே என்ற நிலைமை பெரும்பாலும் இன்னும் மாறவில்லை. ஆனால் நகர்புறங்களிலாவது துணிச்சலாக தன் பிறந்த வீட்டிற்கும் உதவ வேண்டும் என்று பெண்கள் விழைகிறார்கள். ஆனால் அதே சமயம், தன் வீட்டிற்குக் கணவனும் தன் மனமுவந்து உதவ வேண்டும், ஆனால் அந்த ஆண் தன் பெற்றோர்களைக் கவனிப்பது தவறு என்ற ரீதியில் பேசும் பெண்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

தாம்பத்ய உறவில் இப்போது படித்த பெண்கள், விபரம் அறிந்தவர்கள், ஆணிடம் தன் எதிர்பார்ப்பை வெளிப்படுத்த தயங்குவதில்லை. சுதந்திரமாக ஆண்களுடன் பழக வேண்டும், அதில் ஓரிரு முறை தவறாக நடந்தாலும், அதைப் பெரிதுப்படுத்த தேவையில்லை என்ற வீணான தைரியம் குறைந்த விழுக்காடு பெண்களுக்கு இருக்கிறது. ஆனால் இவர்கள் எண்ணிக்கையில் குறைவானாலும், முன்னுதாரணமாக அமைய முடியாது. அப்படி அமைந்து விட்டால் கலாச்சார சீரழிவு ஆரம்பம் என்று கொள்ளலாம்.

திறமையில் ஆண் தனக்கு மிஞ்சியவன் இல்லை என்று உணர்ந்து தன்னம்பிக்கையுடன் வாழ்வில் பல துறைகளில் சாதனைப் படைக்கும் மனப்பான்மை பெண்களிடையே அதிகம் வளர்ந்துள்ளது. இது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் இன்னும் பெரும்பாலானவர்கள், அடங்கி கிடப்பதே கலாச்சாரம், ஆசைகளை வெளிப்படுத்துவது கூட அநாகரிகம் என்ற கட்டுப்பெட்டி போர்வையில் தான் முடங்கி கிடக்கின்றனர்.

''பெண்ணாகப் பிறந்தாலே இழிவு'' என்ற தாழ்வு மனப்பான்மையால் பீடிக்கப்பட்டு, பெண் சிசுவைக் கொல்லும் அளவு தாய்மை, பெண்மை இழந்து அவர்களே நினைத்து செயல்படும் அவலமும் இன்னும் தொடர்கிறது.

இரவில் தனியே ஒரு பெண் ஆபரணங்களுடன் பயமின்றி செல்ல முடிந்தால் தான், நமக்கு உண்மையான சுதந்திரம் எனக் காந்தியடிகள் கூறினார்.

பழைய பழக்கவழக்கங்கள் பத்தாம்பசலித்தனமானவை (உதாரணமாக) கடவுளை அர்ச்சித்து பூசிப்பது கூட கோயில்களில் ஆணின் உரிமை மட்டுமல்ல தானும் அதே மாதிரி செயல்பட தடையில்லை என்று கூறும் பெண்கள் அதிகரித்து வருகின்றனர்.

அன்றும், இன்றும் படாடோபமில்லாமல் அமைதியாகப் பல பொதுச் சேவைகளை செய்யும் மனப்பாங்கு பெண்களுக்கு அதிகம் என்று நினைக்கிறேன். ஆனால் பெண்ணுரிமைக்காகக் கூட அதிகம் ஆண்கள் குரல் எழுப்ப வேண்டி உள்ளது. பெண்ணுரிமைக் காக்கிறோம் என்ற பெயரில் குருட்டாம்போக்கில் ஆண் சொல்வதையெல்லாம் தவறு என்ற மனோபாவமும் சிலருக்கு இருக்கிறது.

மனமுதிர்ச்சி என்று எடுத்துக் கொண்டால், அது ஆணை விட சிறிய வயதிலேயே பெண்ணுக்கு ஏற்பட்டு விடுகிறது. குடும்பம் ஒரு ''அமைப்பு'' (Institution) அதைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கே ஆணை விட அதிகமாக இருக்கிறது. ஆண் துணையின்றி கூட தன்னால் குடும்ப பாரத்தைச் சுமக்க முடியும் என்ற தன்னம்பிக்கை அவளுக்கு வளர்ந்திருக்கிறது. வாழா வெட்டியாக இருப்பதைவிட வெட்டியாக வாழ்வதே கேவலம் என்ற முற்போக்கான எண்ணம் வளர்ந்து வருகிறது. நான் பார்த்த சிலர், மனம் ஒத்துப்போகவில்லை, ஆதலால் நாங்கள் கணவன் மனைவியாய் தொடர்வதில் அர்த்தமில்லை எனத் துணிச்சலோடு சொல்லும் அளவுக்குப் பெண்கள் புதுமையோடு உருவெடுத்து வருகிறார்கள்.

ஜாதியைக் கடந்த காதல்கள் பூவிடும் போது, ஆணை விட பெண் துணிச்சலாகச் செயல்படுகிறார்கள். ஆனால் சூழ்நிலை கைதியாகி அவளால், அந்த எண்ணத்தைச் செயலாக்க மிகவும் கஷ்டப்பட வேண்டி உள்ளது.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பது பெண்களின் கடமையல்ல, சில விஷயங்களில் விட்டுக் கொடுக்காமல் இருப்பது அவர்களது உரிமையென்று முழங்கும் பெண்கள் அதிகமாகி வருகிறார்கள். கைம்பெண் திருமணம், விவகாரத்துக்குப் பின்னும் வேறு வாழ்க்கை அமைத்துக் கொள்வது

என்ற முற்போக்குச் சிந்தனை, செயல்பாடுகள் பெண்களிடம் அதிகம் காணப்படுகிறது

ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் என்பதை விட ஆணை முன்னின்று வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வது தான் தனக்குப் பெருமை என்று பெண்கள் நினைக்க ஆரம்பித்து விட்டனர்.

குழந்தைகளுக்காக அவர்களது எதிர்காலத்தை முன்னிட்டு எந்தவித தியாகத்தையும் செய்ய பெண் இன்றும் துணிவுடன் தான் இருக்கிறாள்.

கற்பாக இல்லாவிட்டால் பாவம், பின்பு கற்பாக இல்லாவிட்டாலும் குற்றம், என்ற நிலை மாறி கற்போடு இல்லாவிட்டால் ஆபத்து என்ற நிலையைப் பெண்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

மொத்தத்தில் பெண்ணின் சுதந்திரம் உணரப்பட்டு விட்டது. அதை வெளிப்படுத்தி அனுபவிக்கும் எண்ணங்களும், செயல்களும் வளர ஆரம்பித்து விட்டன. பெண் எந்த வரம்புக்குள் இயங்க வேண்டும் என்பதை முன்பு ஆண்கள் தீர்மானித்து வந்தனர்.

அதுவே சமுதாய கோட்பாடாக நிலவி வந்தது. இப்போது பெண்ணிற்கே அந்த வரம்புகளைத் தீர்மானிக்கும் சுதந்திரம் கிட்டியுள்ளது. தனக்குத் தன் மனச்சாட்சியே வேலி என்பது போல, பெண் சரிவர நடந்து கொண்டால் குடும்பம் குதூகலமாக இருக்கும். அவளது பெருமை உயரும். குழந்தைகள் நல்ல குடிமகன்களாக உருவாக அதிக வாய்ப்புண்டு. வாய்ப்புகள் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமான நிலை மாறி, வாய்ப்புகளை அடைய அவர்கள் செல்ல முயன்ற காலமும் கடந்து, அவர்களை நோக்கி வாய்ப்புகள் வர ஆரம்பித்து விட்டன. அவளுக்கு அவளே வழிகாட்டி என்ற நிலையில் உள்ள போது, அதையொட்டிய தார்மீகப் பொறுப்புகளும் அவளுக்கு அதிகமாக உள்ளன. அதை உணர்ந்து நடந்து கொண்டால் தாம்பத்யம் சங்கீதமாகும் குடும்பம் தழைத்தோங்கும். பெண்மை மிளிரும். கலாச்சாரம் மேன்மை பெறும். சமுதாய விழிப்புணர்ச்சி அதிகமாகும். அஃதின்றி பெண்ணுரிமை என்ற பெயரில் ஆணுக்குப் பாடம் புகட்டுவது போல, எல்லா மரபுகளையும் பெண் மீறுவதை விட ஒரு துர்பாக்கியம் வேறொன்றும் இருக்க முடியாது.

அதே சமயம் பழங்கால மூடபழக்க வழக்கங்களாலும், படிப்பின்மையாலும், கட்டுப்பெட்டி வாழ்க்கையாலும் அவதியுறும் பெண்கள் இன்னும் நிறைய பேர் குறிப்பாகக் கிராமங்களில் உள்ளனர்.

இந்த இரு துருவங்களான பெண்களிடையே காணப்படும் பள்ளம் போன்ற மாறுபாடு குறைந்து அனைவரும் சுதந்திரமாக, தன்னம்பிக்கையோடு, சமுதாயக் கோட்பாடுகளுக்குள்ளாகவும், கட்டுப்பாடுகளைப் பண்பட்டதாக, நாகரிகமானதாக வளர்க்கவும் பாடுபட்டு, கலாச்சார வளர்ச்சிக்கு ஆவன செய்ய பெண்களே தானாகவும், மற்றவர்கள் உதவியோடும் செயல்பட்டால் அதுவே விவேகம். அதுவே நாட்டின் நலத்திற்கும் வழிகோலும். இதைப் பெண்களே முன்னின்று செய்வார்களா!

# உயிரியல் நோக்கில் பெண்

டாக்டர் சுதா சேஷய்யன், எம்.எஸ்.,
கூடுதல் பேராசிரியர், உடற்கூற்றியல் துறை,
அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.

''பெண்'' என்கிற பகுப்பு, ''பெண்கள்'' என்கிற பிரிவு அடையாளம் காணப்படுவதன் அடிப்படை, உயிரியல் ரீதியானதாகும். உயிரியல் காரணிகள் தாம் ''பெண்'' என்கிற தனிப்பிரிவைத் தோற்றுவிக்கின்றன.

உயிரியல் ரீதியாகக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த அடையாளம், பல சமயங்களில் உயிரியல் காரணங்களாலேயே தாழ்வுபடுத்தப் பட்டிருக்கிறது.

(அ) உயிரியல் ரீதியாகப் பெண்ணின் நிலை,

(ஆ) அதனால் ஏற்பட்ட, ஏற்படுகிற சமூக முறைமைகள் மற்றும் அமைப்புகள்,

(இ) பெண்ணிய இயக்கங்களில் உயிரியல் நோக்கு செயல்பட்டுள்ள விதம்,

(ஈ) பெண்ணிற்குத் தரப்படுகிற உயிரியல் அடையாள மும்மை (தாய் - மகள் - பெண்)

(உ) ஆணுக்கும் பெண்ணுக்குமான உயிரியல் வேறுபாடுகள்

(ஊ) இந்த வேறுபாடுகள் தோற்றுவிக்கக் கூடிய விளைவுகள்

ஆகியவற்றை ஆராய்வதும், அவற்றின் விளைவாக இனி வரும் காலங்களில், உயிரியல் அடையாளத்தை மேன்மைபடுத்தி, பெண்ணிற்குக் கொடுக்கப்பட வேண்டிய இடம் குறித்துச் சிந்திப்பதும், இக் கட்டுரையின் நோக்கம்.

## அ. உயிரியல் ரீதியாகப் பெண்ணின் நிலை

**உயிரியல் ரீதியாக, ஒரு பெண்ணின் நிலை யாது?**

இந்த வினாவிற்கு விடை காண முற்படுகையில், உயிரியல் காரணிகள் தாம், பெண் - ஆண் என்ற பிரிவுகளுக்கு அடிப்படை என்பதை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆண், பெண் என்கிற அடையாளங்கள் ''உயிரியல் அடையாளங்களே!'' (Biological identities)

★ உடல் மற்றும் உடல் உறுப்புகளின் அமைப்பு, அவற்றின் இயக்க முறைமைகள், ஆகியவை ஒரு பெண்ணைத் தனி அடையாளத்திற்கு உட்படுத்தக் கூடிய உயிரியல் காரணிகள்.

★ உடல் அமைப்பு மற்றும் உறுப்புகளின் இயக்கம் ஆகியவை காரணமாக, வம்சாவழியினரை உருவாக்குவதிலும் பேணுவதிலும் பெண்ணினுடைய பங்கு மிக இன்றியமையாததாகிறது.

★ உடல் உறுப்புகளில், அவற்றின் அமைப்புகளில் சில மாற்றங்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ளன. உயரம், உடல் எடை, தசை வலு, எலும்புகளின் அடர்த்தி, ஆகியவை ஆணைவிடப் பெண்ணுக்குக் குறைவு. தோற்றத்திலும் அமைப்பிலும் பெண், ஆணைக் காட்டிலும் சிறியவளாகக் காணப்படுகிறாள். உருவிலும் வடிவிலும் குறைந்தவளாகத் தோற்றம் தருகிறாள்.

இந்த வேறுபாடுகள் பெண்ணைப் பலவீனமானவளாகக் காட்ட முற்படுகின்றன

★ உடல் அமைப்பு முறையால், கரு உருவாகிக் குழந்தையாக வளர, அக்கருவைத் தனக்குள் பேணிப் பாதுகாத்து, குழந்தையைப் பெற்று, வளர்க்கிற பொறுப்பையும் பெண் தாங்குகிறாள். உயிரியல் ரீதியாக அமைகிற இந்தத் தொடர்பு, அடுத்த தலைமுறையை வளர்க்கிற பொறுப்பை அவளுக்கு அளிக்கிறது. இதனுடைய விரிவாகவே, குடும்பத்தில் உள்ள மற்றவர்களையும் (வயது முதிர்ந்தவர்கள், தன்னொத்த வயதினர், உடல் நலம் குன்றியவர்கள் என்று யாராயினும்) பேணுகிற பொறுப்பையும் அவள் ஏற்கிறாள்.

## ஆ. சமூக அமைப்புகள்

### பெண்ணின் நிலை கொண்டு ஏற்பட்ட சமூக அமைப்புகள்

**(அ) இனப் பெருக்கத்தில், ஆண்-பெண் ஆகிய இருவரின் பங்கும் உண்டு. இருப்பினும், வம்சாவழி உருவாக்கத்தில் வெளிப்படையான பொறுப்பு பெண்ணிடமே காணப்படுகின்றது.**

★ ஒரு கருவைத் தாங்கிக் குழந்தையாகப் பெற்று வளர்க்கிற பொறுப்பு, உடல் அமைப்பு ரீதியாகப் பெண்ணைச் சேருகிறது. உயிரியல் ரீதியாக அமைகிற இந்தத் தொடர்பு, வம்சாவழியை உருவாக்குவதில் பகிரங்க முக்கியத்துவத்தைப் பெண்ணுக்கே அளிக்கிறது. தாயை உயிரியல் ரீதியாக, உயிரியல் நேரடித் தொடர்பு காரணமாக அடையாளம் காணலாம். தந்தையை அடையாளம் காண, ஒன்று, தாய் சொல்ல வேண்டும்; இல்லையெனில், வேறு பரிசோதனைகளைக் கையாள வேண்டும் (நவீன அறிவியல் யுகத்தில், இப்பரிசோதனைகள் நடைபெறலாமேயன்றி வரலாற்றின் தொடக்க காலங்களில் இவை சாத்தியப்படவில்லை) எனவே தான், தாய் - குழந்தைத் தொடர்பு உயிரியல் ரீதியாக வெளிப்பட்டதன் விளைவாகவே, **''தாய் வழிச் சமூகங்கள்''** அமைந்தன.

தனி மனிதர்கள் ஒன்றுபட்டுக் கூட்டு வாழ்க்கை வாழத் தொடங்கி, சமுதாய அமைப்பு மலரத் தொடங்கியவுடன், முதலில் ஏற்பட்டது ''தாய் வழிச் சமூக'' அமைப்பேயாகும்.

**(ஆ) இவ்வாறு தாய்வழிச் சமூகமாக அமைந்த கூட்டு வாழ்க்கையில் அடுத்து என்ன நடந்தது?**

உடல் பலத்திலும் தசை வலுவிலும் ஆண் அதிகப்படியான ஆற்றல் பெற்றவன் என்ற எண்ணம் கூட்டு வாழ்க்கையில் வலுப் பெறத் தொடங்கியது

★ காட்டுப்புறச் சூழலில், வனவிலங்குகளிடமிருந்து ஏற்படக் கூடிய தாக்குதல் ஆங்காங்கே, இருக்கக் கூடிய கட்டை, செடி கொடி தழை இவற்றை வைத்துக் கொண்டு வாழும் போது திடீர் திடீரெனத் தோன்றக் கூடிய இயற்கைச் சீற்றங்கள்; இத்தகைய பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு நல்க, ஆணினுடைய உடல் பலம் பயன்படத் தொடங்கியவுடன், பெண் மெல்ல மெல்ல பலவீனமானவள் ஆனாள்.

★ இதற்கிடையில், பெண்ணுக்கு, குழந்தைகளையும் கூட்டத்தாரையும் பேணுகிற பொறுப்பு பெருகியது குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், உடல் நலம் குன்றியவர்கள் ஆகியவர்களைக் கவனித்துக் கொள்கிற பெண், தேவையான உணவு மற்ற பொருட்களையும் சேமித்து வைத்திருப்பாள். எனவே, குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மூட்டை முடிச்சுகளைச் சுமந்து கொண்டு, உடனுக்குடன் ஓடவோ நகரவோ முடியாதவர்களாக இருக்கும் பெண்களை, ஆண்கள் பாதுகாக்கிற சூழல் உருவானது.

**இ. இவற்றின் விளைவுகள்:**

★ காட்டுப்புறத்தில் சுற்றித் திரிந்து, தன் கூட்டத்தார் வாழத் தக்கதொரு இடத்தை ஆண் தெரிவு செய்தான்.

★ கூட்டத்தாரை, அவ்விடத்தில் தங்க வைத்து விட்டு, தான் இன்னும் சுற்றியலைந்து உணவு முதலியன தேடத் தொடங்கினான்.

★ அவ்வாறு சுற்றி வரும் பொழுது, அப்பகுதிகளில் இருக்கக் கூடிய விலங்குகளைப் பற்றியும், ஆறு ஓடை போன்றவற்றால் ஏற்படக் கூடிய தாக்குதல்களைப் பற்றியும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஆணுக்கு அதிகமிருந்தது. இதனால், ''இங்கு போகலாம். அங்கு போகக் கூடாது'', என்று கூட்டத்தின் அடிப்படை வரை முறைகளை வகுக்கிறவனாகவும் ஆண் அமைந்து விட்டான்.

இப்படியாக, பெண்கள் அடங்கியவர்களாகவும், ஆண்கள் சட்டதிட்டங்களை வகுக்கிறவர்களாகவும் ஆனார்கள்.

**ஈ. பங்கீட்டுப் பொறுப்புகள்:**

★ பெண், குழந்தைகளையும், குழுவினரையும், முதியோர்களையும் பேணிப் பாதுகாக்கிற நிலையில், அவளின் கவனமும் நோக்கமும் குழுவின் உள் நிலவிய அக்கரையானது (Internal Concentration). அந்தத் தருணத்தில், அந்தக் கூட்டத்தின் அல்லது குழுவின் வெளிப்புறப் பாதுகாப்பு, வெளிப்புறச், செயல்பாடுகள் ஆகியவற்றைப் பங்கீட்டு முறையில் ஆண் ஏற்கத் தொடங்கினான்.

இவ்வகையில் வெளிப்புறப் தொடர்பு, பாதுகாப்பு, உடல் வலு ஆகிய காரணங்களால் ஆண் பலமானவனாகவும், பெண் பலவீனமானவளாகவும் எண்ணப்பட்டார்கள் (அல்லது வெளிப்பட்டார்கள்). விளைவாக, ஆணினுடைய ஆதிக்கம் அதிகப்படத் தொடங்கியது.

★ எந்த உயிரியல் காரணி, பெண்ணுக்கு முதன்மை தந்து, தாய்வழிச் சமூகம் அமையக் காரணமாயிற்றோ, அதே உயிரியல் காரணி (அதாவது வெளிப்படையான இனப்பெருக்கப் பொறுப்பு), பெண்ணை ஒரு சிறு வட்டத்திற்குள் அடைத்து, உள்நோக்குப் பொறுப்புகளை அவள் மீது சாற்றியது.

உடல் அமைப்பு ரீதியான அதே உயிரியல் காரணி, அவளை ''பலவீனமானவள்'' என்பது போலக் காட்டி, அவளை ஆதிக்கத்திற்கு உட்படுத்தியது.

## இ. பெண்ணிய இயக்கங்களில் உயிரியல் நோக்கு...

**பெண்ணிய இயக்கங்களில் உயிரியல் நோக்கு.**

பெண்ணிய இயக்கங்கள் எனப் பொதுவாகக் கொண்டால், காலத்தாலும் இடத்தாலும் வரையறுக்க முடியாததாகி விடும் என்பதால், பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில், இந்திய நாட்டில் எழுந்த பெண்ணிய இயக்கங்கள் மட்டுமே இந்தச் சிந்தனைப் பகிர்வில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து, இந்தியாவில் பல்வேறு பெண்ணிய இயக்கங்கள் தோன்றியுள்ளன. விடுதலைக்கு முன் தோன்றிய பெண்ணிய இயக்கங்களிலும் சரி, விடுதலைக்குப் பின் தோன்றிய பெண்ணிய இயக்கங்களிலும் சரி, உயிரியல் பார்வை, அதாவது, ஒரு பெண்ணை, பெண்மையை, பெண்ணின் நிலையை உயிரியல் ரீதியில் பார்க்கிற பார்வை, வெவ்வேறு விதங்களில் மாறுபட்டிருப்பதைக் காணலாம். இதன் விளைவாக, பெண்ணியச் சிந்தனைகளும், பெண்ணிய எழுச்சிகளும் கூட வேறுபட்டிருக்கின்றன.

★ பெண்ணியப் போராட்டங்கள் பலவும், ஒரு பொதுமைக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவை. மனிதர்களுள், ஒரு சிலரை, ஒரு குறிப்பிட்ட பகுப்பினரை, அவர்களுடைய பிறப்பின் அடிப்படையில், தாழ்வுபடுத்தவோ, இழிவு படுத்தவோ, குறைவு படுத்தவோ கூடாது.

பிறப்பின் அடிப்படையில் தாழ்வு என்னும் போதே, அங்கு, ''பாலின வேறுபாடு'' (Gender differentiation or gender discrimination) என்பது மையப்படுகிறது.

★ சரி! கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் பெண்ணிய இயக்கங்கள் எப்படியெல்லாம் மாறுபட்டிருக்கின்றன? இந்த மாறுபாடுகளில் ''உயிரியல் காரணிகள்'' (Biological factors) என்பவற்றின் பங்கு என்ன?

1. தொடக்ககாலப் பெண்ணிய இயக்கங்கள், பாலின வேறுபாட்டை ஒத்துக் கொண்டன. ஒத்துக் கொண்ட வகையில் கொள்கைகளை வகுத்தன. ஆண் - பெண் இரு பிரிவும் வெவ்வேறு; இரு பிரிவின் பங்குகள், செயல்பாடுகள், குறிக்கோள்கள், அபிலாஷைகள் ஆகியன வெவ்வேறானவை. வளர்ப்பு முறையிலும், அமைப்பு முறையிலும் இரு பிரிவினரும் வெவ்வேறானவர்களே.

ஆனாலும், வேறுபட்டிருப்பதனாலேயே, பெண் அடக்கியொடுக்கப்பட வேண்டியதில்லை என்பதாக இந்த இயக்கங்கள் வாதிட்டன.

2. இத்தகைய எண்ணம் வலுப்பெற, வலுப்பெற, தொடர்ந்து வந்த காலகட்டத்தில், ''பாலின வேறுபாடு'' என்பதே, பெண்ணியத்தின் போராட்டக் குரலாகவும் ஆயிற்று.

எவ்வாறு?

பெண் தாயாகக் கூடியவள்; தலைமுறையைத் தோற்றுவித்து, பேணிப் பாதுகாத்து வளர்ப்பவள். ஆகவே, பிற்கால சந்ததியினர் நல்லவர்களாகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டுமெனில், இப்போது ''பெண்'' நன்கு பேணப்படவேண்டும்.

இன்று ஒரு பெண்ணுக்குக் கல்வி தரப்பட்டால், அதை வைத்துக் கொண்டு, அவள் தன் குழந்தைகளுக்கும், குடும்பத்தினருக்கும், கல்வி கொடுப்பாள்; தான் கற்ற கல்வியினால் சரியான முறையில் உணவு படைப்பாள்; சுகாதாரம் காப்பாள்; வேண்டுவனவற்றைத் தெளிவாகச் செய்வாள்.

எனவே, கல்வி, சிந்தனை, பேச்சு போன்றவற்றின் உரிமைகள் பெண்ணுக்குத் தரப்பட வேண்டும்; அப்போது தான் அவளால் அடுத்த தலைமுறையை நன்கு வளர்க்க முடியும்.

பெண், பிற்காலத் தலைமுறையைப் பெற்று வளர்ப்பதனால் அவளுக்கு ஒரு ''சமூகப் பயன்பாடு'' (**Social utility**) உள்ளது. எனவே, இந்தச் சமூகப் பயன்பாட்டை நிர்ணயிக்கப் பெண்ணுக்கு உரிமை தரப்பட வேண்டும்.

இதன்படிப் பார்த்தால், பெண்ணுடைய சமூகப் பயன்பாடு, அவளுடைய பாலினத்தைக் கொண்டு, அவள் பெண் என்பதாலேயே ஏற்படுகிறது.

3. இதைத் தொடர்ந்து வந்தது காந்திய கால கட்டம். இந்தியப் ''பெண்ணிய இயக்கங்களின் தந்தை'' என்று கருதப்படுபவர் மகாத்மா காந்தி. பெண்மைக் குணங்கள் என்று சிலவற்றை அடையாளம் கண்டு அவற்றை ஓங்க வைத்தது காந்திய வழி.

துயரங்களைத் தாங்குகிற தன்மை, விடா முயற்சி, எல்லையற்ற பொறுமை - இவை தாய்மைக் குணங்கள் - பெண்மையின் சிறப்பம்சங்கள் என்று காந்திய வழி அடையாளம் காட்டியது.

வாழ்வியல் பிரச்சினைகள் வரும் போது அவற்றை சந்திப்பவளாகவும், எதிர்கொள்பவளாகவும், குடும்பத்தையே தூக்கி நிறுத்துபவளாகவும் பெண்

இருக்கிறாள் என்பதும், இதனாலேயே மிகுந்த மரியாதைக்குரியவள் என்பதும் இக்காலகட்டப் பெண்ணிய இயக்கங்களில் முன்னிறுத்தப்பட்டது.

காந்தியைப் பொறுத்தவரை ஆண் - பெண் இருபாலரும் வெவ்வேறானவர்கள்; ஆனால், ஒருவருக்கொருவர் சார்புடையவர்கள்; ஒருவருக்கொருவர் உதவியானவர்கள்.

4. இந்த நிலையிலேயே, இன்னொரு வகை இயக்கங்கள் இருந்ததையும் அறிந்து கொள்ளுதல் நலம்.

இந்திய விடுதலை வரலாற்றோடு பின்னிப் பிணைந்த காந்திய காலகட்டத்திற்கு சற்றே முன்பாக, தேசியப் போராட்டத்தின் போதே, பெண்ணுடைய ''தாய்'' என்கிற அடையாளம் இன்னொரு விதமாகவும் கையாளப்பட்டது.

தாய் ''பாதுகாப்பவள்'', ''பேணி வளர்ப்பவள்''; அவளைத் தவறாக நடத்தினால், இழிவு படுத்தினால், தண்டனைகள் கிடைக்கும் என்று பெண்ணுரிமைக் குரல் கொடுத்தனர் மேடம் காமா போன்றோர்.

5. தேசியப் போராட்டத்தின் இறுதி நாட்களிலேயும், விடுதலைக்குப் பின்னான கால கட்டத்திலேயும் பெண்ணிய இயக்கங்களின் ஆணிவேர் கொள்கை ''சமத்துவம்'' (**Equality**) என்பதானது. பாலின வேறுபாடுகளும், பாலின வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட முறைமைகளும் பெண்களை அடக்கியொடுக்குகின்றன என்று இவை வலியுறுத்தின. காந்திய பாதிப்பால் ஏற்பட்ட 'தாய்மைக்கும், பெண்ணுக்கும் தனி மரியாதை', என்ற நிலையை ஒரு பக்கம் ஒப்புக் கொண்டாலும், இன்னொரு பக்கம், சொத்து போன்ற பிரச்சனைகளில் இந்தத் தனி மரியாதை எவ்விதத் தீர்வையும் நியாயமான நடைமுறையையும் தரவில்லை. எனவே, 'சமத்துவம்' என்பது முன்மொழியப்பட்டது. கல்வி, பேச்சு ஆகியவற்றோடு கூட, சொத்து, பொருளாதாரம் ஆகியவற்றிலும் சமத்துவம் கோரப்பட்டது.

★ இவ்விதமாக, இரண்டு நூற்றாண்டுகளில், ''பெண்'' என்று பார்க்கிற உயிரியல் பார்வை, பெண்ணுரிமைப் போராட்டங்களில் வெவ்வேறு விதமாக அணுகப்பட்டிருப்பதைக் காணலாம்.

அதன்படி,

''பாலின வேறுபாட்டை ஒப்புக் கொண்ட நிலைமை''

**(acceptance of gender differentiation)**

''பாலின வேறுபாடு மரியாதைக்குரியது என்று எண்ணிய நிலைமை''

**(respectability afforded to gender)**

''பாலின வேறுபாட்டை ஒரு பக்கம் ஒப்புக் கொண்டாலும், உரிமைகள் என்று வந்தால், குறிப்பாக, சொத்துரிமை, வாக்குரிமை, கல்வியுரிமை போன்றவற்றில்

பாலின வேறுபாட்டை ஒதுக்கி வைத்து சமத்துவம் பேண வேண்டும் என்ற நிலை''

**(Partial acceptance of gender differentiation and claim of equal rights).**

ஆகியவற்றைக் கடந்து இப்போது, பாலின வேறுபாட்டைப் புறந்தள்ளுகிற நிலை வந்திருக்கிறது.

★ நம்முடைய சமகாலப் பெண்ணிய இயக்கங்களில் ஆணுக்கும் பெண்ணுக்குமான வேறுபாடு, உயிரியல் ரீதியானது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆனால், இந்த ''வெறும் உயிரியல் வேறுபாடு'' (Mere biological difference) பொது வாழ்க்கைச் சூழல்களிலும் சரி, தனி வாழ்க்கைச் சூழல்களிலும் சரி, பெண்ணினுடைய சமத்துவத்தை, பெண்ணுக்கான உரிமைகளைப் பாதிக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகின்றது.

★ மானுடம் என்கிற மொத்த அமைப்பில், ஆண் - பெண் என்கிற இரு பிரிவுகள் பிரிக்கப்படுவது, ஒரு சில உயிரியல் ரீதியான காரணங்களால் மட்டுந்தான்! இந்த ஒரு சில உயிரியல் காரணங்கள், வாழ்க்கைச் சூழலைத் தரம் பிரிப்பவையாகவும், இரட்டை அளவுகோல்களைத் தரக் கூடியவையாகவும் மாறக் கூடாது, மாறவும் முடியாது. எனவே, உயிரியல் அடிப்படையிலான பாகுபாடு புறந்தள்ளப்பட்டு, ''பெண்'' என்பவளும் ஒரு மனிதப் பிறவி என்கிற கண்ணோட்டம் இருக்க வேண்டும் - இது தான், இன்றைய, இப்போதையப் பெண்ணியச் சிந்தனை!

## உயிரியல் அடையாளங்கள்

**தாய் - மகள் - பெண்: ''அடையாள மும்மை''.**

பெண்களின் நிலை, பெண்ணுரிமைப் போராட்டங்கள், பெண்ணியம் ஆகியவற்றை ஆராயும் போது, பெண்ணுக்கு மூன்று வகை உயிரியல் அடையாளங்கள் (Biological identities) அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

★ **தாய்:** முதலில் ஒரு பெண்ணுக்குத் தரப்பட்ட அடையாளம் ''தாய்'' என்பதாகும். ஒரு பெண்ணுடைய தாய்மைப் பங்களிப்பு, ஒரு தாயாக அவளுடைய செயல்பாடு, அவளின் சமூகப் பயன்பாட்டை அதிகரிக்கிறது. தொட்டிலை ஆட்டுகிற கை, தரணியை ஆட்டுவிக்கும். காரணம், அந்தத் தொட்டிலில் உறங்கும் சிசு, அரசனாகவோ, ஆண்டியாகவோ உருவாவது அவளின் வளர்ப்பிலும், அரவணைப்பிலும் தான்! எனவே, தாய்மை என்கிற மகத்துவத்திற்காக, தலைமுறையை உருவாக்கும் பொறுப்பைச் சுமக்கிற மேன்மைக்காக, பெண்ணிற்குக் கல்வியும், செல்வமும், வாக்கும், உயர்வும் தரப்படவேண்டும்.

ஒரு பெண், வெறும் பெண் மட்டுமல்ல, ஒரு நல்ல மனைவியாகவும் இருக்க வேண்டும் என்கிற எண்ணமும் இந்தத் தாய்மை அடையாளத்தின் ஊடாகவே அமைந்தது.

''தாய்'' என்கிற இந்த அடையாளத்தின் விளைவு, சில இடங்களில் அதீதமாகவே செயல்பட்டது. ''தாய்'' என்பதற்காகவே அல்லது ''தாயாகக் கூடியவள்'' என்பதற்காகவே மட்டுமே ஒரு பெண் மதிக்கப்பட்டாள், அல்லது உரிமை வழங்கப் பெற்றாள். ''நீ ஒரு குழந்தையைத் தாங்க வேண்டியவள்; அந்தக் குழந்தைக்காக நல்ல உணவு உண்ண வேண்டும்'', ''நீ குழந்தையை வளர்ப்பவள், எனவே, சற்றேனும் கல்வி தெரிந்து கொள்ளலாம்'', என்ற சலுகைகளை அவள் பெற்றாள்.

தாய்மை, மனைவி, திருமணம் என்பவற்றிற்குக் கொடுக்கப்பட்ட மதிப்பு, தாய்மையடையாதவளை, இன்னும் குறிப்பாக, திருமணம் ஆகாதவளை அபாண்டமானவளாக, அவளுக்கு அவதூறுக்கு உரியவளாக, மிகவும் இழிந்தவளாகக் காணவும் தலைப்பட்டது.

★ மகள்: ஆண் - பெண் வேறுபாடு, வெறும் உயிரியல் ரீதியானது (Mere biological difference) என்ற சிந்தனை எழத் தொடங்கிய போது, அமைந்த அடையாளம் ''மகள்'' என்பது! ''ஒருவரின் தாய்; ஒருவரின் மனைவி, அவள் ஒருவரின் மகளும் கூட; மகளுக்குத் தரப்படுகிற முதன்மையும் மதிப்பும், அதே நபரால் மனைவிக்குத் தரப்படுவதில்லையே,'' என்கிற வாதத்தை முன்னிலைப்படுத்தி, உணர்வு பூர்வமாக எழுந்த உயிரியல் அடையாளம் ''மகள்'' என்பதாகும்.

ஒரு பெண் எப்படி உருவாகிறாள், எப்படி உருவாக்கப்படுகிறாள் என்கிற செய்திகளில் அழுத்தம் தரப்பட்டது. சமுதாயத்தில், ஒரு பெண் குழந்தையாகப் பிறப்பதால் ஏற்படுகிற கையறுநிலை, வெறுப்பு, உதாசீனம் ஆகியவை, அந்தப் பெண் குழந்தை வளர வளர ஏற்படுகிற பாலியல் ரீதியான பயம், தவிப்பு போன்றவை, அந்தப் பெண்ணுக்கு நிகழக் கூடிய பாலியல் கொடுமைகள், திருமணத்தின் போது ஏதோ அஃறிணைப் பொருள் போல அவள் இன்னொரு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவது, ''தானும் ஒரு பிறவி'' என்கிற அவளின் சுய அடையாளம் திருமணத்தால் அழித்துக் கரைக்கப்படுவது, அவளுக்கே ஒரு பெண் குழந்தை பிறந்தால் இந்தச் சுழற்சி இன்னொரு வலம் வருவது - ஆகிய யாவும் வேதனையோடும் வேகத்தோடும் அலசி ஆராயப்பட்டன.

''மகள்'' என்கிற அடையாளம், பெண்ணியச் சிந்தனைகளில் ஒரு புதிய பார்வையை உட்புகுத்தியது

இதுவரை, ''பெண்'' ஒரு உயிரியல் பிறவியாக (குறிப்பிட்டுச் சொன்னால், ஒரு உடம்பு மட்டுமே) மட்டுமே பார்க்கப்பட்டிருந்தாள். ''மகள்'' என்னும் அடையாளம் நுழைந்தவுடன், அந்த மகளுக்கு ஏற்படும் தவிப்புகள், துடிப்புகள் என்பவை உணரப்பட்டு, ''பெண்'' என்கிற உயிரியல் பிறவிக்கும் உணர்வு உண்டு, உணர்வு வெளிப்பாடு உண்டு, உணர்வு மதிப்பீடு உண்டு என்கிற ஒரு முக்கிய திருப்பம் உண்டாயிற்று

இருப்பினும், ''தாய் - மகள்'' என்கிற இரண்டு வகை உயிரியல் அடையாளங்களும், சில பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை.

:பொருளாதாரத் தன்னுரிமைக்கு வழி காணப்படவில்லை.

:பணியிட முறைகேடுகள் சீர் செய்யப்படவில்லை.

:வீட்டுப் பணிகளுக்கான உழைப்பு கருத்திற் கொள்ளப்படவில்லை. இதனால், பெண் ஒரு ''இரண்டாந்தரப் பிறவி'' (Second grade person) என்பதில் தொடங்கிப் பணியிடப் பாலியல் பலாத்காரங்கள் என்கிற தொழில் முறைகேடுகள் (Occupational hazards) வரை, பல பிரச்சனைகள் அப்படியே நின்றன.

சமத்துவத்தைப் பற்றிய பல்வேறு கேள்விகள் எழுந்தன. ''எது சமத்துவம்?'' என்பது போன்ற வினாக்களும் எழுப்பப்பட்டன.

சமத்துவம் என்பதை விட, ஆணுக்கு நிகர் சரி சமானம் என்பதை விட, தன் வாழ்க்கையைத் தானே நிர்ணயித்துக் கொள்வது என்கிற உரிமை கோரப்பட்டது. அல்லது கொள்ளப்பட்டது

சுய நிர்ணயத்தின் ஒரு பங்கு தான், பொருளாதாரத் தன்னுரிமை. பலவகை உரிமைகளும் இதற்குள் அடங்கும்.

★ **பெண்:** தத்தம் வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையும் பொறுப்பும் பெண்ணுக்கு உண்டு. 'அவளுடைய சிந்தனை, செயல்கள், வெளிப்பாடு, பொருளாதாரம், கல்வி, ஆற்றல் ஆகியவை அடுத்தவர்களால் கட்டுப்படுத்தப்படக் கூடாது. மாறாக, தன்னை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி, வாழ்முறையை அமைத்துக் கொள்கிற உரிமை அவளை மட்டுமே சார்ந்தது' என்கிற கொள்கை அடிப்படையில் எழுந்த மூன்றாவது உயிரியல் அடையாளம் தான் 'பெண்' என்பது! மனைவி - தாய் என்கிற சார்புநிலை அடையாளங்களை முழுமையாக ஒதுக்கித் தள்ளி விட்டு எழுந்திருக்கும் அடையாளம், தற்சார்பு கொண்ட ''பெண்'' அடையாளம்!

''பெண்'' என்கிற தனி அடையாளம் தரப்படுகிறபோது,

✱ திருமணம் என்பது மட்டும் ஒரு பெண்ணின் அந்தஸ்தை நிர்ணயிக்கும் காரணியாகக் கூடாது; திருமணம் ஆனாலும், ஆகா விட்டாலும் மனிதப் பிறவி என்கிற ரீதியில் அவள் மதிக்கப்பட வேண்டுமேயன்றி, அவளின் திருமண ஏற்பாடுகளைப் பொறுத்தல்ல.

✱ சமூகத்தில் அவளுடைய இடம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

✱ மனிதப் பிறவியாக அவள் மதிக்கப்பட வேண்டும்.

✱ ஆண் - பெண் இருபாலருக்கிடையேயான உயிரியல் வேறுபாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆயின், பெண் மட்டுமல்ல, ஆணும் ஒரு உயிரியல் பகுப்பு தான் - (Biological entity); உயிரியல் அடையாளத்தால் 'பெண்' என்று தனியாகப் பிரிக்கப்படுவது போல், 'ஆண்' என்ற பிரிவும் ஒரு உயிரியல் அடையாளம் மட்டுமே. (It is only a bilogical identity!) எனவே, இந்த உயிரியல் அடையாளங்கள், பாகுபாடுகளை ஏற்படுத்தக் கூடாது.

★ பெண், தன் வாழ்க்கையைத் தானே நிர்ணயித்துக் கொள்கிற நிலை இருக்க வேண்டும்.

இத்தகு வகையில் பெண்ணுக்கு ஏற்பட்ட அடையாள மும்மை (identity triplet), உயிரியல் ரீதியான ஒரு ஐந்து நிலை பரிணாமத்தைப் பெண்ணினுடைய சமுதாய நிலையில், சமூக அந்தஸ்தில் தோற்றுவித்துள்ளது.

இந்த உயிரியல் சார்புடைய பரிணாம நிலைகள் (Biologically related revolutionary stages) பின்வருவன.

★ பாலின வேறுபாட்டை ஒப்புக் கொண்டநிலை (acceptance of gender based difference).

★ ''பெண்'' என்கிறவள் பாதுகாப்புத் தருபவள்; அவள் அரவணைப்பவள் என்னும் நிலை. (Protective and anarchic status of women)

★ ஆண்மையும் பெண்மையும் ஒன்றுக்கொன்று சார்பானவை என்னும் நிலை. (Complementary nature of masculinity & feminity).

★ உயிரியல் ரீதியாகப் ''பெண்'' வேறானவள் என்பதை உறுதிப் படுத்திக் கொண்ட நிலை. (affirmation of gender based difference). ஆனால், பெண் உயர்வுக்குரியவள் என்று உணர்த்தி, ஆண்மைக்கு இதுவரை கொடுக்கப்பட்டுள்ள சிறப்புயர்வை மறுப்பது. (anti patriarchal movements). இதன் ஒரு வெளிப்பாடு ஆண் - பெண் சமத்துவம்.

★ ஆண் - பெண் வேறுபாட்டை ஒப்புக் கொண்டு, பெண்ணுக்கான சுய நிர்ணய நிலையை அவளுக்கு உரித்தானது ஆக்குகிற நிலை. (Self determination status).

சுய நிர்ணய அந்தஸ்து மட்டுமே ஒரு பெண்ணுக்கு நியாயமாக வழங்கப்படக் கூடிய, வழங்கப்பட வேண்டிய உயிரியல் மற்றும் உணர்வியல் அடையாளமாகும்.

## 2. உயிரியல் வேறுபாடுகள் - விளைவுகள்

### ஆண் - பெண் உயிரியல் வேறுபாடுக்ள்

ஆணுக்கும் பெண்ணுக்கும் உயிரியல் மற்றும் உடலியல் மாற்றங்கள் இருப்பதை அனைவரும் அறிவோம்

★ பெண்ணைக் குறித்த முக்கியமான உயிரியல் குறிப்பு - அவள் பெற்றிருக்கக் கூடிய இனப்பெருக்க அடையாளம். இனப்பெருக்கச் செயல்பாடுகளால் அவள் உடல் அடையக் கூடிய மாறுதல்கள், அதனால் அவளுக்கு உண்டாகும் உணர்வுபூர்வ பொறுப்புகள் ஆகியவை எப்போதுமே சமூகத்தின் கூர்மையான பார்வைக்கு உட்படுகின்றன.

இனப்பெருக்க அடையாளமே காலங்காலமாக, பெண்ணை, இரட்டை அளவுகோல்களுக்கு ஆட்படுத்தியிருக்கிறது.

★ பெண்ணுக்கு இனப்பெருக்க அடையாளம் இருக்கிறது என்று பார்க்கிற பார்வையை சற்றே நிறுத்தி, இன்னொன்றையும், சிந்திக்க வேண்டும். எல்லா உயிரினங்களிலேயும், வெளிப்படையான இனப்பெருக்க அடையாளம் கொண்ட பகுப்பை, ''பெண்'' என்று அழைத்திருக்கிறோம் என்பது தான் உண்மை.

சரி! ஆணுக்கும் பெண்ணுக்கும் (மனித இனத்தில்) என்னென்ன வேறுபாடுகள் உள்ளன?

★ மொத்த உடல் எடை,
மொத்த உடல் உயரம்,
எலும்புகளின் நீளம் மற்றும் அடர்த்தி,
தசைகளின் வலு மற்றும் அளவு - ஆகியவை ஆண்களை விடப் பெண்களில் குறைவு.

★ பெண்களை விட ஆண்களின் உடலில் புரதத்தின் அளவு சற்றே அதிகம். (இதுவும் தசைகளின் அளவு சற்றே அதிகம் என்பதனால் ஏற்படும் விளைவு).

★ ஆண்களை விடப் பெண்களின் உடலில் கொழுப்புத் திசுவின் அளவு சற்றே அதிகம். பெண் உடலுக்கு வளைவு நெளிவுகளை வழங்கி, கண்ணியமான மென்மையைத் தருவது கொழுப்புத் திசுவின் இத்தகைய பரப்பீடே! (ஆண்களுக்குத் தோள்பகுதி அகலமாக இருப்பதும், பெண்களுக்கு இடுப்புப்பகுதி அகலமாக இருப்பதும் நாம் அறிந்ததே!)

★ இத்தகைய வேறுபாடுகளுக்கு என்ன காரணம்?

★ இந்த வேறுபாடுகளுக்காகவே, சமூகம் இரட்டை அளவுகோல்களை நிர்ணயிப்பது சரியா?

★ உடலியல் வேறுபாடுகளில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வெளிப்படையாகத் தெரியக் கூடிய வேறுபாடுகள் (கூந்தல், பாவனை, தாடி, மீசை போன்ற உருவ அமைப்புகள் - இவற்றைப் பொதுவாகப் பாலியல் துணைக் குணங்கள் என்பது வழக்கம் – Secondary sexual characters) உள்ளன.

இந்த வேறுபாடுகளுக்கெல்லாம் காரணம், ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள ''ஹார்மோன்கள்'' (Hormones) எனப்படும் உட்சுரசங்களின் அமைப்பேயாகும். ஒரு கரு உருவாகும்போதே அந்தக் கருவினுடைய அணுக்குருமி நிலைமை (Chromosome State) நிர்ணயமாகி விடுகின்றது. பெண் கருவாக இருந்தால் 22+XX அணுக்குருமி நிலைமை; ஆண் கருவாகவிருந்தால் 22+XY என்ற அணுக்குருமி நிலைமை!

கரு வளர்ந்து ஏழாவது வாரத்தை அடையும் போதே, அணுக்குருமிகளின் நிலையை வைத்து, பாலுறுப்புப் பகுதிகள், இரண்டு வித கருவிலும் வேறுபட்டு வளரத் தொடங்குகின்றன. பின்னர், அந்தந்த கருவிற்கேற்ப, ஆண் பாலியல் சுரசங்களோ (Male sexual hormones) பெண் பாலியல் சுரசங்களோ (female sexual hormones) சுரக்கப்படத் தொடங்குகின்றன.

கரு வளர வளர, பாலியல் சுரசங்களுக்கு ஏற்ப, பாலுறுப்புப் பகுதிகளும் பிற உறுப்புகளும் ஆணாகவோ பெண்ணாகவோ வளருகின்றன.

குழந்தை பிறந்து வளரும் போதும், பின்னர் பருவகாலத்தை அடையும் போதும், பாலியல் சுரசங்கள் தக்கவாறு பணியாற்றுகின்றன. அதன்படி, பாலியல் சுரசங்களின் செயல்பாட்டினால் உடல் வளர்ச்சி, உறுப்புகள், பாலியல் துணைக் குணங்கள் ஆகியவை நிர்ணயமாகின்றன.

டெஸ்டோஸ்டிரான் (Testosterone) என்கிற ஆண் பாலியல் சுரசத்தின் செயலால் எலும்புகள் நீண்டமைகின்றன; தசைகள் நீண்ட எலும்புகளுக்குத் தோதாக நீளமாயும், சற்றே எடை கூடுதலாயும் அமைகின்றன

ஈஸ்ட்ரோஜன் (Oestrogen) மற்றும் ப்ரொஜஸ்டிரான் (Progesterone) என்னும் பெண் பாலியல் சுரசங்களின் செயலால் தசைகள் மென்மையாயும், எலும்புகளும், தசைகளும் மூட்டுகளும் உள்ள பகுதிகளில் தசைநாண்களும் (tendons), பந்தனங்களும் (ligaments) விரிந்து கொடுக்கக் கூடிய நெகிழ்வுத் தன்மையுடன் காணப்படுகின்றன.

குறிப்பிட்டு நோக்கினால், ஆண் - பெண் எலும்பு மாறுபாடுகளும், தசை மாறுபாடுகளும் ஒரு தீர்மானமான காரணத்திற்காக என்பதைப் புரிந்து கொள்ளலாம். இடுப்பு எலும்புகளில், இடுப்பு எலும்புக்குத் தொடர்புடைய கீழ் முதுகுப் பகுதியின் திரிக (Scral) எலும்பில், ஆணுக்கும், பெண்ணுக்கும் வேறுபாடுகள் உள்ளன. இவற்றோடு உள்ள மூட்டுக்களிலும் (Joints) அவற்றின் பந்தனங்களிலும், பெண்களில் நெகிழ்வுத் தன்மை அதிகமுள்ளது. குழந்தைப் பேற்றுக்காக, கரு வளர்ச்சிக்குப் பத்துமாதங்கள் இடங் கொடுக்கும்படியும், குழந்தை பிறப்பிற்கு ஏதுவாகவும் இந்த மாறுபாடுகளும் நெகிழ்வுத் தன்மையும் உள்ளன.

இவை தவிர, தலைப்பகுதியிலும், கீழ்த் தாடைப் பகுதியிலும் காணப்படும் சிற்சில ஆண்-பெண் எலும்பு மாறுபாடுகள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை

இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில், உண்மையிலேயே, உடலியல் உயிரியல் ரீதியாகப் பெண் பலவீனமானவளா என்ற வினா எழுகின்றது.

★ ஆணுக்கும் பெண்ணுக்குமான ஒப்புமை நோக்கில் சிறிதான எடை - உயரக் குறைவுகளையும், சிற்சில உறுப்பு மாறுபாடுகளையும் வைத்துப் பெண்ணை பலவீனமானவள் என்று கூற முடியாது.

★ மனவலிமை, துயரங்களைத் தாங்குகிற பாங்கு, உடல் வலிமைகளைக் கூட அரட்டலில்லாமல் பொறுத்துக் கொள்வது, பிரச்சினைகள் தாக்கும் போது சுதாரித்து நிற்பது ஆகியவற்றில் ஆணைக் காட்டிலும் பெண் துணிவும் பலமும் மிக்கவளாகவே உள்ளாள்.

★ நம்முடைய நடைமுறை வாழ்விலேயே, உடல் நோவையும் வலியையும் ஆணை விடப் பெண் பொறுத்துத் தாங்குவதும், ஆர்ப்பாட்டமின்றி நிதானமாக ஏற்பதும் அதிகம் என்பது கண்கூடு.

அப்போது, உடலியல் ரீதியாகக் கூட, பெண் பலவீனமானவள் இல்லை என்பதை உணரலாம்.

★ முன்னர் குறிப்பிட்டபடி குழந்தைகளைப் பேணுதல், குடும்பம் - கூட்டம் என்கிற உள்நிலவிய அக்கரை, தொடர்ந்து, இடைவெளி குறைவாகக் குழந்தைகளைப் பெறும் போது ஏற்படக் கூடிய இயல்பான உடல் பலவீனம், இவற்றோடும் குடும்பத்தைப் பேணுகிற பொறுப்புகளில் தன்னுடைய உடலையும் ஆரோக்கியத்தையும் கவனமின்றி விட்டு விடுவது போன்ற காரணங்களால் அவள் **"பலவீனமானவள் போல்"** தோற்றம் தர, அது ஆணாதிக்கக் கால கட்டத்தில் மேலும் முத்திரை குத்தப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. (இதுவொரு செயற்கை முத்திரையேயன்றி, இயற்கை பேதமில்லை)!

## உயிரியல் நோக்கில் பெண்

உயிரியல் காரணிகளையும், தொடர்புடைய கருத்துக்களையும் பின்புலத்தில் வைத்துக் கொண்டு அறிவுக்கண் கொண்டு ஆராய்கையில், சில உண்மைகளைத் தெளிவாக உணரலாம்!

1. ஆண் - பெண் என்கிற பகுப்புகள் உயிரியல் அடையாளங்கள் **(Biological identities)**

2. உயிரியல் அடையாளங்களை மாற்றவோ அழித்து விடவோ முடியாது. (அவ்வாறே நினைப்பினும் அது முட்டாள்தனமாகவே முடியும்)

3 "பெண்" என்கிற உயிரியல் அடையாளம், வெறும் அடையாளம் மட்டுமே! உணர்வுப் பூர்வமாக அடிமைப்படுத்துவதற்கோ, சமூக - கலாசார - பொருளாதார பேதங்களுக்கோ ஒடுக்கத்திற்கோ, இந்த அடையாளம் ஒரு அங்கீகாரம் அல்ல!!

4 பெண் பலவீனமானவள் என்பது ஒரு மாயை.

5. உலகின் அனைத்து உயிரினங்களும் இனம் பெருக விழைவது இயற்கை நியதி. மனித இனத்தில், இனப்பெருக்கத்தின் வெளிப்படைப் பொறுப்பையும், தலைமுறையை வளர்க்கும் பொறுப்பையும் பெண் தான் ஏற்கிறாள். இப்பொறுப்பு மரியாதைக்குரியது.

6. மரியாதைக்குரிய பொறுப்பு தான். ஆயினும், திருமணம், குழந்தைப் பேறு என்பதை மட்டுமே வைத்துப் பெண்ணை மதிக்கக் கூடாது; மதிப்பிடக் கூடாது. திருமணமில்லாமல், குழந்தையில்லாமல் இருக்கும் பெண்ணும், "பெண்" என்கிற பிறவியாகவே மதிக்கப்பட வேண்டும்.

மொத்தத்தில், மனிதப் பிறவி என்கிற அடிப்படை உரிமையும், சுய நிர்ணய வாழ்க்கையுரிமையும் பெண்ணுக்கு இருக்கிற நிலைமையே, உயிரியல் ரீதியாகப் பெண்ணை, பெண்மையை உணர்ந்து கொள்கிற உறுதிப்பாடு ஆகும்.

# பெண்ணிய நோக்கில் பெண்

அ. மார்க்ஸ்
பேராசிரியர், தஞ்சை.

பெண்ணிய நோக்கு என்பது ஓர் ஒற்றைத் தன்மைக் கொண்டதாக இருக்கிறது உண்மையில் 'பெண்ணிய நோக்குகள்' என்றுதான் சொல்லப்பட வேண்டும் மார்க்சியத்தில் பல போக்குகள் இருப்பதைப்போல பெண்ணியத்திலும்,

(i) தாராளப் பெண்ணியம்
(ii) தீவிரப் பெண்ணியம்
(iii) மார்க்சியப் பெண்ணியம்
(iv) கருப்புப் பெண்ணியம்.
(v) ஒருபால் பெண்ணியம் (Lesbian Feminism)

என்று கிட்டத்தட்ட ஐந்து வகைப் பெண்ணியமாகப் பிரிக்கலாம்.

பெண்ணியம் என்பது பெண்களுக்கான சமத்துவ உரிமைகளை நடைமுறைப்படுத்துகிற ஓர் அரசியல் செயல்பாடு என்பது மட்டுமல்லாமல், ஒரு தத்துவார்த்த வகையினமாக அமைகிறது. குறிப்பாகப் பெண்ணின் அடையாளங்களை முன் வைக்கிற ஒரு தத்துவார்த்தமாக அமைகின்றது.

ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை எவ்வாறு வரையறுக்கிறது என்பதை முதலில் பார்ப்போம். நவீன காலத்தில் பெண்மை எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதினூடாகப் பார்க்கலாம். நவீனம் என்பது இந்தியாவில் காலனிய ஆட்சிமுறையிலிருந்து தொடங்குகிறது. காலனியக் கல்விமுறை, காலனிய அரசாங்கம், காலனிய சட்டங்கள், காலனிய நீதிமன்றங்கள் இப்படி பல்வேறு வகையில் காலனியச் செயல்பாடு என்பது இந்தியாவில் வருகிறது.

தேசியக் கட்டமைப்பு என்று பார்க்கும்போது,

(i) அகில இந்திய தேசியக் கட்டமைப்பு
(ii) தமிழ்த் தேசியக் கட்டமைப்பு

என்று இரண்டு வகையாக வரையறுக்கப்படுகிறது. எப்பொழுதெல்லாம் தேசியம் வரையறுக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் பெண்களுடைய பாலியல், பெண்களுடைய உரிமைகள் அவையனைத்தும் ஆணிய நோக்கில் வரையறுக்கப்பட்டு ஒடுக்கக் கூடிய தன்மை இருக்கிறது.

சத்தியமூர்த்தி, திரு.வி.க. ஆகிய இருவரை எடுத்துக்காட்டாகப் பார்க்கலாம். முன்னவர் அகில இந்திய தேசியத்தைக் கட்டமைத்தவர், பின்னவர்

அகில இந்திய அளவில் தமிழ் தேசியத்தைக் கட்டமைத்தவர். அதில் குறிப்பாக திரு.வி.க. வை எடுத்துக் கொண்டதற்குக் காரணம் இந்த நூற்றாண்டில், அதிகம் படிக்கப்பட்ட 'பெண்ணின் பெருமை' என்ற நூலை எழுதியவர் என்பதால்தான்.

குழந்தை மணத்தடுப்புச் சட்டம் காங்கிரஸ்காரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தமிழகத்தில் சட்டமாக வரும்போது, சத்தியமூர்த்தி பின்வருமாறு சட்டசபையில் கூறுகிறார்: 'குழந்தை மணத்தடுப்புச் சட்டத்தைக் கட்டாயப்படுத்தினால் நான் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகுவேன்'' என்று சட்டசபையில் பேசுகின்றார் மேலும் குழந்தை மணம் என்பது இந்தியாவின் தொன்று தொட்டு வருகின்ற ஒரு மரபு. அது இருப்பதனால்தான் சில ஒழுக்கக் கட்டமைப்புகள் எல்லாம் இந்தியாவில் இருக்கின்றன. அது இல்லாததால்தான் மேலை நாடுகளில் குடும்பக் கட்டமைப்புச் சிதைகிறது. எனவே குழந்தை மணத்தைத் தடுப்பது என்பதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. அதற்காக நான் கட்சியை விட்டுக்கூட விலகுவேன் என்றும் சத்தியமூர்த்தி சொல்கிறார்.

இந்நூலில் பெண்ணின் அடையாளமாக திரு.வி.க. குறிப்பிடுவது 'தாய்மை'. சில இலட்சியப் பெண்களைக் குறிப்பிடும்போது, கண்ணகி, மணிமேகலை, திரௌபதி, ஆண்டாள் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். இதில் திரௌபதியைக் குறிப்பிடும்போது வியப்பாக இருந்தது.

''நம்முடைய இந்து மரபில் வரக்கூடிய
திரௌபதியை நான் சுட்டவில்லை
ஜைனபாரதத்தில் வரக்கூடிய
திரௌபதியைச் சுட்டுகின்றேன்''

(ஜைன திரௌபதி அர்ஜுனனை மட்டும் மணந்து கொண்டவள்) எனவே ஜைன திரௌபதியை ஒரு மாயையாகக் கட்டமைக்கிறார். இது அக்கால ஆண் தேசியத் தலைவரால் கட்டமைக்கப்பட்டது என்று வைத்துக் கொள்ள வேண்டும்

அடுத்து தேவதாசி தடுப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசும்போது, தேவதாசி முறை என்பது இந்தியாவின் ஓர் அங்கம், எனவே அந்த முறையை நீக்கக்கூடாது. இன்றைக்குத் தேவதாசி முறையை வேண்டாம் என்று கூறுவீர்கள், நாளைக்குக் கோயிலில் அர்ச்சகர்கள் வேண்டாம் என்று கூறுவீர்கள். பிறகு பார்ப்பனியர் அல்லாதவர் அர்ச்சகராக வேண்டும் என்று கூறுவீர்கள், எனவே தேவதாசி ஒழிப்பு முறையை நான் அனுமதிக்க மாட்டேன் என்று வாதாடுகின்றார். (சட்ட சபையில் பேசியதற்கு விரிவான ஆதாரங்கள் இருக்கின்றன).

இந்துத் திருமணச் சட்டம் (மணவிலக்கு) கொண்டு வரும்போதும் இதனை எதிர்த்து 'இது இந்துக்களுக்கு ஒவ்வாதது' என்று எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். (பெண்கள் பிரச்சனைத் தொடர்பாக சட்ட மன்றத்தில் சத்தியமூர்த்தி ஆற்றிய உரைகளின் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டவை).

தேசியப் போராட்டத்தில் பெண்களின் கடமை என்பதில் எஸ். ஜெயலக்ஷ்மி பேசுவதாவது:

''நான் தேவி சக்தியின் அம்சம்
சரஸ்வதி ஞானமும், அறிவுமாய் விளங்குகின்றாள் குடும்பத்தின் ஒற்றுமை, சண்டைச் சச்சரவுகள் பெண்களையே சார்ந்து இருக்கின்றது. வீட்டு நிர்வாகம் போலவே நடைமுறை ராஜ பரிவாரமும் கூட.''

என்று பேசுகிறார். அதாவது நாடு என்பது வீட்டின் விரிவாக்கம். பொது வெளியில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக நடந்து கொள்ளக் கூடாது என்று சத்தியமூர்த்தி பேசுகின்றார்.

தேவதாசி மாநாடு ஒன்று நடத்தப்படுகின்றது. அதில் நிதி திரட்டப்படும்போது, அதில் தேவதாசிகளிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகின்றது, என்னவென்றால், ''நீங்கள் மரியாதைக்குரிய மணவாழ்வு நடத்துகிறீர்களா?'' இம்மாநாட்டில் மூவலூர் இராமாமிர்தம் போன்றவர்கள் கலந்து கொண்டார்கள். சிலர் நடத்தவில்லை என்று ஒப்புக் கொண்டார்கள். சிலர் மறைத்து, ஆமாம் மரியாதைக்குரிய மண வாழ்வு நடத்துகின்றோம் என்று கூறுகின்றார்கள்; இதைக்கேட்ட காந்தி அப்படியெனில் நீங்கள் ஏன் இந்துப் பெண்ணின் அடையாளமாகிய தாலியை அணிந்து கொள்ளவில்லை? என்று கேட்டவுடன் ஒப்புக் கொள்கிறார்கள். பொட்டுக்கட்டும் முறைதான் இருக்கிறது என்று கூறுகின்றார்கள். நிதி வாங்குவதற்கு முன்னர் நீங்கள் ஏன் நூல் நூற்கும் வேலையைச் செய்யக்கூடாது? என்று கேட்டவுடன், அதில் வருகின்ற வருமானம் போதுமானதாக இருக்காதே! என்றவுடன், காந்தி பதில் ஏதும் கூறாமல் சென்று விடுகின்றார்.

அடுத்து மரியாதைக்குரிய பெண் என்பவள் யார்? என்ற வினா எழுகிறது. அதற்கு ஒரு பதில் கிடைக்கிறது என்னவெனில், அப்போது தேவதாசிகள் கைதாகிறார்கள். சிறையில் A, B, C என்ற மூன்று பிரிவில் இவர்களுக்கு **'C'** பிரிவு கொடுக்கப்படுகின்றது. உயர்ஜாதிப் பெண்களுக்கு **'A' 'B'** பிரிவு கொடுக்கப்படுகின்றது (போராட்டத்தில் உயர் ஜாதிப் பெண்கள், தேவதாசிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்) காந்திமதி அம்மாள், பெரியநாச்சியார் என்பவர்களும் இவர்களோடு கைதாகிறார்கள். இவர்களை விசாரித்து தீர்ப்புக் கூறிய திருநெல்வேலி மாவட்ட நீதிபதி ''மலிவான முறையில் தியாகி பட்டம் பெற முயற்சி செய்கிறார்கள்'' துணிச்சல் கெட்ட (அதாவது **Gold and bad** என்று கூறுகிறார். **Gold** என்பது ஆணுக்குச் சிறப்பானதாகவும், பெண்ணுக்கு இழிவானதாகவும் கருதப்பட்டது.) வீதிகளில் அலைபவர்கள்,

இதனைத் தமிழ் மரபில் பார்த்தால்

''செறி தொடி தெரிப்ப வீசி'' (சங்க இலக்கியம்) சூரிய வெளிச்சத்தில் கைகளை வீசிக் கொண்டு நடப்பவர்கள் என்று வரும். கைகளை வீசி நடப்பவர்கள் (வீதிகளில்) யார் யார் என்று கேட்டால் இரண்டு பேர்தான்

அகநானூற்றில் விலைமகள் ஒருத்தியும், மதுரைக் காஞ்சியில் சாமான்களை விற்றுக் கொண்டு செல்லும் பெண் ஒருத்தியும் கைகளை வீசிக் கொண்டு செல்வார்கள்.

மதுரை மாவட்ட நீதிபதி, தாயார் அம்மாள், சீதாலட்சுமி ஆகிய பாலியல் தொழிலாளிகளைப் பற்றி கூறுகின்றார். ஒருவர் நாட்டுக்கோட்டைச் செட்டியாரின் வைப்பாட்டி. ஆதலால் கொஞ்சம் அந்நியமானவர்கள், மற்றவர் ஒரு சாதாரண விபச்சாரி என்று அவர் சொல்கிறார். இதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் அங்கு கைதான உயர்ஜாதிப் பெண்களிடமிருந்து எழவில்லை. ஆனால் அதே நேரத்தில் தலைச்சேரியில் ஒரு நீதிபதி நீங்கள் தங்க நகை எதுவும் அணிந்து கொள்ளக் கூடாது என்று தாலியைக் கழட்ட உத்தரவிடுகிறார். இதற்காக சட்ட மன்றத்தில் கேள்வி கேட்கப்படுகிறது தமிழ்நாடு பத்திரிகையில் தலையங்கம் எழுதப்படுகின்றது, பெரிய பிரச்சனையே ஏற்படுகின்றது.

தேவதாசிகளைப் பற்றி இழிவாகப் பேசியபோது, தேசியவாதிகளிடமிருந்து எதிர்ப்புக்குரல் எழவில்லை. ஆனால் உயர்ஜாதிப் பெண்களின் தாலியைக் கழட்டச் சொன்னபோது பெரிய அளவிலான எதிர்ப்பு எழுகிறது. இந்தத் தேசியத்தின் ஊடாகப் பெண்ணியக் கருத்தாக்கத்தைப் பார்த்தோமானால் குடும்பம், குடும்பப் பெண், பொதுவெளி பெண்களுக்கு உகந்தது அல்ல என்றும், குழந்தை வளர்ப்பு, தாலி, குடும்பம், மங்கலமரபு, வீடமைத்தல் என்பது பெண்ணுக்கு உரியதென்றும் வரையறுக்கிறார்கள் இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தேவதாசிமுறையை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். சத்தியமூர்த்தி தேவதாசிகள் மாநாட்டை நடத்துகிறார். ஆனால் பெண்களுக்குப் 'பலதார மணம்' கூடாது என்று பேசுகின்றார்கள்.

பெண் என்பவளின் மரபு என்பது அவர் பதியுடன் இருக்க வேண்டும் என்பதுதான். தமிழ் மரபில் விறலியர், கணிகையர், காமக்கிழத்தி என்று மூவரைக் குறிப்பிடும்போது, முன் இருவர் பாட்டு, நடனமாடுகிறவர்கள், காமக்கிழததி என்பவர் ஒருவனுக்கு வைப்பாட்டியாக இருப்பவள். விலைமகளிர் என்பவர்கள் பாலியல் தொழில் செய்பவர்கள் என்று பொருள்படுகிறது. மரியாதைக்குரிய திருவள்ளுவர் கூட பொது மகளிர், பொதுநலனுடையார் என்று கூறுகின்றார். பொது என்பது தமிழகச் சூழலில் மிகவும் கேவலமான ஒரு சொல். 'பொதுநீக்கி அரசாண்டான்' என்றும் கூறப்படும். அதாவது இனக்குழு மக்களை ஒடுக்கி அவர்களின் சொத்தினைப் பெற்று அரசாண்டான் என்று கூறுகின்றார்கள்.

தொல்காப்பியர் முதல் இரத்தக் கண்ணீர் தங்கராசு வரை பதியிலாளர்களைப் பற்றி ஒரே மாதிரியான கருத்தைத்தான் கூறியிருக்கிறார்கள். 'இரத்தக்கண்ணீர்' கதை 'நாலடியாரி'ல் காணப்படுகின்றது.

''ஆமாபோல் நக்கி அவர் கைப்பொருள் கொண்டு
சேமாபோல் குப்புறவு சில்லைக்கண் அன்பினை
ஏமாந்து எமதென்று இருந்தாள் பெருவகை
நாமாம் பலரால் நகை'' (நாலடியார்)

இதற்குப் பொருள், காட்டுப்பசு போல நக்கி, பிறகு காட்டு எருதைப் போல தள்ளிவிடும் போலியான அன்பினை நம்பினால் பிறகு உலகம் உன்னைப் பார்த்துச் சிரிக்கும். இதுதான் இரத்தக் கண்ணீர் கதை.

பெரியார் ஒருவரைத் தவிர மற்ற திராவிட இயக்கத்தவர்கள் பெண்ணியம் குறித்த சிந்தனை அற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இரத்தக் கண்ணீர் திரைப்படம் நல்ல எடுத்துக்காட்டு.

ஔவை நாடகம் பார்த்திருப்பீர்கள். தமிழ் மரபில் பெண்ணுக்கான அடையாளத்துடன், அறிவு ஜீவிகளாக இருந்தவர்கள் யார் என்று பார்த்தால், ஔவையார், காக்கைப் பாடினியார், வெள்ளிவீதியார் முதலிய பதியில்லாத மரபில் வந்தவர்கள் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் அதன் பிறகு ஆண்டாள், காரைக்கால் அம்மையாரும் ஏதோ ஒரு வகையில் பதியைத் துறந்தவர்கள். மணிமேகலை புலவராக இல்லாவிட்டாலும் காப்பிய நாயகியாக பாடப் பெற்றவள். காளிமுத்து ('பருண பாதித்யன்' என்ற மடல் இலக்கியம் எழுதியவர்) முத்துப்பழனி (பிரதாப் சிங் அவையில் இருந்தவர் கணிகையர்) இவர் எழுதிய நூல் 'ராதா சாந்தவனம்' என்பது. இப்படி அறிவு ஜீவிகளாக இருந்த பெண்கள் அனைவரும் குடும்பத்தைத் துறந்தவர்களாக இருக்கிறார்கள். இன்னொரு வகையில் பார்த்தால் ஆணாதிக்கச் சமுதாயம் பெண்களின் சிந்தனைத் திறனைக் குடும்பம் என்ற அமைப்பின் மூலம் சிதைத்திருக்கிறது என்பதையும் அறிய முடிகின்றது.

பெண்களே நடத்தக்கூடிய 'மங்கையர் மலர்' இதழில் உள்ள தலைப்பை மட்டும் இங்கே சுட்டிக்காட்டுகின்றேன். தலையங்கத்தில் எழுதப்பட்டிருப்பது, தொலைக்காட்சியால் குழந்தைகள் கெட்டுப்போய் விட்டனர், மாத்ருபூதம் (பாலியல் மருத்துவர்) போன்றவர்கள் கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறார்கள் என்று எழுதிவிட்டு, பழைய மரபு, மேலை நாட்டு மரபு என்பதில் பழைய மரபு என்பது தாவணி, சேலை உடுத்திக் கொள்வது. இரண்டு கடவுளர்கள் குறித்து கெட்டிக்கார கணபதி — மற்றொன்று, அடுத்து சோதனைக் குழாய் குழந்தை (Test tube baby) முறை 20% தான் வெற்றி பெற்றிருக்கிறது. எனவே யோனி வழியாக, ஒருதார மனத்துடன் குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் அந்தக் கட்டுரை அமைந்துள்ளது. பிறகு மார்கழி வந்தாச்சு கோலம் போடலாமா? என்று நான்கு பக்கத்தில் ஒரு கட்டுரை, பிறகு குழந்தை வளர்ப்பு, அதாவது குழந்தையை எவ்வாறு அறிவு ஜீவியாக வளர்க்க வேண்டும் என்று ஒரு கட்டுரை. பிறகு கணவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள பல்வேறு வகையான குறிப்புகள், அழகுக் குறிப்புகள், மீதி மாவு கெட்டுப் போகாமல் இருக்க, காலி 'டப்பா' குறிப்பு என்று இவ்வாறாக பெண்ணியம் கட்டமைக்கப்படுகின்றது. இதில் பாலியல் தொழிலாளர்கள் வியக்கப்படுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பலதார மணமுடைய பெண்கள் விளக்கப்படுகின்றார்கள். குழந்தை மணம், மணவிலக்கு இந்து மரபிற்கு ஒவ்வாதது என்று கூறுவதன் மூலம் வேறு சில சிக்கல்களும் தோன்றும். அது மேற்கத்திய மரபு என்பது ஒருபுறமிருக்க,

இங்கிருக்கக் கூடிய பல இடைநிலை மற்றும் கீழ்ச்சாதி மக்களிடத்தில் குழந்தை மண முறையும் இல்லை. மணவிலக்கும் எளிதாக இருக்கிறது. கள்ளர்கள் இடத்தில் அறுத்துக் கட்டுவது என்று இருக்கிறது.

எனவே பெண்மை என்பதை உயர்சாதி இந்து பெண்ணைத்தான் கட்டமைத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே கூறியது போன்று நான்கு வகையான பெண்ணியத்தில் 'முதலாளியப் பெண்ணியம்' என்பது ஒன்றாகும். 1920 வரையில் இதில் அடங்கும். ஓட்டுரிமை, கல்வி முதலானவை. இதே காலகட்டத்தில் இந்தியாவைக் காட்டிலும் ஐரோப்பாவில் பெண் உரிமை என்பது குறைவாகத்தான் இருந்தது. மாநிலக் கல்லூரியில் பெண்களை முதன் முதலாகச் சேர்த்துக் கொண்ட அதே கால கட்டத்தில் ஐரோப்பாவில் பெண்களைக் கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளவில்லை. சுவிட்சர்லாந்தில் கடந்த பத்தாண்டு வரை பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மார்க்சியப் பெண்ணியத்தின் அடிப்படை, பெண் விடுதலை என்பது உலகப் பாட்டாளி மக்களின் விடுதலையோடு தொடர்புடையது என்ற நிலைப்பாட்டை முன் வைக்கிறது. அதில் முக்கியமாக காரல்மார்க்ஸ் பாபரிபாயின் குறிப்பிலிருந்து ஒரு குறிப்பைக் கொடுக்கின்றார்.

''தத்துவார்த்த ரீதியிலும், நடைமுறை ரீதியிலும் ஒழிக்கப்பட வேண்டிய நிறுவனம் குடும்பம்''

என்ற குறிப்பு இடம் பெறுகிறது. பின்னர் இதனைத் திருத்தி வெளியிட்ட எங்கெல்ஸ்,

> ''தத்துவார்த்த ரீதியில் திருத்தி புரட்சிகர ரீதியில்
> ஒழிக்கப்பட வேண்டியது குடும்பம் என்ற நிறுவனம்''

என்று கூறுகின்றார். மார்க்சியப் பெண்ணியம் இதுவரையில் கூறியது பெண்கள் பாலியல் சுதந்திரம் என்பதோடு கட்டுண்டு போகமால், முழுமையான பாட்டாளி வர்க்க விடுதலை, பெண்களை முழுமையான உற்பத்தியில் பங்கேற்கச் செய்வதின் மூலம் மட்டுமே பெண் விடுதலை சாத்தியம் என்பதை முன் வைத்தார்கள்.

தீவிர பெண்ணியம் என்பது, 1968, ஸ்லோமித் ஹையர்ஸ்போன் என்பவருடைய 'சிவப்புக் காலுறைகள்' என்ற அமைப்பு (முதன் முதலில் ஆண்களைச் சேர்த்துக் கொள்ளாத அமைப்பு) இவர்கள் வெளியிட்ட **''The case of feminest revolution''** என்ற நூலில் குறிப்பிடப்படுவது. பெண்கள் மறு உற்பத்தியில் ஈடுபடக் கூடாது என்றைக்குப் பெண் கருத்தரிப்பில் இருந்து விடுதலை பெறுகிறாளோ அன்று தான் பெண்களுக்கு விடுதலை கிடைக்கும். இதனை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் பெரியார் கூறியிருக்கிறார்.

> ''பெண்ணே உனது கருக்கதவை மூடினால்தான் உனக்கு விடுதலைக்
> கிடைக்கும். கருத்தரிப்பை நிறுத்து விட்டால், உலகம் விருத்தி

அடையாதே என்ற கவலை உனக்கு வேண்டாம். அப்படி நீ கவலைப்பட்டால் உனக்கு விடுதலை என்பது சாத்தியமில்லை. மலம் அள்ளுபவன், நான் மலம் அள்ள மாட்டேன் என்று கூறினால் ஊர்நாறும், ஊர் நாறுமே என்று மலம் அள்ளுவானேயானால், அவன் கடைசிவரை மலம் அள்ளிக் கொண்டே இருக்க வேண்டும்''

என்று பெரியார் கூறியிருக்கின்றார்.

மறு உற்பத்தியிலிருந்து விடுதலை, முழுமையான பொருளாதார சுதந்திரம், பாலியல் சுதந்திரம் இவற்றை தீவிர பெண்ணியம் முன் வைக்கின்றது. மேற்கூறிய மூன்று வகைப் பெண்ணியத்தில் இருந்தும் பெறப்படுவது ''பெண்கள் ஆண்களில் இருந்து அடிப்படையில் சாராம்ச ரீதியாக வேறுபடுகிறார்கள்.''

மேலும் பெண்ணியம் என்பதைப் பொதுவாக வைத்துப் பார்க்க முடியாது. ஐரோப்பிய நாடுகளில் வெள்ளைப் பெண்கள், கருப்புப் பெண்களை ஒடுக்குபவர்களாக இருக்கிறார்கள். இங்கு பார்ப்பன உயர்சாதிப் பெண்கள் தலித் பெண்களை ஒடுக்குபவர்களாக இருக்கிறார்கள் அடுத்து ஓரினச் சேர்க்கையாளர்கள் முன் வைப்பது என்னவென்றால், ஓரினச் சேர்க்கை என்பது தவறானது என்ற எந்தவித விஞ்ஞான முறைப்படியும் நிருபிக்கப்படவில்லை என்று கூறுகின்றார்கள்.

நான்காவது வகையான பெண்ணியம் என்பது ''எதையெல்லாம் பெண்களுக்குக் குறைபாடு உடையன என்று சொல்கிறீர்களோ, அதையெல்லாம் எங்கள் பலமாக மாற்றிக் கொள்வோம்''.

என்ற கருத்தாக்கத்தை முன் வைக்கிறார்கள்.

# குற்றவியல் நோக்கில் பெண்

க. சுமதி
*வழக்கறிஞர், சென்னை*

ஒரு சமூகத்தின் மேன்மையைக் கணக்கிட அதன் கலாச்சார மற்றும் பொருளாதார வளர்ச்சியே பொதுவாகக் கருத்தில் கொள்ளப்படுகிறது. கலாச்சாரம் என்பது அந்நாட்டு மக்களின் பண்பு, பழக்க வழக்கங்கள், நடவடிக்கை, கலை, இலக்கியம் எனப் பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியது. ஜாதி, மதம், இனம் ஆகிய மூன்று முக்கியமான விஷயங்கள் மேற்சொன்ன கலாச்சாரங்களை நிர்ணயம் செய்யும் அடிப்படை விஷயங்களாய் பல நேரங்களில் அமைந்துவிடுகிறது. இவையனைத்தையும் கருத்தில் கொண்டு ஒரு சமூகத்தைக் கட்டுக்கோப்பாய் நடத்திச் செல்ல சில சட்ட திட்டங்களை அமைக்கும் கடமை ஆட்சியாளர்கள் அல்லது ஓர் அரசாங்கத்தின் கையில் அமைந்துவிடுகிறது அவ்வாறு ஏற்படுத்தப்படும் சட்டங்கள் ஒரு நாட்டில் வாழும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒரு சட்டத்தை வகுத்து செயல்படுத்த முற்படும்பொழுது சில குறிப்பிட்ட சட்டங்களை ஏற்படுத்தி ஒடுக்கப்பட்டவர்கள், பின் தங்கியவர்கள் என்ற அடிப்படையில் சிற்சில சலுகைகள் அல்லது கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு அமைந்துவிடுகிறது

சட்டத்தை அமுல்படுத்தும் பொழுது உரிமையியல், குற்றவியல், அரசியல் அமைப்பு என்பவை முப்பெரும் பிரிவுகளாக அமைந்துவிடுகிறது. அவற்றில் குற்றவியல் சட்டம் ஆகியவை சமூகத்தில் குற்றங்களைத் தடுக்கவும் அவற்றில் ஈடுபடுபவர்களைத் தண்டிக்கவும் குற்றம் சுமத்தப்பட்டவர்களை விசாரிக்கும் முறையையும் ஏற்படுத்தி வைத்துள்ளது.

குற்றம் என்ற சொல்லுக்குப் பல்வேறு விளக்கவுரைகளைச் சட்ட நிபுணர்கள் கொடுத்துள்ளனர். குற்றம் என்ற சொல்லின் பல்வேறு விளக்கங்களைப் பார்க்கும் பொழுது குற்றவியல் என்ற சொல்லின் பொருள் எவ்வாறு கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் காணவேண்டியுள்ளது.

குற்றவியல் என்பதன் விளக்கத்தை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நோக்கும் பொழுது ''குற்றவியல் நோக்கில் பெண்'' என்ற கருத்தை நாம் எவ்வாறு பார்க்க வேண்டும் என்ற தெளிவு நமக்கு கிடைத்துவிடுகிறது.

பெண்களைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் ஒருபுறம்; சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் மறுபுறம்; பெண்கள்

குற்றவாளிகளாய் கருதப்படும் பட்சத்தில் அவர்களை நடத்த வேண்டிய முறைகளில் சில பாதுகாப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகள் ஒருபுறம்.

பொதுவாக குற்றவியல் நோக்கில் பெண்கள் என்று நாம் ஆராய முற்படும் பொழுது (1) குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் (2) குற்றங்களில் ஈடுபட்டு பாதிப்பு ஏற்படுத்திய பெண்கள் என்று இரண்டு வகையாகப் பிரித்துக்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் சென்னை மாநகரத்தில் மட்டும் குற்றங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் ஈடுபட்ட பெண்களின் புள்ளியியல் கிடைக்கிறது.

1994-ஆம் ஆண்டு தொடங்கி 1998 (30-11-98) முடிய உள்ள குற்றங்களில் ஈடுபட்ட பெண்களின் எண்ணிக்கை மூன்று கோணங்களில் பிரிக்கப்பட்டுள்ளது.

Penal Code (தண்டனைச் சட்டம்) ஈடுபட்ட பெண்கள், சாராயம் மற்றும் தடைசெய்யப்பட்ட மதுவிலக்குச் சரக்குகளில் ஈடுபட்ட பெண்கள், தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்ட பெண்கள்; அதுபோல் கடந்த ஐந்தாண்டுகளில் பெண்களுக்கு எதிராக நிகழ்ந்த குற்றங்கள் வருட வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும் பொழுது 1994-க்கும் 1998-க்கும் இடையே சாராய வழக்குகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. அதேபோல் நடப்பு ஆண்டில்தான் தடுப்புக் காவல் கைதிகளாக (சாராய வழக்குகளில்) 37 பெண்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

எனவே சாராய வியாபாரம் என்பதைப் பொருளாதாரத் தேவைக்காகச் செய்வதற்குப் பெண்கள் பெரிதும் தயாராகி வருகிறார்கள் என்பது தெளிவாகிறது. பொருளாதாரக் குற்றங்களில் பெண்கள் ஈடுபடத் தயாராகிறார்களோ என்ற ஒரு அச்சத்தை இது ஏற்படுத்துகிறது. மேலும் சாராய வியாபாரம் என்பது குடிசைப் பகுதிகளில் பெருமளவில் பொதுவாக நடைபெறுவதனால் வறுமையில் வாடும் பெண்களைப் பயன்படுத்தி சாராய வியாபாரம் செய்யும் புதிய உத்தியை வியாபாரிகள் கையாள்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களில் பெண்களைக் கேலி செய்வதில் ஈடுபடும் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

அடுத்து பெண்களை மானபங்கப்படுத்தும் குற்றம் (Molestation Dutraging Modesty of Women (354 IPC)அதிகமாக உள்ளது. ஆனால் நடப்பு ஆண்டு மட்டும் இதைவிட கற்பழிப்பு வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இதற்கு இணையாக வரதட்சணை கொடுமை வழக்குகள் இடம் பெறுகின்றன. பெண்களுக்கு எதிராக நிகழும் குற்றங்கள் கணக்கில் எடுத்துப்

பார்க்கும் பொழுது கணவன் மற்றும் அவர் உறவினர்களால் கொடுமைப்படுத்தப்படும் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து சீராக இடம்பெற்றுக் கொண்டு இருக்கிறது.

பெண்களுக்கு எதிராக நிகழும் குற்றங்களில் கிடைக்கும் புள்ளிவிவரம் உண்மையான தகவலாக நாம் கொள்ள முடியாது. காரணம் இன்னும் நம் சமூகச் சூழ்நிலையில் தங்களுக்கு எதிராக நிகழும் குற்றங்களைப் புகாராகப் பதிவு செய்ய வேண்டும் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பெண்கள் மனதில் வலுவாகத் தோன்றவில்லை.

குற்றங்கள், புகார் செய்யப்பட்ட குற்றங்கள், பதிவு செய்யப்பட்ட புகார்கள் **(Crimes, Crimes Reported, Crime Registered)** என்பதற்கு இடையேயான இடைவெளி மிக அதிகம். ஆனால் பதிவு செய்யப்பட்ட புகாரின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை, நடத்தப்படும் வழக்குகள் குறித்தே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒரு புகார் பதிவு செய்யப்பட்டு அது வழக்கமாக மாறி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு இடையே கிட்டத்தட்ட ஒன்றரை அல்லது இரண்டாண்டுகள் குறைந்த பட்சம் ஆகிறது. இந்த இடைவெளியில் ஒரு புகார்தாரர் அல்லது ஒரு சாட்சியின் நினைவாற்றல் என்பது ஒரு வழக்கைப் பெரிதும் பாதிக்கக் கூடிய விதியாக இருக்கிறது. ஒரு குற்றம் சுமத்தப்பட்டவர் அவர் விரும்பிய வழக்கறிஞரை நியமித்து தன் சார்பாக வாதாடவும், வழக்கை நடத்தவும் வசதி பெற்றிருக்கிறார். அதற்கான உரிமை அவருக்கு குற்றவியல்முறை விசாரணை சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு புகார்தாரர் தன் வழக்கை தான் விரும்பிய வழக்கறிஞரை வைத்து வாதாட முடியாது அரசு வழக்கறிஞர்களே அவ்வாறு வழக்குகளை விசாரிக்க முடியும். அரசு வழக்கறிஞர்கள் பொதுவாக அரசியலின் அடிப்படையில் நியமிக்கப்படுவதால் எல்லோருமே திறமை மிகுந்தவர்களாக அமைவது சாத்தியமில்லாது போகிறது. வழக்கைப் பதிவு செய்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் காவல்துறை, அதனடிப்படையில் வழக்கை நடத்தும் அரசு வழக்கறிஞர் இவர்களின் தயவில் தங்கள் புகாரைத் தங்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட குற்றத்தை விசாரித்து வழக்கை நடத்த வேண்டிய சூழ்நிலையில் இருப்பவர்களுக்குப் பல சங்கடங்கள், அவஸ்தைகள் எல்லாவிதமான தயாரிப்போடும் ஒரு வழக்கைச் சந்திக்க வரும் ஒரு குற்றவாளி அல்லது குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிராக காவல்துறை மற்றும் அரசு வழக்கறிஞரோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்புக்கூட அதிகம் அமையாத ஒரு புகார்தாரர் ஒரு வழக்கில் வெற்றி அடைவது மிகக் கடினமான செயல்.

குற்றவியல் முறைச்சட்டத்தின்படி ஒரு புகார்தாரர் தங்கள் சார்பாக ஒரு வழக்கறிஞரை நியமித்துக் கொள்ளலாம். அவ்வாறு நியமிக்கப்படும் வழக்கறிஞர் வாய் மொழியாக எவ்வித வாதங்களையும் நிகழ்த்த முடியாது.வழக்கு விசாரணையின் முடிவில் தங்கள் வாதங்களை மட்டும்

எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்க கு.வி.மு.ச. பிரிவு 314-ன் கீழ் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. வாதங்களை நிகழ்த்துவது ஒரு வழக்கு விசாரணை நடத்தி சாட்சியம் பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையிலேயே ஏற்படும் விசாரணையில் பங்கு கொள்ள வாய்ப்பில்லாமல் வெறும் எழுத்து மூலமான வாதங்களைச் சமர்ப்பிக்கும் உரிமை என்பது சரியான பலனைப் பெரிதும் ஏற்படுத்துவது இல்லை.

ஒரு குற்றப்பத்திரிகையின் மொத்த நகலையும் ஒரு குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வழங்கி வழக்கின் சாராம்சத்தை முழுவதுமாகத் தெரிந்து கொண்ட பின்னரே அவர் வழக்கை நடத்துகிறார். ஆனால் ஒரு புகார்தாரருக்குக் குறைந்த பட்சம் அவர் கொடுத்த புகாரின் நகல் மற்றும் வாக்குமூலத்தின் நகல் கூட வழங்கப்படுவதில்லை. இதனால் இரண்டாண்டு காலத்திற்கு முன் கொடுத்த புகார் மற்றும் வாக்குமூலத்தில் உள்ள தகவலுக்கும் நீதிமன்றத்தில் சொல்லப்படும் சாட்சியத்திற்கும் இடையே பல நேரங்களில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. காவல் துறையோ அரசு வழக்கறிஞரோ இதுதான் நீங்கள் கொடுத்த புகார் மற்றும் வாக்குமூலத்தில் உள்ள தகவல் என்று சாட்சியங்களுக்குப் பல நேரங்களில் நினைவுபடுத்தும் பணியை மேற்கொள்வதில்லை. இது பல வழக்குகளின் தோல்விக்குக் காரணமாகிறது. ஏனெனில் முரண்பாடுகளின் தொகுப்பே சந்தேகத்தின் பலனைக் குற்றம் சுமத்தியவருக்கு வழங்குகிறது.

இந்தச் சமமற்ற விசாரணைமுறை மாற்றப்படும் வரை வழக்குகளில் புகார்தாரர்களுக்கு நீதி கிடைப்பது எளிதல்ல.

ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்து விடலாம். ஆனால் ஒரு நிரபராதிகூட தண்டிக்கப்படக் கூடாது என்ற மேன்மையான கொள்கையே குற்றவியல் முறை சட்டம் ஏற்படுத்தப்பட்டதன் அடிப்படை. ஆனால் ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கும்போது ஆயிரம் புகார்தாரர்கள் நீதி கிடைக்காமல் போகிறார்கள். அவர்கள் சட்டத்தின் மீது வைத்த நம்பிக்கை தோற்றுப் போய்விடுகிறதே. அதற்கு என்ன செய்வது?

# 'மார்க்சிய நோக்கில் பெண்'

டாக்டர் மே.து. ராசகுமார்
எழுத்தாளர், சென்னை

இனம், மொழி, சாதி ஆகியவற்றைக் கடந்து, ஆண், பெண் என்ற வேறுபாட்டைக் கடந்து, இயற்கை, செயற்கை என்பதைக் கடந்து, அனைவருக்கும் கிடைப்பதைத்தான் மார்க்சியம் விரும்புகிறது.

உலகத்தில் உள்ள 20% செல்வர்கள், 85% வளத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் கடைக்கோடியில் கிடக்கும் ஏழை எளியவர்கள் 2.4% வளத்தைத்தான் வைத்திருக்கிறார்கள். (இருபது ஆண்டுகளுக்கு முந்தைய அளவு) இன்றைக்கு இந்த ஏழை எளியவர்கள் கொண்டுள்ள வளம் 1.4% ஆகும். உலக நாடுகளில் பாதிக்குமேல் ஏழை நாடுகளாக இருக்கின்றன. அவை 5.4% வருவாயைக் கொண்டுள்ளது. மீதமுள்ள 94.6% வருவாயை வளர்ச்சி பெற்ற நாடுகள் அபகரித்துக் கொண்டன.

தனிப்பட்ட முறையில் செல்வந்தர்களாக இருக்கும் 356 பேர் உலக வருவாயில் 45% வருவாயை பெற்றுள்ளனர். வளர்ச்சி அடைந்த நாடுகளில் மக்கள் தொகை குறைவாக இருந்தாலும், எரிசக்தியில் 70% அவர்கள் பயன்படுத்துன்றனர். இதேபோல உலோகங்களில் 75% இவர்கள் தான் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள், காடுகள் அழிப்பதை எதிர்க்கும் அவர்கள் தான், மரத்தால் செய்யப்பட்ட பொருட்களில் 85% பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். உலக மக்கள் தொகையில் 60% உணவு பற்றாக்குறையில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். 80 கோடி மக்கள் அன்றாடம் உணவுக்கு இல்லாமல் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். இதில் 32 கோடி பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். இதில் சரிபாதிபேர் பெண்கள். எனவே பெண்களுடைய பிரச்சனைகளை ஒட்டு மொத்த சமூகத்தோடு பார்க்க வேண்டும். ஒட்டு மொத்த சமூகமும் மாற்றம் அடையும் வரை பெண்கள் போராட வேண்டும். விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள் அனைவரின் விடுதலையும் ஒட்டு மொத்தமாக நோக்கப்பட வேண்டும் என்பதைத்தான் மார்க்சியம் வலியுறுத்துகிறது.

பெண்களைப் பொறுத்தவரையில் கல்வி அறிவு மறுக்கப்பட்டு இருக்கிறது. பெண்களுக்கு மட்டுமல்லாமல் சூத்திரர்களுக்கும், தலித் மக்களுக்கும் கூட கல்வியறிவு மறுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்று பெண்களுக்குக் கல்வி கொடுக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஆண்களைக் காட்டிலும், பெண்கள் அதிகம் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். எனவே வாய்ப்புக் கொடுத்தால் பெண்களால் அதையும் செய்ய முடியும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு, பெண்கள் நாடாளுமன்றத்திற்குச் சென்றவுடன், அடித்தட்டு மக்களுக்குச் சேவை செய்வார்களா? என்றால் இல்லை. அவர்கள் மேல்தட்டு மக்களுக்குத் தான் சேவை செய்வார்கள். ஏனென்றால் அப்போதுதான் அவர்களால் தங்களைக் காத்துக் கொள்ள முடியும்.

பண்பாட்டு வளர்ச்சியில் ஆண்கள் எந்த அளவிற்குத் தங்கள் பங்களிப்பைச் செய்து இருக்கிறார்களோ அந்த அளவிற்குப் பெண்கள் செய்து இருக்கிறார்கள். வேளாண் சமுதாயத்தின் வித்தாக இருந்தவர்களும் பெண்கள்தான். அதனால் தான் தாய்வழிச் சமுதாயத்தில் சொத்துரிமை எப்போது ஏற்பட்டதோ அப்போது தான் ஆணாதிக்கம் ஏற்பட்டது. பிறகு சொத்துரிமையைப் பாதுகாத்துக் கொள்ள மக்களை எப்படி அடிமைப்படுத்தினார்களோ அதே போலத்தான் பெண்களையும் அடிமைப்படுத்தினர். இதனை இப்படித்தான் மார்க்சியம் பார்க்கிறது.

ஆண்கள் தங்கள் குழந்தைகளுக்கு, குறிப்பாக ஆண் குழந்தைகளுக்குக் கல்வியறிவை நன்கு போதிக்கவே பெண்களுக்குக் கல்வி கொடுத்தார்கள். பெண்களைத் தங்களது குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேலைக்கு அனுப்பினார்கள். ஆகவே ஆணாதிக்கச் சமுதாயம் தங்களது உரிமைகளைப் பாதுகாக்கும் சமுதாயமாகவே இருந்து வந்திருக்கிறது.

சொத்துரிமையற்ற சமுதாயம் எங்கெல்லாம் இருந்திருக்கிறதோ, அங்கெல்லாம் பெண்களும், ஆண்களும் சமமாகத்தான் இருந்திருக்கிறார்கள்.

சோசலிச நாட்டில் 40% பெண்கள் ஆட்சியதிகாரத்தில் இருந்தனர். 50% வேலை வாய்ப்பில் ஈடுபட்டனர். ஆனால் ஆண்களுக்கு 55 வயதில் பணி ஓய்வும், பெண்களுக்கு 50 வயதில் பணி ஓய்வும் தரப்பட்டது.

இன்று குடும்ப அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது மாறலாம். அடித்தட்டில் உள்ள மக்கள்தான் மாற்றங்களை ஏற்படுத்துவார்கள். இதே சமூக அமைப்பை வைத்துக் கொண்டு பெண் விடுதலையைச் சாத்தியப்படுத்த முடியாது.

எங்கெல்ஸ் கூறியது:

> பாட்டாளி மக்கள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் பெருவதற்கு உலகமே இருக்கிறது.

எனவே பெண் விடுதலை என்பது, இந்தச் சமுதாய நலனோடு ஒன்றியது. சொத்துரிமைச் சமுதாயம் மாறுகின்றபோதுதான் பெண்கள் விடுதலை அடைய முடியும் என்பதைத்தான் மார்க்சியம் கருதுகின்றது.

# வேதக்கருத்தியல் நோக்கில் மகளிர்

**இராஜம் கிருஷ்ணன்**
**எழுத்தாளர், சென்னை**

வேதங்கள் பண்டைய ரிஷி முனிவர்களின் கண்டத்திலிருந்து ஒலித்த தெய்வக்குரல். எனவே அவற்றை ஆய்வு செய்வதோ மாறு சொல்வதோ கூட குற்றமானது என்ற கருத்து, தொன்றுதொட்டு வரும் இந்து சமயக் குரவர்களால் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. வேதப்பாடல்கள் உலகில் கிடைக்கக்கூடிய மிகத் தொன்மையான இலக்கியச் சான்றாக மனித சமுதாய வரலாற்றைப் பிரதிபலிப்பதால் மேல்நாட்டு வல்லுநர் பலரும் இந்தப் பாடல்களையும் இவை தோன்றியிருக்கக் கூடிய காலத்தையும் பற்றி ஆய்ந்து கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். மாக்ஸ்முல்லரும் வில்சனும் அத்தகைய ஆய்வாளரில் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

வேதங்கள் தொகுக்கப்பட்ட காலத்தை, பொதுவாக ஆய்வாளர் கி.மு. 1500-ம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய 900-ம் ஆண்டு வரையிலான நீட்சிக்கு உட்படுத்துகின்றனர். இதற்கும் பல்லாண்டுகளுக்கு முன்பே பாடல்கள் தோன்றியிருக்க வேண்டும். வரி வடிவம் பெற்றிராத நிலையிலேயே மந்திர ஒலியாய் வலிமை பெற்று, வரி வடிவம் பெற்ற பின்னரும், ''வேதம் சொல்வது'' என்ற வழிமுறையாகவே காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.

வேத சமுதாயத்தில் பிராம்மண - சத்திரியர் ஆதிக்க வெறியால் மோதிக் கொண்டதும், நால் வருணங்கள் ஆழ்ந்து, பஞ்சமர் என்ற அடிமை வருக்கத்தை நிலைப்படுத்த மனுவின் பெயரால் ருஷி முனிவர்கள் புதிய தரும சூத்திரங்களையும் சாத்திரங்களையும் நெறிப்படுத்தினர். பெண் வேத மொழியை உச்சரிக்கவும் தகுதியற்றவள் ஆனாள். கடைசி வருணாச்சிரமப் பிரிவைச் சார்ந்த சூத்தரர், பஞ்சமர் ஆகியோரும் இந்த ஒதுக்குதலுக்கு உட்பட்டவர்.

எனவே ஒரு பெண்ணாகிய நான் முறைப்படி ஒலிக்கிரமமாக வேதம் பயில வாய்ப்பு இல்லை. ஆனால், வரி வடிவங்களில் ஏடுகளில் வேதநூல் ஆய்வுக் குறிப்புகளுடனும் விளக்கங்களுடனும் வெளியாகி இருக்கின்றன. அவற்றின் துணை கொண்டு ''வேதக் கருத்தியல் நோக்கில் பெண்' என்ற இந்தத் தலைப்புக்கு ஏற்ற என் கருத்துரையை முன் வைக்கிறேன்.

1. பண்டைய ஆரிய சமுதாயத்தைப் பற்றிய தகவல்களை, 1028 பாடல்களை உள்ளடக்கியதும் மிகவும் தொன்மையாக விளங்குவதுமாகிய ருக்வேதம் அளிக்கிறது. இதன் அடிப்படையிலேயே யசூர் வேதம் வேள்விகள் இயற்றும் முறையையும், சாம வேதம் துதிப்பாடல்களை இசைப்பதையும்

முதன்மையாக்கித் தொகுக்கப்பட்டுள்ளன. அதர்வண வேதம் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டதென்று கருத்துரைக்கப்படுகிறது. இதில், மந்திர தந்திர சூத்திரங்கள், மருத்துவ சாத்திரம், வாழ்க்கை இயலுக்கான பல்வேறு சூக்குமங்கள் ஆகியவை அடங்குகின்றன. ருக் வேதம் காட்டும் சமுதாயம், ஆண் நாயக பிரபுத்துவ சமுதாயமே கடவுளரும், இயற்கைச் சக்திகள் என்று கொள்ளத் தக்கவராக, தேவ வடிவில், மனிதருக்குரிய இயல்புகளும் பிரதிபலிக்கும் தெய்வங்களாகவே திகழ்கின்றனர்.

பெண் வடிவங்களில், ஒளியும் வீரியமும் ஒடுங்கிப் போன பாவைகள் என்றோ, வெறும் உடமைப் பொருட்கள் என்றோ நிழல் இரேகைகள் கூடத் தெரியவில்லை.

கல்வி உரிமை பறிக்கப்பெற்று, காயரும்புப் பருவத்திலேயே கன்னிமை கழிக்கப்பெறும் திருமண வளையத்துள் தள்ளப்பட்டிருக்கவில்லை. கைம்பெண் கொடுமை, கற்புத்தத்துவம், சதிச்சிதை ஏற்றல், பெண் சிசுக்கொலை போன்ற அவலங்கள் ருக்வேதப் பாடல்களில் நிழலிடவில்லை.

சமுதாயத்தில் பெண்களின் தலைமையையும் முக்கியத்துவத்தையும் பறிக்க, வேத ஆண்நாயக அடிப்படையில் இருந்தே உருவாக்கப் பெற்ற பிராம்மணங்கள், உபநிடதங்கள், தரும சூத்திரங்கள், பதினெட்டுப் புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை புதிய கருத்துகளையும் அடிமை வருக்கத்துக்கான கோட்பாடுகளையும் உருவாக்கி நெறிப்படுத்தி இருக்கின்றன.

இந்நாள், இந்து சமுதாயத்தில் வழிபாடு செய்யப்படும் பல்வேறு கடவுளர், அவர்களின் வடிவங்கள், தெய்வக் குடும்ப வரலாறுகள் அனைத்தும் புராண இதிகாசங்களைப் பின்பற்றி உருவாக்கப்பட்டவையே. பெண்ணின் பிறப்பு உரிமைகளும் இயக்கங்களும் கட்டுப்படுத்தப்பட்டு ஆண் நாயக புராண தரும சூத்திரங்கள் அச்சமைத்து வார்க்கப்படும் வார்ப்புகளாகவே பரிணமித்திருக்கின்றன ஹரப்பா நாகரிகத்தில் மனிதர் வழிபட்டதாகக் கருதப்படும் பிரதிமைகள் சில உண்மைகளைத் தெரிவிக்கின்றன. பெண்ணுருவும் அவ்வுருவில் கிளைத்து வரும் செடி போன்ற வடிவமும் பூமி வண்மையுடன் மக்கட்குலம் பெருக ஆதாரமான தாய்மை, இரண்டையுமே சுட்டுகின்றன. ருக்வேதப் பாடல்களில் மாற்று வடிவங்களில் பெண்மையின் பல்வேறு இயல்புகளும் தாய்மைக்கு இலக்கணமாகத் திகழும் பண்புகளும் கவினுற வருணிக்கப்படுகின்றன.

2. முதலில் **அதிதி** என்ற தெய்வ வடிவைப் பார்க்கலாம்.

அதிதி என்ற சொல்லுக்கே எல்லையற்றவள், கட்டுப்படாதவள் என்று பொருள் கொடுக்கப்படுகிறது. இந்தத் தேவதை, எல்லையற்ற செல்வாக்குடையவளாக, மூப்பும் வாட்டமும் அறியாதவளாக விளங்குகிறாள். மிகவும் அக்கறையுடன் மக்களைப் பேணி நல்வழி நடத்திச்

செல்லும் திறமையும் கருணையும் அன்பும் உடையவளாக இருக்கிறாள். மித்ரன், வருணன், அர்யமான், இந்திரன் ஆகிய ஆதித்தியர்களாகிய நிகரற்ற புதல்வர்களின் அன்னை. இவள் அதிதி; இவள் புதல்வர்கள் ஆதித்தியர்கள். அதிதிக்கு நாயகர் என்று குறிப்பிடப்பட்டு அவர் பெயரால் மைந்தர்கள் குறிப்பிடப்படாததால் இந்தத் தெய்வம் தாய் நாயகச் சமுதாயச் சான்றாகத் துலங்குகிறது.

ருக்வேதப் பாடல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு கவிக்குரவர்களால் இயற்றப் பெற்றவை. ஆரியர் இந்தியாவுக்குள் வந்த தங்களை இந்த மண்ணுக்கு உரியவர்களாக ஆக்கிக் கொள்வதற்கு முன்பே புனையப் பெற்ற பாடல்களும் தொகுப்பில் உண்டு என்றும் சிலர் கருத்துரைப்பர். மனிதப் பிறவியின் துன்பங்கள், பாவங்களில் இருந்து விடுபட அதிதியாகிய தாயே துதிக்கப்படுகிறாள் இவள் மாந்தரின் உடல் துன்பங்கள் மட்டுமன்றி, உள்ளங்களின் கசடுகளையும் நீக்க வல்லவள். இயற்கையின் இனிய காட்சிகளும் வண்மை வரிசைகளும் இந்தத் தெய்வீகம் செறிந்த அன்னையின் பிரதி பிம்பங்களே.

(ருக் 1 -14 -5 (10) அதிதிவான்; அதிதி வளிமண்டலம் (அந்தரிட்சம்) அதிதி தாய்; தந்தை, மகன்; அதிதியே கடவுளர், அதிதியே ஐந்தொழில் புரிவோர் (பஞ்சஜனா:) அதிதியே பிறந்த, பிறக்கப் போகும் உயிர்கள்.

என்று போற்றும் பாடல் இது. மாக்ஸ்முல்லர் அதிதியை வானுக்கும் மண்ணுக்கும் அப்பால் விரிந்த எல்லையற்று விளங்கும் ஒரு பேருருவின் நற்பண்புகளுக்கும் ஆற்றலுக்கும் பண்டு முன்னோர் உணர்ந்தளித்த தெய்வீக வடிவென்று வியந்துரைக்கிறார். மேற்கூறிய பாடலை யாத்த முனிவர் கோதமர் என்று குறிக்கப்படுகிறது.

இதே ருக், முதல் மண்டலத்தில், பாடலில் இல்லாத விளக்கக் குறிப்பாய், அதிதி கச்யபர் மனைவி என்ற குறிப்பும், வருணன், மித்ரன், அர்யமான் அவள் புதல்வர்கள் என்றும் வருகிறது. இந்தப் பாடலை யாத்த முனி கண்வர்.

ருக் வேதத்தில் அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறும் பெண் தெய்வம், **'உஷஸ்'** அல்லது உஷா என்னும் உதயகன்னி.

இவள் மிக அழகான தேவதையாக வருணிக்கப்படுகிறாள். வானுக்கும் ஒளித் தேவனுக்கும் பிறந்த இந்தச் செல்வ மகள் வேதத்தில் முந்நூறு இடங்களில் குறிக்கப் பெறுகிறாள். இவளுக்கென்று இருபது பாடல்கள் இருக்கின்றன.

'சத்யச்ரவஸ்' என்ற ருஷியினால் பாடப் பெற்ற இப்பாடல்கள் ஐந்தாம் மண்டலத்தில் இடம் பெற்றுள்ளன. (ருக் - 5 - 6 - 8) ஓரிரண்டு பாடலின் சுமாரான தமிழாக்கம்.

விண்ணகத்து நன்மகள், நம்முன் தோன்றினள்
எழிலார்ந்த உடைகளணிந்து இன்பப் பூரிப்புடன்
மண்ணகத்துப் பெருநிதியாம் பொன்னொளிப்பாவை
மங்களக்கன்னியே, உதயமே, எம்மீது இந்நாள் செம்மை பொழிவாய்!

வானின் விளிம்புகளெல்லாம் ஒளி வெள்ளம் பாய்ச்சி,
இருளின் துகில்களை விலக்கி எறிந்தனள்
பொன்னின் குதிரைகளின் குளம்படி ஏரியில் பூதலம் விழித்தெழ,
உதயகன்னி தன் நற்றோர் ஏறி வந்தனள்,
எழுமின் மூச்சுக்காற்றே! உயிர் நம்மை மீண்டும் வந்தடைந்தது.

இவ்வாறெல்லாம் இவள் சுறுசுறுப்பாய் ஒளிக்கதவம் திறந்து உயிர்களைத் துயிலெழுப்பும் நேர்த்தி பாடப்படுகிறது

மண்ணகத்துக் கன்னியர் சுதந்தரமாக நடமாடுகையில் தொடர்ந்து செல்லும் இளைஞர்களைப் போல் உஷாவையும் பல தேவர்கள் தொடர்ந்து வருகின்றனராம். ஆனால் இவளோ, ஒளியோனாகிய சூரியக்காதலன் நெருக்கத்தில்தான் முகம் சிவக்கிறாளாம். ஒளியோன் தந்தை; ஒளியோன் காதலன் என்றெல்லாம் அவரவருக்கு உகந்த வகையில் கற்பனை செய்திருக்கின்றனர்.

இந்த வருணனைகள், இளங்கன்னியரின் சுதந்திர நிலையை இயம்புகின்றன.

உஷையின் இளைய சோதரி, ராத்ரி தேவதை. வெவ்வேறு வண்ணங்களுடைய இரு சோதரிகளும் மாறி மாறி வந்து மண்ணுலகை வாழ வைக்கின்றனர்.

**ப்ருதிவி** - மண் அன்னை. சீதா, பயிர் விளைச்சலுக்குரிய தேவதை. ருக் 4 - 5 - 12 - (5) ம் பாடலில் மங்களமான சீதையே எழுந்தருள்வாயாக. பேரருள் புரிபவளே, விளைச்சல் நல்குபவளே!

என்றெல்லாம் துதிக்கப்படுகிறாள். இப்பாடலுக்குரியவர் வாமதேவர் என்ற ருஷியாவர். சீதை என்றாலே கலப்பையின் உழுமுளை என்று பொருள் கொள்ளப்படுகிறது.

**இளா, சரஸ்வதி, பாரதி** ஆகிய மூன்று தேவதைகளும் 'வாக்' என்ற ஒலித் தேவதையின் வெவ்வேறு அம்சங்களைக் குறிக்கும் மூன்று வடிவினரேயாம்.

இளா, பாரதி, சரஸ்வதி (ருக் - 1 - 4 - 2 (9) ஆகியோரைச் சிறப்பிக்கும் பாடலின் ஆசிரியர் மேதாததி என்ற முனிவர்.

இவர்கள் மேலாம் இன்பத்தையும் நலன்களையும் புரக்கும் தெய்வங்கள்.

இளா என்ற தேவதை வேள்வி இயற்றுவதற்கான விதிமுறைகளை முதன் முதலாக மாந்தருக்குப் போதிக்கும் ஆசான் என்று போற்றப்படுகிறாள். இவள் வெண்ணெயை இட்டு அக்கினியை வளர்க்கும் மாண்பினள். அக்கினி தேவனின் அன்னை என்றும் போற்றப்படுகிறாள்.

சரஸ்வதி கசடுகளையும் தீய மலங்களையும் போக்கி ஞான வெள்ளமாகப் பரவும் தெய்வ வடிவினள். அறிவு, விவேகம், சாதுரியம், கற்பனை வளம் படைப்புத்திறன் புதிய கண்டுபிடிப்புகள் நுண்கலைகள் ஆகிய அனைத்து மனித ஆற்றல்களையும் பாதுகாத்து நலம் பயக்கும் ஞான தேவதை இவள். குருஷேத்திரத்தில் பாயும் ஆற்றை ஞான வெள்ளமாக இவளை உருவகப்படுத்தி இருப்பதாகவும் அந்நதிக்கரையில் வேள்விகளையும் பிற சடங்குகளையும் செய்வதற்கு ஆதி ஆரியர் கூடினர் என்பது வரலாற்றுக் குறிப்பு.

பாரதி இவள் நாவன்மைக்கு நல்தேவதை. எழுத்து வரிவடிவம் இல்லாத காலத்து, ஒலிகளின் நிகரற்ற ஆற்றலைப் பயன்படுத்தி நூறு நூறான அற்புதக் கவிதைகளை வடித்தனர், ருக்வேத காலச் சான்றோர்.

3 ருக்வேதம் விளக்கும் மணப்பெண்ணாக **சூர்யா** என்ற தேவதை வருகிறாள். (ருக் 10 - 7 - 1) பாடல்களை ஸவிதாவின் மகள் சூர்யாவே யாத்ததாக வருகிறது. ஆதவனின் ஒளிக்கரணமாகிய தேவதைக்கு இப்பெயரைச் சூட்டி, இவளைச் சந்திரனாகிய சோமனுக்கு மணமுடிப்பதாகப் பாடல் வருகிறது. ருக்வேதம் காட்டும் இம்மணவினையில் வரும் சில மந்திரங்களை, இன்றளவும் பிரும்ம விவாகங்களில் அந்தணர்கள் (பொருள் புரியாத நிலையில்) சொல்கிறார்கள். இந்த மணச்சடங்கில், தாலி, குங்குமத் தீற்றல் போன்ற எந்தச் சடங்கும் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தாயாண் சமுதாய காலத்தில் மணமகள் மணமகன் வீட்டுக்குச் செல்ல மாட்டாள்; சொத்துரிமை அவளுக்கிருந்தது; பிள்ளைகள் அவள் பெயரால் அறியப்படுவர். தந்தை அவர் தாய் அல்லது சகோதரி வீட்டிலிருந்து மனைவியிடம் வந்து போவார்.

தந்தை நாயகத்தின் முதல் ஆதிக்கம், பெண்ணை அவள் பிறந்த வீட்டில் அல்லது பெற்றோர் வீட்டில் இருந்து வேரோடு கெல்லினாற் போன்று பெயர்த்து இன்னொரு வீட்டுக்கு உரியவளாக்கிச் சேர்த்தது. கணவன் வீட்டுக்குச் செல்வது - விடை கொடுத்து வாழ்த்தல் - புதிய இல்லத்தில் அவளை உரியவளாக்கும் மந்திரங்கள், ஆகியவையே திருமணச் சடங்குகள்.

சூரியாவை, மணமகனின் தோழர்களாகிய அசுவினி தேவர்கள் தம் தேரில் வைத்துக் கொண்டு ஓட்டிச் செல்கிறார்கள். அவர்களும் சூரியாவின் கையை விழைகின்றனராம். அந்தக் காரணத்தினாலேயே சூரியாவைத் தம்

தேரில் வைத்து ஓட்டிச் செல்லும் உரிமை பெற்றிருக்கின்றனராம். இந்தத் திருமணத்தில் வரதட்சனை போன்ற எதுவும் பேசப்படவில்லை. ஆனால் பிறந்த வீட்டிலிருந்து தோழிகளால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட மணப்பெண், அவர்கள் அன்புடன் கொடுக்கும் பரிசில் அடங்கிய பெட்டியைக் கொண்டு செல்கிறாள். புறப்படத் தயாராக இருக்கும் போது, அவளுடைய சொந்த பந்தங்கள், தெருக்காரர், ஊரார் என்று யாவருமே அழைக்கப்படுகின்றனர். அவர்கள் வாழ்த்தி விடை கொடுக்க வேண்டும் இந்த ஒரு பாடல் (ருக் 10 - 7 - 1 - 33) ஸுமங்கவிரியம்வது என்று தொடங்குகிறது. 'இந்த மங்கல மணப்பெண்ணைப் பாருங்கள். நீங்கள் இவளுக்கு எல்லாப் பேறுகளும் இசையட்டும் என்று வாழ்த்தி அவரவர் இருப்பிடம் திரும்புங்கள் என்பதே பொருள் மணச்சடங்கு, கோலாகலமான விருந்து எதுவும் பேசப்படவில்லை. புதிய வீட்டுக்கு வரும்போது, அந்த வீட்டில் கூறப்படும் மந்திரங்கள் அனைத்தும் பெற்றோர், பந்த பாசங்கள் துறந்து புதியதோர் இடத்தில் புதிய உறவும் புதிய பொறுப்பும் ஏற்க வரும் பெண்ணுக்கு இதமாய்ப் பரிவாய் போற்றுதலுடன் கூறப்படும் உரைகளாகும்.

(ருக் - 10-7-1-45) 'இமாம் த்வாம் இந்த்ர' என்று தொடங்கும் பாடல், அருள் பொழியும் இந்த்ர, இவளைக் கணவனுக்கு இனிமையானவளாகவும், ஆண் மக்களைப் பெறும் அன்னையாகவும் அருள்வாய்; இவள் பத்துப் புதல்வர்களுக்கு அன்னையாகட்டும்; பதினோராவதாக, கணவனையே மைந்தனாக்கட்டும், புதிய இல்லத்துக்கு அரசியாக, இல்லம், கன்று காலிகளாகிய செல்வங்கள், கணவன், சுற்றம் ஆகிய ஓர் இராச்சியத்துக்குத் தலைவியாக இருப்பாய் என்றே வாழ்த்தப் படுகிறாள். ஆணின் உடல் வலிமை காரணமாகவோ அல்லது அவனுக்கு உரிய வேறு ஆற்றல் காரணமாகவோ, அவள் அவனுக்குக் கீழ்ப் படிந்து அடிமை போல் ஆக வேண்டும் என்ற குறிப்பு எங்கும் இல்லை. மேலும் பெண் பருவ மலர்ச்சியும் அக மலர்ச்சியும் பெற்ற பின்னரே திருமணம் நிகழ்கிறது. பெண்களும் உபநயனம் செய்யப்பட்டு, கல்வியறிவு பெற்றிருந்தனர். ஒவ்வொரு இல்லமும் கல்விக் கூடமாகத் திகழ்ந்தது.

**இந்திராணி,** தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் தன்னிகரற்ற மனைவி. ஆணைச் சார்ந்து இவள் மேன்மை பெறுகிறாள் என்றில்லாமல் தனித்துவம் குறிப்பிடப்படுகிறது.

**ப்ரஷ்னி,** புயல், மேகம் ஆகியவற்றுக்கு உரியவர்களான 'மருத்'துகளின் அன்னை பல வண்ணச் சாயல்களுடைய மண் அன்னையான 'ப்ரஷ்னி' தேவதையை, ருஷி *மேதாதிதி, சொர்க்கம், வான்* என்றும் போற்றுகிறார் (ருக் 1-8-3(4)

**அரண்யாணி** இவள் வனங்களுக்குரிய தேவதை.

தேவமுனி என்ற ருஷி யாத்த பாடல்களில் இந்த அரண்யாணி வள்ளன்மையும் கருணையும் உடையவளாக, பேரன்னையாகப்

புகழப்படுகிறாள். ருக் (10 - 11 - 18 - (6) கஸ்தூரி மணக்கும், செழுமையான பண்படுத்தப்படாத வன விலங்குகளின் காப்பகமே! உன்னைப் புகழ்ந்து போற்றுவேன்!

4 ருக்வேதக் கவிஞர் வரிசையில் பல பெண்மணிகளின் பெயர்கள் இடம் பெறுகின்றன.

லோபமுத்ரா, கோசா, அபலா, சூர்யா, யமி, இந்திராணி, சர்ப்பரஜனி, ஊர்வசி... என்று பட்டியல் நீள்கிறது.

சில பெயர்கள் தேவதைகளாகவே, பாடலை யாத்தவர்களாகவே குறிப்பிடப்பட்டிருப்பது குழப்பமாக இருக்கிறது.

பெண் ருஷிகளே யாத்தவை. பெண்களின் பெயரில் தெய்வங்களே யாத்தவையாகப் பிறர் பாடியிருக்கக் கூடியவை என்று ஆய்வாளர் பிரிக்கிறார்கள்

எப்படிப் பார்த்தாலும் ருக்வேத - துவக்க காலத்தில் பெண்களுக்கு மிக உயர்ந்த கல்வியறிவு இருந்தது தெரிய வருகிறது. போர்க்கலையில் சிறந்து விளங்கிய பெண்களைப் பற்றியும் பாடல்களால் அறிய முடிகிறது.

கேல அரசனின் மனைவி விஸ்பலா கணவனுக்கு உதவியாக எதிரிகளைத் தாக்கிக் கடும்போர் புரிந்ததில் ஒரு காலை இழக்க வேண்டியதாயிற்று. அசுவினி தேவர்களின் அருளால் (இரும்புக் காலை) பொருத்திக் கொண்டு மீண்டும் பகைவருக்கு யமனாக நின்றதை, காக்ஷிவர் என்ற ருஷியின் பாடல் (ருக் 1 - 17 - 1 (15) தெரிவிக்கிறது.

**முத்கலானி** என்ற பெண்மணி முத்கலரின் மனைவி. முத்கலர் யாத்த ஒரு பாடலில் (ருக் - 10 - 9 - 3 - (2) தங்களுக்குச் சொந்தமான கன்று, பசுக் கூட்டத்தைக் கொள்ளையர் கவர்ந்து சென்றபோது அவர்களுடன் முத்கலானி வீரப் போர் புரிந்து மீட்ட செய்தி இடம் பெறுகிறது. **லோபமுத்ரா,** அகஸ்த்யரின் மனைவி. முதல் மண்டலத்தில் இவள் யாத்ததாக ஒரு பாடல் வருகிறது. (ருக் - 1 - 23 - 15). இவள் ஓர் அரசகுமாரி. செல்வச் செழிப்பு, ஆடம்பர அணிபணிகளைத் துறந்து, அகத்திய முனிவரை மணந்ததனால் முனியின் இல்லத்தரசியாக கானக ஆசிரமத்துக்குத் தவ வாழ்வு வாழ வருகிறாள். பல ஆண்டுகள் தவமியற்றும் முனிவருக்குத் தொண்டுகள் செய்து நலிகிறாள். ஒரு பெண் என்ற நிலையில் கணவனிடம் இன்பம் அனுபவிக்கவும் ஒரு தாயாகவும் ஏங்கி ஏங்கி அவள் உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள்.

பல்லாண்டுகள் உளமாறத் தொண்டாற்றினேன்
காலை, நண்பகல், இரவு பாராமல் உடலுழைத்தேன்
அழகுவாடி, அங்கம் தளர, முதுமை அணுகிவரும்
கணவன்மாரே; தங்கள் மனைவியரை அணுகுவீர்!

**இந்திராணியும்** ஒரு பாடலின் ஆசிரியையாக இடம் பெறுகிறாள். ஒரு பெண் தன் காதலனை அல்லது நாயகனை வேறொரு பெண் அணுகலாகாது என்றே நினைக்கிறாள் தனக்கு இவ்வகையில் ஏற்படக் கூடிய விரோதிகளை அழிக்கும் முகமாக இந்தப் பாடல் பத்தாவது மண்டலத்தில் வருகிறது (ருக் 10 - 11 - 17) மேல்நோக்கிய இலைகளுடன் கூடிய ஒரு மூலிகைச் செடியை வேருடன் கெல்லிக் கொண்டு வந்து இந்த மந்திரப் பாடலைச் சொல்லித் தலையணைக்கடியில் வைத்து, நாயகன் வந்தமர்ந்ததும் இந்த மந்திரத்தை மனனம் செய்தவாறு அவனைத் தழுவினால் அவன் மனதில் இவளைத்தவிர எந்த ஒரு பெண்ணின் நினைவும் அணுக முடியாதாம்! (இதுவே இன்றளவும் தலையணை மந்திரம் என்ற வழக்குச் சொல்லாக நிலை பெற்று விட்டது).

**கோசா** என்ற பெண்மணி பிரும்மவாதினியாகப் புகழ் பெற்றவர். இவர் ருஷிகாச்சிவானின் மகள். வெகுநாட்கள் தனக்கிருந்த நோயினால் திருமணமாகாமல் முதிர்கன்னியாக முதுமையடையும் நிலையில் அசுவினி தேவர்களை வேண்டிப்பாடிய இருபத்தெட்டுப் பாடல்கள் ருக் 10 - 3 - 10, 10 - 3 - 11 என்ற இரு பிரிவுகளில் இடம் பெற்றிருக்கின்றன. இவள் ருஷிகாச்சிவானின் மகள். ஆனால் கணவர் யாரென்று தெரியவில்லை. இவள் நோய் நீங்கப் பெற்று ஒரு மகனுக்குத் தாயாயிருக்கிறாள். அந்த மகன் கோசாவின் மகன் ஸுஹஸ்த்யர் என்ற பெயரில் 10 - 3 - 12 -இல் அசுவினி தேவர்களைப் போற்றும் பாடல் வருகிறது.

யமன் - யிமி உரையாடல் (ருக் 10 - 1 - 10) ஊர்வசி - புரூரவஸ் உரையாடல் (ருக் 10 - 8 - 5) இரண்டுமே பெண்கள் பெயரில், முறையே யமி - ஊர்வசி என்று குறிப்பிடப்படுகிறது.

ருக்வேதச் சான்றுகள் இதே கால கட்டத்தில் வாழ்ந்த ஆதிகுடியினர் (அசுரர்?) பெண்கள் படையையே வைத்திருந்தனர் என்றும் இவர்கள் தாயாண் சமூகமாக இருக்கலாம் (ருக் 5/2116) என்றும் ஊகிக்க இடம் இருக்கிறது. விருத்திராசுரனின் அன்னை தனு இந்திரனுடன் வீரப் போர் புரிந்து மகனைக் காக்க முயன்றாள். ஆனால் இந்திரன் அவளையே தன் வச்சிராயுதத்தால் அடித்துக் கொன்றான். விருத்திராசுரன் (பிராம்மணன்) என்ற புராணக் குறிப்பும் இருக்கிறது. அவனையும் இந்திரன் வீழ்த்துகிறான்.

இது தாயாண் சமூக வீழ்ச்சியைக் கூறும் செய்தியாகவும் இருக்கிறது. நால்வருணங்கள் இன்னும் ஆழ்ந்து விடாத ருக்வேதம் காட்டும் ஆரிய சமுதாயத்தில் பெண்கள் கல்வி, நல்லறிவு, ஆடல் பாடல் கலைகளிலும் தேர்ந்திருந்தனர். மாலை நேரங்களில் ஒத்த இளைஞருடன் உல்லாசமாக அறிவுக்கும் மனதுக்கும் உற்சாக மூட்டக்கூடிய விநோதக் களியாட்டங்களில் ஈடுபடக்கூடிய பொழுதுபோக்குக் கூடங்கள் இருந்தன.

ருக் வேத காலத்தில் சடங்குகள் மிகக் குறைவு. மரித்தவர் புதைக்கப்பட்டனர்.

ருக் வேதத்தில் மகள் வேண்டாமென்று நிராகரிக்கப்பட்டதற்கான குறிப்புகள் இல்லை.

ஆனால் அதிதி ஆதித்யர்களால் பெருமைப்படுத்தப்படுவதுபோல் புத்திரர்கள்தாம் எப்போதும் வேண்டப்படுகிறார்கள்.

வேதமொழிக்கு விளக்கம் கொடுக்கப்படும் போதேனும், ஆண் நாயக நோக்கில் அந்தப் பொருள் இடம் பெற்றிருக்கிறது.

ஒரு வீட்டில் மரணம் நிகழ்ந்ததும் மரண தேவனைப் பணிந்து வேண்டுவதாக ஒரு பாடல் வருகிறது (ருக் 12 - 2 - 2) மரணதேவ, நீ பிறிதொரு பாதையில் திரும்பிச் செல்வாயாக! அது கடவுளர் பாதையல்லாமல் உனதாகவே இருக்கட்டும்!

எங்கள் சந்ததியினரையோ, ஆண் மக்களையோ உன் பார்வைக்குட்படுத்தாமல் போய்விடு! (சந்ததி - ப்ரஜா புத்ரா - வீரா).

ப்ரஜா என்றால் சந்ததி என்றும் வீரா என்பதற்கு வீரர்கள் என்றும் பொருள் கொடுக்கப்படவில்லை. ஆரியர் பல இனத்தாரோடு மோத வேண்டி இருந்தது. அதனால் எங்கள் வீரருக்கு மரணம் நிகழக் கூடாது என்பது நியாயமான பொருள் அல்லவா?

இதேபோன்று பல இடங்களில் ஆண் நாயக நோக்கில் விளக்கம் ஆக்குமமாக உணர்த்தப்படுகிறது.

இந்திரனைத் துதிக்கும் ஒரு பாடல் நான்காம் மண்டலத்தில் வருகிறது. (ருக் 4 - 2 - 7) கன்றுகாலிகள் - பசுக்களை, குதிரைகளை, நல்ல உணவைப் பெண்களை விழைபவர்கள். கொடுத்துச் சளைக்காத வள்ளலைக் கூவி அழைப்போமாக! என்ற பொருள் உள்ள பாடலில், பெண்கள் என்ற சொல், 'ஜனீ', என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. ஜனீ என்றால் உயிர் கொடுப்பவள்; பிறப்பிப்பவள் என்று பொருள் கொள்ளலாம். அவள் பிறப்பித்த உயிர்களே 'ஜனம்' என்று வழங்கப்படுகிறது. எனவே அத்தகைய 'ஜனீ' என்ற சொல்லுக்கு, எங்களுக்குப் பெண் குழந்தைகளைத் தாருங்கள் (தாயாராகக் கூடியவர்களைத் தாருங்கள்) என்று பொருள் கொடுக்கப்படவில்லை.

'மனைவியரை'த் தாருங்கள் (Wives) என்று பொருள் உணர்த்தப்படுவது ஏனோ?

இது போன்ற பொருட்பேதங்களில் முரண்பாடு துலங்கினாலும், ருக்வேதம் பாலியல் சார்ந்த கற்பு நிலையைக் குறிப்பாக்கவில்லை என்றே சொல்லலாம்.

தொன்மைச் சமுதாயத்தில் பாலியல் சார்ந்து பெண் விருப்பத்தைத் தெரிவிக்கக் கூடியவளாக இருந்தாள், சகோதர - சகோதரி உறவு விலக்கப்பட்டிருக்கவில்லை என்பது யமன் - யமி உரையாடலில் பிரதிபலிக்கிறது. பாலியல் சார்ந்த பெண் சுதந்தரமும் ஆண் நாயகக் கோட்பாடுகளும் இசைந்த சமுதாயம் சிக்கல்களில்லாமல் இருக்க முடியாது. சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

மணமாகாத மங்கைக்குக் காதலர் இருப்பது வழக்கமே. மணமான பெண்களுக்கும் கள்ளக் காதலர் இருந்தனர் என்று தெரியவருகிறது.

சமூக விலக்குக்கு அஞ்சிப் பெற்ற சிசுவைக் கைவிடும் குறிப்பும் காணப்படுவதாக, வேத நூல் வல்லுநர் பகவத்சரண் உபாத்யாயா தம் ருக்வேதத்தில் மகளிர் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ஆனால் (ருக் 10 - 12 - 11) பத்தாவது மண்டலத்தில் பிரும்ம ருஷியின் மகன் 'ரக்ஷோஹன்' என்ற ருஷி யாத்த பாடல்களில் கருப்பையில் வளரும் கருவுக்கு எந்தத்தீமையும் வராமல், கருச்சிதைவு ஏற்படாமல் காத்தருள அக்கினிதேவனை வேண்டுகிறார். அந்தத் தீமை, சகோதரன், காதலன், கணவன் எவர் உருவிலும் வரவேண்டாம் என்று வேண்டுகிறார் கருப்பமாக இருக்கையில் உடலுறவு கர்ப்பத்துக்கு ஊறு செய்யும் என்ற பொருளில் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. அதை வேண்டுமென்றே செய்யக்கூடியவர் என்ற பொருளும் இந்த மூவரில் பிரதிபலிக்கிறது.

6. பொருட்பேதங்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக பத்தாம் மண்டலத்தில் வரும் பாடலை (ருக் 10 - 2 - 7) யாத்தருஷி யமனின் மைந்தன் ஸங்குஸகர். யமன் வந்து சென்ற பின் நிகழ்வதை இப்பாடல்கள் விவரிக்கின்றன. இப்பாடல் தொகுப்பில்தான் ப்ருதிவியாகிய மண் அன்னை தன் மகனை மடியில் வைத்து மூடிக் கொள்வதைப்போல் உறுத்தாமல் மூடிக் கொள்ள வேண்டும் என்ற புதைச்சடங்கு பற்றிய விவரம் வருகிறது இதன் நடுவே, இறந்தவனின் மனைவியிடம், உன் பதிக்கு உயிரில்லை, இவனோடு நீ இருந்த நாட்கள் முடிந்து விட்டது நீ வேறு ஒரு பதியைத் தேடிக் கொள்ளலாம் என்று உணர்த்தும் குறிப்புடன் ஒரு பாடல் இடம் பெறுகிறது. அந்தப் பாடலில் அங்கு சூழ்ந்திருக்கும் பெண்கள், தங்கள் கைகளில் வாசனைப் பொருட்களுடன், ஈமச்சடங்கு நடக்கும் இடத்திலிருந்து துயரமோ கவலையோ இல்லாதவர்களாக முன்பே வீடு நோக்கி அவளை அழைத்துச் செல்லட்டும் என்ற பொருள் துலங்குகிறது. பெண்களை, விதவையல்லாதவரும், நல்ல பதியை உடையவரும் என்று குறிப்பிட்டுக் காட்டும் பாடல். இமா நாரீரவித வா - ஸுபத்னீ ராஞ்ஜனேன, ஸர்விஷா ஸம்விசந்து । அனச்ரவோ அனமீவா: ஸுரத்னா ஆரோஹந்து ஜனயோ, யோனிமக்ரே ॥

சதி வழக்கம் இல்லை என்பதை விளக்கும் இதே பாடலை, சதி வழக்கத்துக்கு ஆதாரமாகப் பிற்கால ஆண்நாயகக் காவலர் பயன்படுத்திக் கொண்டனர்.

யோனி என்ற சொல்லுக்கு, இல்லம், பிறப்புறுப்பு, சிதை என்று பொருள் கொடுக்கப்படுகிறது.

**யோனி மக்ரே** முன்னே வீட்டுக்கு என்ற பொருளுக்கு மாற்றாக **யோனி மக்னே** என்று திரித்து சிதைத்தீக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று மாற்றப்பட்டது. அக்ரே என்றாலும் அக்ரன் - முதல் தேவனாகிய அக்கினி என்று ஆண் ஆதிக்கப் பண்டிதர்கள் வாதம் செய்தனர். நூற்றாண்டுகள் பெண்களைச் சிதையில் எரிக்கும் பழக்கத்துக்கு இது ஆதாரமாக இருந்தது. இந்தத் தவறை மாக்ஸ்முல்லரே கண்டு குறித்தார் என்றும் சொல்லப்படுகிறது

இந்தியாவில் கவர்னர் ஜனரல் வில்லியம் பெண்டிங்க் சதியை ஒழிக்கும் சட்டம் இயற்றிய போது, சனாதனக் கூட்டம் இப்படி வேத ஆதாரம் காட்டி, பெண்களைச் சிதையில் எரிப்பதற்கு தரும நியாயம் கற்பித்தது.

வேத மொழியும் பாடல்களில் காணப்படும் சொற்களும் அவற்றுக்குரிய நேர்ப்பொருளை மெய்ப்படுத்துவதாகக் கொள்ள முடியவில்லை. இயற்கைச் சக்திகள், அவற்றின் இயக்கங்கள் அறிவியல் நுட்பங்கள் ஆகியவற்றை உட்பொருளாக உணர்த்துவதாக வல்லுநர் கருத்துரைத்திருக்கின்றனர். எடுத்துக் காட்டாக, சவிதாவின் மகள் சூர்யாவின் திருமணம். சூர்யா சோமனை - சந்திரனை மணக்கிறாள். சவிதாவின் கிரணம் - சந்திரனுக்கு ஒளியூட்டுகிறது. அசுவினி தேவர்கள் அந்திசெந்தி - இந்திரன் மேகங்களை உடைத்து மழை பொழிய வைக்கிறான் என்பன போன்று உட்செய்திகள் - அறிவியல் நோக்கில் ஆய்வுசெய்யப்பட்டிருக்கின்றன.

அண்மைக் காலத்தில் எம். சுந்தர்ராஜ் என்ற பேரறிஞரான வேத ஆய்வாளர், வேதங்கள் தெய்வீக ஒலிகளா? என்ற தலைப்பில் ஆய்வுகள் செய்துள்ளார்.

இதே தலைப்புள்ள நூலொன்றில், சிந்துவெளி எழுத்துக்கள், இலச்சினைகளுடன் ருக் வேதப் பாடல்கள் சிலவற்றை ஒப்பிட்டு ஓர் அரிய ஒற்றுமையைக் காட்டியுள்ளார். அது வேத ஆய்வு குறித்த தகவல் களஞ்சியத்தையே திறந்து விடும் சாதனம்போல் அமைந்துள்ளது.

இந்த நூலில், சிந்துவெளி நாகரிக தொன்மைச் சமுதாயத்தினர், தம் கருத்துகளையும் நம்பிக்கைகளையும் வெளியிடக் கையாண்ட கற்பிதங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

எந்த நோக்கில் பார்த்தாலும் பெண் என்பவள் தாய்மை என்னும் பூரணத்துவத்தை எய்த ஒரு மகவைப் பெறுவதே பிறவிப்பயன் என்று கருதுவது புலனாகிறது.

இயற்கையில் ஏற்படும் கோர விபத்துகளும் போர்களும் மனித உயிர்களுக்கு இழப்பு நேரிட்ட நிலையில் சமுதாய உற்பத்திக்கான தாய்மை மேலாம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பெண்மையையும் பேணுவதும் ஆண் பிற வெளிப்பொறுப்புகளில் ஈடுபடுவதுமாக உழைப்புப் பிரிவு வந்த

போதிலும் புருஷசூக்தம் கூறும் நால்வருண சமுதாயப் பிரிவு தொடக்க காலத்தில் ஆழ்ந்து விடவில்லை அடிமைப் பெண்கள் பற்றிய குறிப்பு இருக்கிறது. இவர்கள் தாயாண் சமுதாய அரசுடன் போர்புரிந்து, போரில் வென்ற பெண்களை அடிமைகளாக்கிக் கொண்டிருக்கலாம் என்று ஊகிக்க இடம் கொடுக்கிறது.

ருக் வேதம் கூறும் சமுதாயத்தில் சடங்குகள் மிகக் குறைவு. இறந்த பின் புதைக்கப்பட்டனர். அதர்வ வேதம் மரித்தோர், மறுபிறவி என்று இறப்புக்குப் பின்னான நம்பிக்கைகள், எல்லாவற்றுக்கும் இடம் கொடுக்கிறது மரித்தோர் எரிக்கப்பட்டனர். தந்தைக்கு நீர்க்கடனாற்றப் பிள்ளைகள் இன்றியமையாதவர்கள் என்றாயிற்று. கருவில் இருக்கும் குழந்தை ஆணாகவே இருக்கவும் நல்லபடியாகப் பிறக்கவும் சடங்குகள் செய்யப்பட்டன.

ருக்வேதம் திருமணமில்லாமல் வாழ்ந்த பிரும்மவாதிகளைக் காட்டுகிறது. அதர்வ வேதத்தில் திருமணமாகாத பெண்ணை யமனுக்கு மணவாட்டியாக்கியதாக ஒரு சடங்கு குறிப்பிடப்படுகிறது

பெண் தன் சுதந்தரச் சிறகுகளை ஒவ்வொன்றாக இழக்கிறோம் என்ற உணர்வில்லாத நிலையிலேயே ஒரு சார்புப் பிராணியாக வேண்டிய நிலைக்கு ருக்வேதத்திலேயே ஆதாரம் அமைந்துவிட்டது. ஏனெனில் ருக்வேதம் காட்டும் சமுதாயம், ஆண் நாயக இந்திரத் தலைமையைக் கடவுளாகப் போற்றித் துதித்த பிரபுத்துவ சமுதாயம்தான்.

இந்தச் சமுதாயத்தில், மகளிரும் மற்றவரும் சகமனிதர் என்ற நிலையில் அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுப்பது போராட்டமாகவே இருக்கிறது.

ருஷி முனிவரர்கள் தவ வலிமையும் ஆன்மீக ஏற்றமும் பெற்றதன் நோக்கம் ஒப்பற்ற மனித நேயம் பேணும் சம தர்ம சமுதாயத்துக்குத் தான் என்ற கருத்து, சம்வனனர் என்ற ருஷியாத்த சம்வனை சூக்தம் ஒன்றில் மட்டுமே காணக் கிடைக்கிறது இதே போன்ற கருத்துக்கள், அதர்வ வேதத்திலும் சம்வனை சூக்தம் என்ற பெயரில் இடம் பெற்றிருக்கின்றன.

> ''ஒன்றாய்ச் சேருங்கள்; கூட்டாய் இயங்குவீர்; கலந்துரையாடுவீர்,
> உங்கள் நோக்கமும் வேண்டுதல்களும் ஒன்றாய் இருக்கட்டும்.
> உண்ணும் உணவும், பருகுநீரும் ஒன்றாக இருக்கட்டும் - உங்கள்
> சிந்தனைகள், இலட்சியங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கட்டும்.

(ருக் 10 - 12 - 40)

... என்று, சமத்துவ வாழ்வை, கூட்டு வாழ்வை வலியுறுத்தும் இந்த மந்திரம், வெறும் பொருளற்ற மந்திரமாகவே ஆனதுதான் பெரிய முரண்பாடு.

## பயன்பட்ட நூல்கள்


| | | |
|---|---|---|
| 1. | **Rg Veda Samhita** | 1 to 7 volumes<br>Tr. H.H. Wilson with notes of Sayana<br>Nag Publishers, New Delhi 7. |
| 2. | **Women in Vedic age** | Shakuntala Rao Shastri, Bharatya Vidya Bhavan |
| 3 | **Women in Rg Veda** | Bhagavathi Saranvpadhyaya, Chand and Co. Pvt. Ltd., Delhi. |
| 4. | **The position of Women in Hindu Civilization** | Dr. Allekar, Mobilal Banansidas, Delhi. |
| 5. | **Who were the Shudras?** | Dr. B.R. Ambedkar. |
| 6 | மாணவ ஸமாஜ் (இந்தி) | ராஹுல் ஸாங்க்ருத்யாயன்,<br>லோக பாரதி பிரகாசன்,<br>அலாஹாபாத். |
| 7. | **Is the Veda Divine Revelation?** | Sundar Raj<br>Affiliated East West Press P. Ltd.<br>Madras. |

# ஆண் பெண் உறவும் தந்தைமுறை மரபும்

**டாக்டர் வி. சுதர்சன்**
**மானுடவியல் துறை,**
**சென்னைப் பல்கலைக்கழகம்**

பெண் அதிகாரம் பெறுதல், அதனைச் செயலாக்கும் முறைகள், ஜனநாயகத்திற்கும் ஆதிக்கத்திற்கும் இடையேயான அறிவியல் அடிப்படைகள் ஆகியன ஆண்-பெண் உறவு பற்றிய விவாதங்களில் முக்கிய பிரச்சனைகளாகக் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான வளர்ச்சித் திட்டங்கள் பெண்களை மகளாகவோ மனைவியாகவோ அல்லது தாயாகவோ ஆணுக்கு ஒரு பின்னிணைப்பாகவே கருதுகின்றன. ஆண்களின் நிலை உயரும்போது தாமாகவே (ஆணைச் சார்ந்து நிற்கும்) பெண்களின் நிலையும் உயர்ந்து விடும் என்று இந்த அமைப்பு முறையில் கருதிக் கொள்ளப்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயும், வெவ்வேறு சாதிகளுக்கு இடையேயும் உள்ள சமச்சீரற்ற அதிகார ஆதிக்க நிலையை இந்தக் கருத்து முற்றிலும் கவனிக்கத் தவறி விடுகிறது ஆணை மையமிட்ட கருத்தின் அடிப்படையில் இத்தகைய புரிதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதிகாரம் முகமைக்கு ஒரு கருவி (Power is instrument of Agency) தன்னளவில் பெண்ணின் தீவிர சக்தியாக முகமை பதிவு செய்து கொள்ளப்படும் தன்மையதாக உள்ளது. இந்தக் கருத்தின் உள்ளடங்கிய குறையைக் கருதிப் பார்க்காமலேயே, அடைய வேண்டிய சரியான நோக்கமாக முகமையை மீண்டும் பெறுதல் உள்ளது.

முகமை தூய நிலையில் தந்தை முறைமையில் எப்பொழுதுமே தன் விருப்பமாகக் காணப்படுவதில்லை பிற்போக்கு, வலதுசாரி அமைப்புகளில், பெண்களின் ஈடுபாடு பெருமளவு காணப்படுகிறது. இதற்கு, தந்தைமுறை ஆதிக்கத்தின் ஒப்புதல் விரைவாகக் கிடைப்பதாகத் தோன்றுகிறது. பெண்களின் முகமை யார்? எது? என்பதைப் பற்றியோ, அதன் உள்ளடக்கம் பற்றியோ, விழிப்புடன் இருப்பதற்குத் தேவை இருக்கிறது. 'தீ' திரைப்படத்திற்கு எதிராக எழுந்த 'சங்பரிவார்' அமைப்பின் எதிர்ப்புக்குரல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. பெண்ணுக்கு எல்லா வகையான அதிகார அளிப்பும் தருவது விரும்பத்தக்கதுதானா? என்ற வினாவை இது எழுப்பவல்லது.

பெண்ணியம் நம்மரபில் ஏற்கனவே உள்ளது என்ற வாதம், ஆண் பெண் உறவு நிலை பற்றிய கேள்விகள் எழுப்பப்படுவதை முன்கூட்டியே தடுப்பதோடு, பெண்ணிய ஆற்றல்களை, தனது குறுகிய நோக்கங்களுக்காகப்

பயன்படுத்திக் கொள்கிறது என்பது இந்நிலையில் கருதிப் பார்க்கப்பட வேண்டியதாக உள்ளது.

சங்பரிவார் அமைப்பில் ஏராளமான பெண்கள் சேர்ந்திருப்பது, சாத்வீ ரத்னபாரா மற்றும் உமாபாரதி போன்றோரின் இனவெறி வாய்வீச்சு மும்பாய், சூரத் நகரங்களில் நடந்த கலகங்களில் பெண்கள் பெருமளவு பங்கெடுத்துக் கொண்டது ஆகியனவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமில்லாமல் இருக்காது. இவை அரசியலில் பெண்கள் சமபங்கு வகிக்கிறார்கள் என்ற பொய்த்தோற்றத்தை அளிக்கின்றன. ஆனால் உண்மையில் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் சமநிலையளித்தல் என்ற போர்வையின்கீழ் தந்தைமுறையிலான மதிப்பீடுகளை வலுப்படுத்தவும், நிலைப்படுத்தவும் செய்கின்றன. தன்னைக் கேள்வி கேட்கும் சக்திகளை நிலையிழக்கச் செய்யவும் எதிர்த்துப் போரிடவும் வேத பிராமணிய சமயம் செயல்படுத்திய பழைய முறையையே, உண்மையில், இணைத்துக் கொள்ளுதல் ஆகும். இன்று 'சங்பரிவார்' இந்த முறையை, ஜனநாயக முறையிலானதும், பொதுவானதுமாகிய கலந்துரையாடலை அடக்குதற்கு இதே உத்தியைப் பயன்படுத்துகிறது.

இது நம்மை, பெண்களைக் கட்டுப்படுத்தும் வகைகளை முறைமைப் படுத்துவதும், ஆண்-பெண் உறவைச் ஜனநாயக முறைப்படுத்துவதுமான செயல்களைப் பற்றிய அடிப்படை கேள்விகளுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. ஆண்-பெண் உறவுகளைச் சரியாக முறைமைப்படுத்துதல் போன்று தோன்றும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், அத்தகைய முறைமைப்படுத்தலின் அடிப்படை பிரச்சனையின் வேர் போன்ற கேள்விகளை நேரடியாகச் சந்திக்கவில்லை (அதாவது ஆணாதிக்க மதிப்பீடுகளின்படி பெண்களைக் கட்டுப்படுத்துவது). பெண்கள் வீட்டுக்கு வெளியே வேலைக்குச் செல்லுதல், தேர்தல்களில் பங்குபெறுதல் போன்றவற்றில் ஈடுபடுவதில் இந்த முறை காட்டுவிக்கப்படுகிறது. பொதுவாக உள்ள உறவில் ஆதிக்கம் செலுத்துதல் கீழ்பட்டிருத்தல் எனற நிலையை இந்த நடவடிக்கைகள் எந்த வகையிலும் வினாவுவனவாக இல்லை என்பதே உண்மை. அண்மைக்காலத்து 'சங்பரிவார்' அமைப்பின் அறிக்கை ஒன்று, 'எல்லோருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும்' என்று கூறுவதோடு, பெண்களுக்கு அதிகப்படியாக சமையல் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. நவீனப்படுத்துதல் எந்த வகையிலும் ஜனநாயக முறையிலான ஆண்-பெண் உறவுக்கு உத்தரவாதமளிப்பதாக இல்லை.

ஆணாதிக்க மதிப்பீடுகள் தனிப்பட்ட நிலையிலும் குடும்பங்களிலும் ஆதிக்கம் செலுத்தும் அதே முறையில் சாதிய நிலையில் சமுதாயத்திலும் காணப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறை, வரதட்சணைக் கொலைகள் இவை நேரடியாகப் பெண்களைக் கட்டுப்படுத்துதலும் ஒழுங்குபடுத்துதலுமாகிய

நடவடிக்கைகளுக்கு நேரடித் தொடர்பு உடையன. பெரும்பாலும் சடங்குகள் அடங்கிய திருமணங்கள் வரதட்சணை முறையை வலுப்படுத்தின. வெளிநாட்டு ஆதிக்கம் பிராமணிய முறைத் திருமணங்களில் வரதட்சணை அளிப்பதை ஒரு முக்கிய சடங்காக நிலைப்படுத்தியது. மேலும் ஒரு சாதித் திருமணங்கள் வெகுவாக நடைபெறுதல் கலப்புத் திருமணங்களுக்கு எதிராகக் கூட்டு வன்முறையை ஒருவழியாக நிலைப்படுத்தின. இதில் மேலும் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் இது தந்தை முறை ஆதிக்கத்தின் ஒரு கிளை விளைவாகவே வந்துள்ளது. இதில் பெண்களுக்குத் துன்பம் அனுபவிப்பதைத் தவிர எந்தப் பங்குமில்லை.

இதன் மற்றொரு விளைவு என்னவென்றால் ஆண்மையை வெளிப்படுத்துதல், மேல்சாதி ஆண்கள், கீழ்ச்சாதி ஆண்களுக்கெதிராகத் தம் ஆண்மையை வெளிப்படுத்துவதோடு அது கீழ்ச்சாதியானுக்கு இல்லை என்பதையும் வற்புறுத்திக் காட்டுகின்றனர். அடிக்கடி குறிப்பிடப்படும் செய்தியானது மேல் சாதியினருக்கும், தலித்துக்களுக்கும் இடையிலேற்படும் மோதல்களின் போது தலித் பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு ஊர்வலம் விடப்படுவதோடு அவர்கள் ஆண்களின் கண் எதிரிலேயே பால்வினை வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதாகும். இது தலித்துக்களின் ஆண்மைக்கு விடப்படும் அறைகூவலைக் குறித்துக் காட்டுகிறது.

***(தமிழில்: டாக்டர் செயராமன்)***